# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 01 ஞாயிற்றுக்கிழமை (15.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 170





07

கொடூரமாக நிகழ்ந்த குமுதினிப் படுகொலை





23

தற்கொலைகளை தவிர்ப்போம்





25

யாழ்ப்பாண மக்கள் ரொம்பப் பாவம்





27

அம்மா என்ன செய்யப் போகிறார்?


# பேச்சின் போக்குத் திருப்தியாக இல்லை இந்தியாவுக்கு விளக்கியது கூட்டமைப்பு

## 6 கட்டச் சந்திப்புகளில் கண்டது ஏதுமில்லையாம்

கொழும்பு, மே 15

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் நோக்கில் அரசுடன் நடத்திவரும் பேச்சு நகர்ந்து செல்லும் போக்கு திருப்திகரமாக இல்லை என்று இந்தியாவுக்கு விளக்கி உள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இதுவரை பேச்சின் 6 சுற்றுக்கள் முடிவடைந்துவிட்டன. எனினும், இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை. சிறுசிறு விடயங்களுக்குக் கூடத் தீர்வைக் காணாமல் காலத்தை இழுத்தடிக்கும் போக்கையே அரசு கடைப்பிடிக்கிறது. தலைமையுடன் பேசி முடிவு தெரிவிப்பதாக முதல் சுற்றுக்களில் கூறப்பட்ட விடயங்களுக்கே இதுவரை தீர்க்கமான பதிலை அரசு கூறவில்லை என்கிற விடயங்களை இந்தியாவுக்கு விளக்கி உள்ளோம் என்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

கடந்த வியாழக்கிழமை இலங்கை அரசுடன் 6 ஆம் கட்டப் பேச்சை முடித்துக்கொண்ட கூட்டமைப்பு பேச்சுக்குழு, நேரடியாக இந்தியத் தூதரகம் சென்று தூதர் அசோக்

(29 ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ், காணி அதிகாரங்களையும் வழங்குவதற்கு டில்லி வலியுறுத்து

## இறுக்கமான செய்தியோடு வருகின்றது மூவரணி

கொழும்பு, மே 15

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, அதற்கு மேலாகச் சென்று அதிகாரப் பகிர்வை வழங்குவதற்குத் தயாராகி வருவதாக அரசு கூறிவரும் நிலையில், அப்படி ஒரு தீர்வில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களும் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்த உள்ளது. விரைவில் கொழும்பு வரவுள்ள இந்திய உயர் மட்டக் குழு இந்த விடயத்தை இலங்கை அரசுக்குத் தெளிவுபடுத்தும் என்று புதுடில்லியில் ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (29 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் கூட்டறிக்கையில் முரண்பாடு சாடுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

அரசுக்கும்- தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆறாம் கட்டப் பேச்சுத் தொடர்பாக அரசு சார்பில் விடுவிக்கப்பட்ட கூட்டறிக்கையில் முரண்பாடு காணப்படுவதாக பேச்சில் பங்குபற்றுபவர்களில் ஒருவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வு செய்வது தொடர்பாகவே அரசு கூட்டமைப்புப் பேச்சில் ஆராயப்பட்டது. அடுத்த கட்டத்தில் அந்த விடயம் குறித்துப் பேச இணக்கம் காணப்பட்டது. இதற்கு மாற்றீடாக செனட் சபை அமைப்பது குறித்தும் பேசப்பட்டது. அதற்கான ஆவணமும் கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டறிக்கையில் நாம் தெரிவித்த விடயங்கள் குறிப்பிடப்படவில்லை. அதிகாரப் பகிர்வு குறித்தே பேச்சு நடத்தினோம். அதற்கு மாற்றீடாக செனட்சபையை ஏற்படுத்துவது

(32 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்பு நாளை ராகு - கேது பெயரும் வேளையில்

சென்னை, மே 15

ராகு - கேது பெயரும் நேரத்தில் - நாளை திங்கட்கிழமை முற்பகல் 9.55 மணிக்கு செல்வி ஜெயலலிதா ஜெயராம் முதலமைச்சராகப் பதவியேற்க விருக்கின்றார்.

நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெற்ற அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா இன்று முதலமைச்சராகப் பதவியேற்பார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் நாளை காலை சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் நடக்கும் நிகழ்வில் ஜெயலிதா பதவியேற்கிறார்.

காலை 9.55 மணிக்கு இடம்பெறும் ராகு - கேது பெயர்ச்சியின் போது இந்தப் பதவியேற்பு இடம்பெறும்.

குஜராத் முதல்வர் உட்பட முக்

(29 ஆம் பக்கம் பார்க்க)

### நிபுணர் குழு அறிக்கை குறித்து

## பிரதமர், அமைச்சர்களுடன் ஆராய பீரிஸ் இன்று இந்தியா பயணம்

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக இந்தியாவுடன் கலந்துரையாடுவதற்காக வெளிவிகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இன்று இந்தியா பயணமாகிறார்.

மூன்று நாள்கள் இந்தியாவில் தங்கியிருக்கும் அமைச்சர், பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் பி.சிதம்

(29 ஆம் பக்கம் பார்க்க)

## விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 9 பேரைக் காணவில்லை

மட்டக்களப்பு, மே 15

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த ஒன்பது முன்னாள் போராளிகளைக் காணவில்லை

(29 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பதற்றமான நிலை; பொலிஸ் மா அதிபர் அங்கு விரைவு

மட்டக்களப்பு, மே 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 72 மணி நேரத்தில் இடம்பெற்ற இரு வேறு 'துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் எழுந்துள்ள பதற்ற நிலையைத் தணிப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய நேற்று மட்டுநகருக்கு அவசர விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

கடந்த புதன்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினரும் பிரதி

(29 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கச்சேரியடி விடுதியில் குடும்பஸ்தர் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், கச்சேரியடி, சோமசுந்தரம் வீதியிலுள்ள விடுதி ஒன்றில் இருந்து மர்மமான முறையில் மரணமான இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் யாழ்ப்

(29 ஆம் பக்கம் பார்க்க)


எந்தவொரு சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சியறைகளிலும் நீங்கள் கொள்வனவு செய்யும் கைனடிக் சப்பாரி (Kinetic Safari) மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7000 பெறுமதியான DVD பிளேயர் இலவசம்.





இன்றே விரையுங்கள்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389

கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். 021 224 0555

ஆலடிச் சந்தி, மானிப்பாய். 021 225 5343

பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 4937

கண்டி வீதி, சாவகச்சேரி. 077 9508957

சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
15 மே 2011 ஞாயிற்றுக்கிழமை

# மும்பைக்கு மறுபடியும் தோல்வி



மும்பை, மே 15

அசைக்க முடியாத அணியாக இதுவரை வந்த மும்பை இந்தியன்ஸ் இப்போது ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. தொடர்ந்து இரண்டாவது தோல்வியை அவர்கள் நேற்றுக் கண்டனர்.

மாஸ்டர் பட்ஸ்மன் டெண்டுல்கர் பொறுப்புடன் ஆடினாலும் அணியின் ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் கைவிட 10 ஓட்டங்களால் டெக்கான் சார்ஜர்ஸ் அணியிடம் தோல்வியடைந்தது மும்மை இந்தியன்ஸ் அணி.

சொந்த மண்ணாலும் அரங்கு முழுவதும் நீல நிறமாகப் படர்ந்து கிடந்த ரசிகர்களாலும் மும்மையின் தோல்வியைத் தடுக்க முடியவில்லை.

நாணயச் சுழற்சியில் சுண்டிய நாணயம் மேலே பறந்து கொண்டிருந்த கமெராவில் பட்டு வீழ்ந்த போது அதிர்ஷ்டம் சங்ககார பக்கம் இருந்தது. துடுப்பாட்டத்தைத் தேர்ந்தெடுத்தார் அவர்.

ஆரம்பம் என்னவோ மும்பைக்கு அசத்தலாகத்தான் இருந்தது. இங்கிலாந்து வீரர் லம் இந்த ஆட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். அவர்தான் துடுப்பாட்டத்தை ஆரம்பித்தார்.

மலிங்கவின் இரண்டாவது பந்து ஜோக்கர். தடுக்க முயன்ற லம்பின் மட்டையைத் தாண்டிப் புகுந்து நடுவிக்கெட்டைத் தகர்த்தது பந்து. அடுத்து ஜோடி சேர்ந்த சொஹாலும் சங்ககாரவும் பொறுமையுடன் ஆடி விக் கெட் சரிவை நிறுத்தி ஓட்டங்களைச் சேகரித்தனர்.

சொகால் 2 சிக்ஸர்களும் சங்ககார ஒரு சிக்ஸரும் ஒரு பவுண்டரியும் அடித்தனர். டவான் ஆட்டமிழப்பின்றி 2 பவுண்டரி, ஒரு சிக்ஸர் சகிதமாக 18 பந்துகளில் 27 ஓட்டங்கள் குவித்தார். சிப்பிலி, கிறிஸ்டியன், டவான், மிஷ்ரா அகியோரும் தம் பங்குக்கு ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 135 ஓட்டங்களைப் பெற்றது அணி.

குல்கர்ணி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மலிங்க, ஹர்பஜன் சிங், பொலாட் ஆகியோர் தலா ஒன்று கொய்தனர்.

136 என்ற இலக்கை விரட்டிய மும்மை அணிக்கு, அந்த இலக்கு ஒன்றும் கடினமானது அல்ல. ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் கருத்துத் தெரிவித்த டெண்டுல்கர், 140 அல்லது 150 ஓட்டங்கள் என்பது அடைந்துவிடக்கூடிய இலக்கு என்று தெரிவித்திருந்தார். ஆனால், அவர் எதிர்பார்த்ததுக்கு மாறாக எல்லாமும் அமைந்துவிட்டது.

டெண்டுல்கரைத் தவிர வேறு எவரும் துடுப்பாட்டத்தில் சோபிக்கத் தவறிவிட்டனர். ஒரு பக்கத்தில் விக்கெட்டுக்கள் சீராகச் சரிந்து கொண்டிருந்தன. அதனால் அதிரடியைக் கைவிட்டு கடும் நிதானத்தைக் காட்டிய டெண்டுல்கர் 3 பவுண்டரிகளுடன் 42 பந்துகளில் 37 ஓட்டங்களை ஒருவாறு சேகரித்தார்.

பிலிசாட், ராயுடு, சர்மா, சைமன்ஸ் எவரும் ஒற்றை இலக்கத்தைத் தாண்டவில்லை. சுமன், பொலாட், ஹர்பஜன் சிங் ஆகியோர் முறையே 14, 24, 17 ஓட்டங்களைப் பெற்றனர். இறுதியில் பொலாட் மட்டும் கொஞ்சம் அதிரடி காட்டினார். 13 பந்துகளில் 3 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 24 ஓட்டங்கள் குவித்தார்.

டெக்கான் சார்ஜர்ஸ் 18 உதிரிகளை அள்ளி வழங்கிய போதும் 20 ஓவர்களில் மும்பை அணியால் 125 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. அதற்கு 8 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. ஆனந்த ராஜன் 3 விக்கெட்டுக்களையும் இசாந் சர்மா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி இருந்தனர். (உ)

# கெயிலின் அதிரடியுடன் பெங்களூர் வெற்றி




பெங்களூர், மே 15

ஐ.பி.எல். போட்டியின் இந்தப் பருவ காலத்தில் விலை போகமல் இருந்த மேற்கிந்தியத் தீவுகள் வீரர் கிறிஸ் கெய்ல் மீண்டும் ஒருதடவை முழக்கமிட, பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி கொல்கத்தா நைட் ரைடர்ஸுக்கு எதிராக வெற்றியை வாரிச் சுருட்டியது.

பெங்களூர் அணிக்கு சொந்த மைதானம் என்பதும் சாதகமாகிப் போனது. சின்னச்சாமி மைதானத்தில் ஆட்டம் ஆரம்பமான போதே மப்பும் மந்தாரமுமாக இருந்தது. 11ஆவது ஓவரில் 'சோ'வென மழை பிடித்துக் கொள்ள, ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

நீண்ட நேரம் மழை கொட் டித் தீர்த்ததால், ஆட்டம் 13 ஓவர் களுக்கு மட்டுப் படுத்தப்பட் டது. கொல்கத்தா அணியில் வழக்கமாக அதிரடி காட்டும் முன்வரிசை ஆட்டக்காரர் கள் எவரும் சோபிக்கவில்லை. ஆபத்தான வீரராக அறியப்பட்ட யூசுப் பதான் மட்டும் 6ஆவது ஆட்டக்காரராக் களமிறங்கி விளாசினார். 3 சிக்ஸர்களும் 2 பவுண் டரி களுமாக 24 பந்துகளில் 36 ஓட்டங்களை விளாசினார் பதான். லங்கவெட்டின் பந்தில் மிதுனிடம் பிடிகொடுக்கும்வரை ஓட்டக் குவிப்புயந்திரமாகவே களத்தில் நின்று கொண் டிருந்தார்.

அணியில் திரிவேதியும் கலிஸும் மட்டும் முறையே 19 ஓட்டங்களையும் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். 13 ஓவர்களில் கொல்கத் தாவால் 89 ஓட்டங்கள் மட்டுமே பெற முடிந்தது. லங்கவெல்ட் இரண்டு விக் கெட்டுக்கள் வீழ்த்தினார். சகீர்கானும் அரவிந்தும் தலா ஒன்றைச் சரித்தனர். மழை வந்து ஆட்டத்தைக் குழப்பி யதால் டக்வேர்த் லூயிஸ் முறை உள்ளே புகுந்தது. அதனால் 13 ஓவர்களில் 103 ஓட்டங்கள் பெங்களூர் அணிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

ஆரம்ப ஆட்டக்காரர்களாக கெய்லும் பெமேர்பச்சும் களம் இறங்கினர். இந்த ஐ.பி.எல். பருவத்தில் எந்த அணியாலும் வாங்கப்படாதவர் கெய்ல். கடந்த பருவத்தில் அவரது ஆட்டம் சிறப்பாக இல்லாத காரணத்தால் எந்த அணியும் அவரைச் சீண்டவில்லை. எனினும் கடைசியில் கொல்கத்தா அணி, அவரை நேரடியாக ஒப்பந்தம் செய்து அழைத்தது.

அந்த நன்றிக்கடனோ என்னவோ, இந்தப் பருவத்தில் கடந்த சில ஆட்டங்களில் போட்டு வாங்குகிறார் கெய்ல். அவர் ஆடினால் அதிரடிக்குக் குறைவிருக்காது என்னும் அளவுக்கு இப்போது எதிர்பார்ப்பு எகிறிவிட்டது. அவரும் ஏமாற்றுவது இல்லை. நிலைத்து நின்று ஆடுவது பற்றிச் சிந்திப்பதில்லை. ஒரே அதிரடிதான்.

பெங்களூரின் நேற்றைய ஆட்டமும் அப்படித்தான் ஆரம்பித்தது. பிரட் லீயின் முதல் இரு பந்துகளுமே எல்லைக் கோட்டை எட்டிப் பிடித்தன. கெய் லின் முழக்கம் தொடர்ந்தது. பன்னிரண்டே பந்துக ளில் 6 பவுண்டரிகள் 2 சிக்சர்கள் அடங்கலாக 36 ஓட்டங்கள் விளாசினார். மட்டை வீச்சு வேகம் (SR) 316.66 என்று ஆச்சரியக்குறி காட்டியது.

பெங்களூர் அணியின் வெற்றி இந்தா அந்தா என்று வந்துவிடும் என்று வேடிக்கை காட்டிக் கொண்டிருந்த கெய்லை ஒரு வழியாக வெளியேற்றினார் பிரட் லீ. ஆனால் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியவில்லை. அதிரடி முழக்கங்கள் மூலம் அணிக்கு பலமான அடித்தளத்தை கெய்ல் ஏற்படுத்தி விட்டுப் போக, பந்துக்கு ஒன்று என்ற கணக்கில் பின்னால் வந்தவர்கள் ஓட்டங்களை ஒருவாறு பெற்று, 3 பந்து மீதமிருக்கையிலேயே வெற்றியை வாரிச் சுருட்டினார்கள்.

பொமேர்பச் 14 பந்துகளில் 16, வினோத் கோலி 15 பந்துகளில் 15, டி வில்லியர்ஸ் 13 பந்துகளில் 13, கைவ் 13 பந்துகளில் 15, என்று ஓட்டங்களைப் பெற வெற்றி வந்து சேர்ந்தது.

ஜக் கலிஸ் மட்டும் 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். லீத் உனாட்கட், அப்துல்லா ஆகியோர் தலா ஒன்று சரித்தனர். கெய்ல் போட்டு வாங்கியதில் 3 ஓவர்கள் வீசிய லீயின் சராசரி [illegible] 6 விக்கெட்டுக்களை இழந்து, 4 விக்கெட்டுக்களால் வெற்றியை ருசித்தது பெங்களூர் அணி. (உ)

## அணிகளின் நிலைகள்...

DLF INDIAN PREMIER LEAGUE

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 12 | 08 | 03 | 0 | 1 | + 0.849 | 17 |
| சென்னை சூப்பர் கிங்ஸ் | 12 | 08 | 04 | 0 | 0 | + 0.544 | 16 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 08 | 04 | 0 | 0 | + 0.245 | 16 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 07 | 05 | 0 | 0 | + 0.403 | 14 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 05 | 06 | 0 | 1 | - 0.587 | 11 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 11 | 05 | 06 | 0 | 0 | - 0.338 | 10 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 12 | 05 | 07 | 0 | 0 | - 0.628 | 10 |
| புனே வாரியர்ஸ் | 11 | 04 | 07 | 0 | 0 | - 0.003 | 08 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 12 | 04 | 08 | 0 | 0 | - 0.363 | 08 |
| டெக்கான் சார்ஜஸ் | 11 | 03 | 08 | 0 | 0 | - 0.177 | 06 |

## இன்றைய ஆட்டம்

- கிங்ஸ் யீனா பஞ்சாப் எதிர் டெல்லி டெயாடெவில்ஸ் (மாலை 4 மணி)
- கொச்சி தஸ்கர்ஸ் கேரளா எதிர் ராஜஸ்தான் ரோயல்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்


- சேவாக் – டெல்லி (11 ஆட்டங்கள் 424 ஓட்டங்கள்)
- கெயில் – பெங்களூர் (6 ஆட்டங்கள் 398 ஓட்டங்கள்)
- ஹஸி – சென்னை (10 ஆட்டங்கள் 393 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (11 ஆட்டங்கள் 26 விக்கெட்டுக்கள்)
- முனாப் பட்டேல்– மும்பை (11 ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)
- பொலஞ்சர் – சென்னை (9 ஆட்டங்கள் 14 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னும் நம்பிக்கை உள்ளது -கில் கிறிஸ்ட்

மும்பை, மே 15

''அடுத்து வரும் ஆட்டங்களில் இன்னும் வேகமாகவும் திறமையாகவும் செயற்பட்டால், அடுத்த சுற்றுக்கு செல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது.''

- இப்படி பஞ்சாப் அணித் தலைவர் கில்கிறிஸ்ட் தெரிவித்தார்.

நான்காவது ஐ.பி.எல்., தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, இதுவரை பங்கேற்ற 11 போட்டிகளில் 5இல் மட்டுமே வெற்றி பெற்று 10 புள்ளிகள் பெற்றுள்ளது. அடுத்த 3 போட்டிகளிலும் அதிக ஓட்டங்கள் பெற்று வெற்றி பெறும் பட்சத்தில், அடுத்த சுற்றுக்கு முன்னேற வாய்ப்புள்ளது.

இதுகுறித்து பஞ்சாப் அணியின் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் கூறியதாவது:-

கொச்சி அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஜெயவர்த்தனா, மெக்கலம் களத்தில் இருந்தபோது, எப்படியும் 200 ஓட்டங்களை எட்டிவிடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் எங்கள் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர். களத் தடுப்பும் அசத்தலாக இருந்ததால் ஆட்டத்தின் போக்கை மாற்றி மீண்டு வந்தோம்.

அதே வேகத்தோடு துடுப்பாட்டத்திலும் சிறப்பாகச் செயற்பட்டோம். ஷான் மார்ஷ் தான் ஆதிக்கம் செலுத்துவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால், தினேஷ் கார்த்திக் அபார திறமையை வெளிப்படுத்த, வெற்றி எளிதானது.

அடுத்து வரும் மூன்று ஆட்டங்களிலும் சிறப்பான வெற்றி கிடைக்கவேண்டும். இதற்கு, கடந்த போட்டிகளை விட இன்னும் கூடுதல் வேகத்துடனும் விளையாட வேண்டும். இது சரியாக நடந்தால், எப்படியும் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது - இவ்வாறு கில் கிறிஸ்ட் கூறினார்.

கொச்சி அணிக்கு எதிரான வெற்றி குறித்து பஞ்சாப் அணி வீரரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவருமான தினேஷ் கார்த்திக் கூறுகையில், ''ஐந்து ஆட்டங்களில் அடைந்த தோல்வி காரணமாக சோர்ந்து இருந்தோம். அணி உரிமையாளர் பிரீத்தி ஜிந்தாதான் எங்களுக்கு உற்சாகம் தந்தார். இதன் காரணமாகத்தான் மீண்டு வருகிறோம். கொச்சி அணிக்கு எதிரான போட்டியில் வல்தாட்டி, கில்கிறிஸ்ட்டிடம் நல்ல துவக்கத்தை எதிர்பார்த்தோம். ஆனால் எதிரணி பந்துவீச்சில் அசத்தினர். இந்த நிலையில் சூழ்நிலைக்கேற்ப சிறப்பாக விளையாட முயற்சித்தேன். கடைசியில் வெற்றியும் கிடைத்தது'' என்றார்.

(உ)

# மிச்செல் ஜோன்சன் இரகசியத் திருமணம்

மெல்பேர்ன், மே 15

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிச்செல் ஜோன்சன் தனது தோழியை இரகசியமாக திருமணம் செய்து கொண்டார் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

கடந்த வாரம் நடைபெற்ற இந்த ரகசிய திருமணத்திற்குத் தனது தாயாரைக்கூட அவர் அழைக்கவில்லை என்று 'தி டெய்லி கிராப்' செய்தி வெளியிட்டுள்ளது. இந்தத் திருமண நிகழ்ச்சிக்கு 50 பேர் அழைக்கப்பட்டனர். ஆனால் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் யாரும் அழைக்கப்படவில்லை.

29 வயதான ஜோன்சன் வாரியர்ஸ் அணியில் விளையாடுவதற்காக மேற்கு ஆஸ்திரேலியாவுக்கு 2008ஆம் ஆண்டு வந்துள்ளார். அப்போது கராத்தே சாம்பியன் ஜெஸிகாவுடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டுள்ளது.

ஜெஸிகாவை திருமணம் செய்து கொண்டதை அவர் பேஸ்புக்கில் செவ்வாய்க்கிழமையன்று வெளியிட்டுள்ளார். திருமணத்திற்கு ஜோன்சன் தனது தாயாரை அழைக்காததன் மூலம் அவரை அவமதித்துவிட்டார் என அவரது உறவினர்கள் சிலர் குறை கூறியுள்ளனர்.

(உ)

# சச்சினுக்கு மேலும் ஒரு விருது



மும்பை, மே 15

இந்திய அணியின் துடுப்பாட்ட மன்னன் சச்சின் டெண்டுல்கருக்கு, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) சார்பில், 'பாலி உம்ரிகர்' விருது வழங்கப்பட உள்ளது.

பி.சி.சி.ஐ., சார்பில் எதிர்வரும் 31ஆம் திகதி மும்பையில் இதற்கான விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கிரிக்கெட்டில் சாதித்த வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. தவிர, 28 ஆண்டுகளுக்குப் பின் இந்திய அணி, உலக கோப்பை வென்றதையும் இந்தியக் கிரிக்கெட் சபை கொண்டாட உள்ளது.

இது குறித்து பி.சி.சி.ஐ., செயலர் சீனிவாசன் கூறியதாவது:-

கடந்த 21 ஆண்டுகளாக கிரிக்கெட்டில் சாதித்து வருபவர் இந்திய அணியின் துடுப்பாட்ட சாதனை வீரர் சச்சின் (வயது 38). இவர் கடந்த பத்தாவது உலககோப்பை தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்தார். தவிர, கடந்த ஆண்டில் பங்கேற்ற 10 டெஸ்ட் போட்டிகளில், ஓர் இரட்டை சதம், ஐந்து சதம் உட்பட மொத்தம் 1064 ரன்கள் எடுத்துள்ளார். 12 ஒரு நாள் போட்டிகளில் ஓர் இரட்டைசதம் உட்பட 695 ரன்கள் எடுத்துள்ளார்.

இவருக்கு 2009-2010 ஆண்டில் சிறந்த விளையரட்டு வீரராக விளங்கியதற்காக 'பாலி உம்ரிகர்' விருது வழங்கப்படுகிறது. இதற்கான கோப்பையுடன், சச்சினுக்கு ஐந்து லட்ச ரூபா பணமும் பரிசாக வழங்கப்படும்.

இத்துடன் ஜி.கே.நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கப்படுகிறது. இதற்கான அறிவிப்பு மே 27ஆம் திகதி வெளியாகும். இந்த விருது பெறுபவர்களுக்கு வெற்றிக் கிண்ணத்துடன் ரூ. 37.5 லட்சம் கிடைக்கும். இத்துடன் மனிஷ் பாண்டே, அபிமன்யு மிதுன் போன்ற பல வீரர்களுக்கும் விருது வழங்கப்படுகிறது -என்று சீனிவாசன் தெரிவித்தார்.

(உ)

# பயிற்சியாளர் ஆஸிக்கு நியமனம்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான கிரேக் மெக்டார்மெட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிவிப்பை ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் கடந்த வியாழக்கிழமை வெளியிட்டுள்ளது. இதேபோல் ஏற்கெனவே உதவி பயிற்சியாளராக உள்ள ஜஸ்டின் லாங்கரின் பதவிக் காலம் மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் பதவிக்கு தென்னாபிரிக்காவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான டொனால்டுக்கே அதிக வாய்ப்புள்ளதாகக் கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(15)

# 160 ஓட்டங்களுக்குள் சரிந்தது பாகிஸ்தான்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் 160 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. மேற்கிந்தியத் தீவுகள் வீரர் தேவேந்திர பிஷூ 4 விக்கெட்டுகளையும், ரவி ராம்பால் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தி பாகிஸ்தான் அணியைச் சரித்தனர்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் போட்டியின் முதல் ஆட்டம் வியாழக்கிழமை தொடங்கியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, இரண்டாவது நாளான வெள்ளிக்கிழமை 226 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.


தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சிக் காத்திருந்தது. ஹபீஸ் 4 ஓட்டங்களில் ராம்பாலின் பந்துவீச்சில் போல்டு ஆனார். டெபிக் உமர் 19, தலைவர் மிஸ்பா உல் ஹக், ஆசாத் ஷபிக் ஆகியோர் தலா 2 ஓட்டங்களில் வெளியேறினர். அசார் அலி 34 ரன்களில் சமி பந்துவீச்சில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். உமர் அக்மல் 33 ரன்கள் எடுத்தார்.

வஹாப் ரியாஸ் 5 ஓட்டங்களில் வெளியேற பாகிஸ்தானின் முதல் இன்னிங்ஸ் 160 ரன்களில் முடிவுக்கு வந்தது. ரஹ்மான் 104 பந்துகளில் 40 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். மேற்கிந்தியத் தீவுகளின் இளம் சுழற்பந்துவீச்சாளர் தேவேந்திர பிஷூ அசத்தலாக பந்துவீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியில் ஸ்மித் 1 ஓட்டத்தில் வெளியேறினார். பிராவோ 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இரண்டாவது நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 விக்கெட் இழப்புக்கு [illegible] கள் எடுத்துள்ளது. சிம்மன்ஸ் 18 ஓட்டங்களுடனும், [illegible] 3 ஓட் டங்களுடனும் களத்தில் இருக்கின்றனர்.

(உ)

# மன்னிப்புக் கோரினார் வோர்ன்




ஜெய்ப்பூர், மே 15

சர்ச்சைகளின் அரசனான ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் ஷேன் வோர்ன், ராஜஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் செயலாளரிடம் மன்னிப்புக் கோரினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியிடம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தோற்றது. இதன் பின்னர் ஊடகங்களிடம் பேசிய வோர்ன், ஆடுகளம் மோசமாகத் தயார்ப்படுத்தப்பட்டிருந்தது என்று தோல்விக்கு ஆடுகளத்தின் மீது குறை கூறினார்.

இது [illegible]டர்பில் ராஜஸ்தான் கிரிக்கெட் வாரியத்[illegible] செயலாளரை அவர் தரக்குறைவாகத் திட்டினார் என்றும் சர்ச்சை எழுந்தது இதனை அடுத்து இந்தியக் கிரிக்கெட் சபையிடமும் ஐ.பி.எல். நிர்வாகத்திடமும் ராஜஸ்தான் கிரிக்கெட் வாரியம் முறையிட்டது.

இந்த நிலையில் ராஜஸ்தான் கிரிக்கெட் வாரியச் செயலாளரிடம் வோர்ன் மன்னிப்[illegible] கோரினார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ''அவர் மீது ஒழுங்கு நடவடிக்கைக் கு[illegible] சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடிவு செ[illegible]துள்ளது. அதேநேரத்தில் வோர்னும் தன[illegible] செயலுக்காக மன்னிப்புக் கோரியுள்ளார்'' என்று ராஜஸ்தான் அணியின் தலைமை அதிகாரி அறிவித்[illegible]ார்.

(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CAS எலக்ரோனிக் டிஜிற்றல் தராசுகள்

உலகப் பிரசித்தி பெற்றதும் அரசாங்க அங்கீகாரமும், ஒரு வருட WARRANTY உத்தரவாதமும் உள்ள CAS 15 கிலோ எலக்ரோனிக் டிஜிற்றல் தராசு வகைகள் விஷேட விலைக்கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.

அபிராமி எலக்ரிக்கல்ஸ் பக்க வீதி,
62/34,ஸ்ரான்லி பக்க வீதி,
யாழ்ப்பாணம்.
**தொலைபேசி:2227989**


## மரண அறிவித்தல்

### தியாகராஜா கருணீசன்



கட்டுடையைப் பிறப்பிட மாகவும், பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா கருணீசன் கடந்த (13.05.2011) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருமகளின்(ஆசிரியை, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா-மனோன்மணி தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெகதீசன், சோதீசன், குணதீசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
திருமகள் கருணீசன்(மனைவி)
குடும்பத்தினர்.
(4230)

## முயல் இறைச்சியுடன் சென்றவர் சிக்கினார்

தென்மராட்சி, மே 15

கிளாலிப் பகுதியில் தடம்வைத்துப் பிடித்த முயலின் இறைச்சியைக் கொண்டு வந்த நபரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த நபரை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்த போது வழக்கை விசாரித்த நீதிவான் அவருக்கு 3ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

(ஓ-207)


## தேவை

I)GRAPHICS DESIGNER & PAGE PLANER
II)வாகன சாரதி.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
கொனிக்கா கலர் லாப்
14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P-0772349933
email:- konicactp @ gmail.com

## விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ சேர்விஸ் போடும் கொம்பிறஷர், கைபிறஷர் பம் மற்றும் அனைத்து உபகரணங்களும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 209, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். T.P 0778499171
(4236)

## துரை டிஜிற்றல் கலர் லாப் [கரிசன்]

சகல விதமான படங்களையும் 20 நிமிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்

இல.41, பிரதேச சபை முன்பாக, திருநகர் வீதி (கச்சேரி அருகில்), கிளிநொச்சி.

## வீடு வாடகைக்கு

நல்லூரர் இல.5, பண்டாரக்குளம் ஒழுங்கை மேல்மாடி வீட்டில் கீழ் வீடு 2 அறை, Attach Bath, Kitchen (Gas only) 6 மாத வாடகைக்கு உண்டு. நேரில் வரவும்
தொடர்பு - 0776401699.


## காரிருளில் ஐந்தாண்டு




### செல்வி லாவண்யா மாணிக்கம்

(யசோ-உயர்தர மாணவி)



புன்னகை பூத்த வதனம் பூப்போல விரிந்த உள்ளம்
பட்டாம் பூச்சியாய் பறந்தவள்-நீ
பாதியில் பிரிந்ததேனோ
எத்தனை ஆசைகள் கனவுகள் கண்டவள்- நீ
ஆசைகள் நனவாகுமுன் காலனவன்
சடுதியாய் கவர்ந்து சென்றானே
மனதால் அழுகின்றோம் ஏங்கித்தவிக்கின்றோம்
அன்புள்ளம் கொண்ட எம் இனிய யசோவே
ஆண்டுகள் ஐந்து சென்றாலும்- உன்
புன் சிரிப்பும் பேச்சும்
எம் மனத்தை விட்டு என்றும் நீங்காது

"லாவண்யம்"
614/3, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (49,22,27)

கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கும்
குடும்பத்தினர்.






## மரண அறிவித்தல்

### திருமதி மங்கையர்க்கரசி நமசிவாயம்

(புங்குடுதீவு-05, கொக்குவில் கிழக்கு)



புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்காலிகமாக 43/1, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கில் வசித்து வந்தவருமான திருமதி மங்கையர்க்கரசி நமசிவாயம் நேற்று (14.05.2011)சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் (ஸ்தாபகர், புங்குடுதீவு சித்திவிநாயகர் மகாவித்தியாலயம், ஸ்தாபகர், புங்குடுதீவு இருபிட்டி பெரிய புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், இயக்குநர், புளியடித்துறை- நயினாதீவு மோட்டார் படகு போக்குவரத்து சேவை, புங்குடுதீவு, இருபிட்டி உப தபாலகத்தையும் திறந்துவைத்தவர்)- வேலாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம்(மலேசியா)- அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நா.ஆ.நமசிவாயத்தின் (புங்குடுதீவு தீடீர் மரண விசாரனை அதிகாரி, சமாதான நீதிபதி, மக்கள் குழுத் தலைவர், தீவுத் தொகுதி ப.நோ.கூ. சங்கங்களின் உத்தியோகபற்றற்ற மேற்பார்வை அதிகாரி, ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், பரீட்சைத் திணைக்களம் கொழும்பு) அன்பு மனைவியும், பிரேம்குமார்(ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர், புங்குடுதீவு திடீர் மரண விசாரணை அதிகாரி), சத்தியகுமார்(பிரான்ஸ்), மோகனகுமார்(பிரான்ஸ்), சுரேஷ்குமார்(முகாமைத்துவ உதவியாளர், குடிவரவு, குடியகல்வு திணைக்களம், கொழும்பு)தேவிகா(திருமண, பிறப்பு, இறப்பு பதிவாளர், புங்குடுதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவமலர்(ஆசிரியை, கோண்டாவில் இந்து ம.வி), சிவகௌரி(பிரான்ஸ்), கலாரஞ்சி(பிரான்ஸ்), கலாராணி(ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு), ஸ்ரீகாந்தன்(நகர அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மினாட்சி(இளைப்பாறிய ஆசிரியை, புங்குடுதீவு சித்திவிநாயகர் ம.வி), கனகரத்தினம்(இளைப்பாறிய வைத்திய அதிகாரி, வத்தேகம), பர்வதபத்தினி(பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, கார்த்திகேசு (வடபிராந்திய முகாமையாளர், இலங்கை பால் சபை, யாழ்ப்பாணம்), சிவகாமிபிள்ளை (மலேசியா), சோமாஸ்கந்தன்(உப. தபாலதிபர், இருபிட்டி, புங்குடுதீவு), சிவயோகம்மா, நடராசா(தலைமைப் பரிசோதகர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், யாழ். மாவட் டம்), சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் தடாதகைபிராட்டி (இளைப்பாறிய ஆசிரியை, வத்தேகம) காலஞ்சென்றவர்களான சிவகௌரி, பொன்னம்பலம்(மலேசியா), முருகேசு(உடையார் கிராமத் தலைவர், தீடீர் மரண விசாரணை அதிகாரி, சமாதான நீதிவான், புங்குடுதீவு), சிங்கராசா(FOREMAN கட்டடத் திணைக்களம், அனுராதபுரம்), சிந்துராசா (பிரபல வர்த்தகர், கொழும்பு), செல்லம்மா(கனடா), முத்துக்குமாரு(பன்னாட்டு அரச மொழி பெயர்ப்பாளர், சரவணை), ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுபராஜாவின் (மாவட்ட மேலதிக பதிவாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்) பெரியம்மாவும் லோகபிரசாத்(மருத்துவ பீடம், பல்கலைக்கழகம், கொழும்பு), பிரவீணா, யதுர்சன், அர்சினி, நிர்சினி, அனுசன், தனுசா, விஜித்தா, கிசாயினி, துசாயினி, சாயுகன், துஷாந், நிதுசாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2011) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43/1, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.
(4237)

தகவல்:
மயில்வாகனம் ஸ்ரீகாந்தன்,
(மருமகன்- தாவடி தெற்கு.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வன்னி மக்களின் தேவைகள் கிடைக்க சேவைகள் எப்போது?

இரண்டு வருடங்களுக்கு முந்திய மே மாதத்தில், இதே காலப்பகுதியில், வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற கொடிய போரில் சிக்குண்டு, சாவு வந்துவிடுமோ அல்லது அதிலிருந்து தப்ப அதிர்ஷ்டம் இருக்குமோ என்று கணத்துக்குக் கணம் மனதால் செத்துப் பிழைத்தவர்களே இப்போது வன்னிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள தமிழ் மக்கள்.

அவர்களுக்கான மீளக்குடியமர்வும், ஏனைய வாழ்வாதார மற்றும் வாழ்க்கை வசதிகள் செய்யப்படுவதும் ''பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை'' என்ற மந்த வேகத்திலேயே தத்தித் தத்தி நகர்கின்றன.

மனிதர்களின் அன்றாட இயக்கத்துக்குத் தேவையான, போக்குவரத்து வசதி, மின்சார வசதி என்பன வன்னியின் மிகமிகப் பல பகுதிகளில் இன்னமும் எட்டியும் பார்க்கவில்லை என்று கூறுமளவுக்கு மிக மோசமான நிலையில் உள்ளன.

அதற்கான சில உதாரணங்களை மட்டும் இந்தப் பகுதியில் தொட்டுக் காட்டுகிறோம்.

கிளிநொச்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் பிரிவில் வினாசியோடை அ.த.க. பாடசாலை என்ற கல்விச்சாலை உண்டு. பூநகரி பிரதான வீதியில், பரமன்கிராயில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் இந்தப் பாடசாலை அமைந்துள்ளது.

அந்தப் பகுதி மிகமிகப் பின்தங்கிய இடம் என்றும் சொல்வதற்கில்லை. ஆனால் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள், தூர இடங்களில் வசிக்கும் மாணவர்கள் பெரும் போக்குவரத்துக் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

அங்கு கற்பிக்கும் ஆசிரியைகள், மண் ஏற்றும் ரிப்பர் வாகனங்களிலும் இராணுவ வாகனங்களிலும் தெருவில் நீண்டநேரம் காத்திருந்து பயணம் செய்தே பாடசாலைக்குச் செல்ல வேண்டிய அவல நிலை காணப்படுகிறது.

அத்தகைய வாகனங்கள் வீதியில் செல்லாத வேளைகளில், அவர்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லும் அவலமும், மாணவர்களின் கல்விக்கு இழப்பும் உண்டாகின்றன. போதிய பஸ்கள் இல்லாமையால் அந்த வீதியில் பஸ் சேவையை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இ.போ.ச. தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்ற நிலைமையே முல்லைத்தீவு மாவட்டத்தின் அநேக பகுதிகளிலும் காணப்படுகின்றது. துணுக்காய்ப் பிரதேசத் திலுள்ள பின்வரும் இடங்களுக்குப் போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லை என்று மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. புத்துவெட்டுவான், மருதங்குளம் தேராங்கண்டல் ஆகிய கிரா மங்களுக்கு இதுவரை போக்குவரத்து வசதிகள் முற்றாகவே இல்லை. குறிப்பிட்ட கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் தூர இடங்களி லுள்ள பாடசாலைகளில் சேர்ந்து படிக்க நேர்ந்துள்ளது. வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், போக்குவரத்து வசதியின்மை யால் தமது கல்வியைத் தொடரமுடியாது இடைநடுவில் அதனைக் கைவிடும் ஆபத்தான நிலையும் தோன்றியுள்ளது.

போக்குவரத்து வசதிகள் மிகவும் மந்த நிலையில் இருப்பதோடு மட்டுமன்றிப் பல பகுதிகளுக்கு இன்னமும் மின்சார வசதியும் எட்டிப் பார்க்கவில்லை. வன்னிப் பிரதேசத்தின் அநேகமான பகுதிகளுக்கு இதுவரை மின்சார விநியோகம் வழங்கப்படவில்லை.

ஒட்டுசுட்டானில் உள்ளூர்க் கிராமங்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தப் பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர்கள், உள்ளூர்க் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்று உறுதியளித்து விட்டுச் சென்றனர். அதனை நம்பிய மக்கள் பெரும் பணச் செலவில் தமது வீடுகளுக்கான மின் இணைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்து விட்டு, காத்திருந்து கண் பூத்துப்போன நிலையில் உள் ளனர்.

பூநகரிப் பிரதேசத்திலும் உள்ளூர்க் கிராமங்கள் பலவும் மின்சார வசதி இன்றியே உள்ளன.

மக்களுக்குரிய மிக அத்தியாவசிய சேவையான வைத்தியத் துறையும் வன்னிப் பிரதேசத்தில் பின்னடைந்து காணப்படு கிறது. அங்குள்ள அநேகமான கிராமப்புற வைத்தியசாலை களில் வைத்தியர்கள் இல்லாத குறைபாடு பெரிய அளவில் உண்டு. உதாரணமாக வட்டக்கச்சி வைத்தியசாலை.

இந்தப் பிரதேசத்தில் போர் முடிவுற்ற பின்னர் மக்கள் மீளக்குடியமர்ந்த நாளிலிருந்து வட்டக்கச்சி வைத்தியசாலையை நிரந்தரமாக இயங்க வைப்பதற்காக வைத்தியர்களை நியமிக் கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு வருகின்றன. ஆனால், இதுவரை எவரும் விண்ணப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது. இத்தகைய வைத்தியசாலைகளில் பணிபுரிவதற்கு எவரும் முன்வருவதாக இல்லை என்றும் சொல்லப்படுகிறது.

வட்டக்கச்சி ஆஸ்பத்திரியை அண்மித்த சிவிக் சென்ரர், மாயவனூர், இராமநாதபுரம், மாவடியம்மன் ஆகிய இடங்களில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இவர்கள் தமது குடியிருப்புகளுக்குக் கிட்டியதாக ஆஸ்பத்திரி ஒன்று இயங்கக் கூடியதாக வைத்தியத் தேவைகளுக்காகப் பதினொரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் செல்கின்றனர்!

வைத்தியசேவை, போக்குவரத்து சேவை, மின்சாரவசதி என்பன மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு மிக அவசியமானவற்றில் அத்தியாவசியமானவை. அவற்றை வழங்குவதற்கான வசதிகளைச் செய்வதில் அர சாங்கமும் அதன் சேவை சார் அங்கங்களும் அவற்றின் உயர் அதிகாரிகளும் அசமந்தத் தனமாகச் செயற்படுவதும், அசட்டை காட்டுவதும் 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதற்கு' ஒப்பானது.

வன்னி மக்களுக்கான தொழில் மற்றும் வாழ்க்கை வசதிகள் வேக வேகமாகச் செயற்படுவதாக அரசாங்கத் தரப்பு நடத்தும் பிரசாரங்கள் மட்டும் அவர்களின் கஷ்டங்களையும் கட்டுப்பாடுகளையும் போக்கமாட்டா.

அவற்றைத் திருப்திகரமாக வழங்குவதற்குத் தேவையான நிதிப்பங்கீடும், குறிப்பிட்ட திட்டங்களையும் அலுவல்களையும் ஆற்றுவதில் திறமையும் ஆர்வமும் கொண்ட அலுவலர்களை இனங்கண்டு பொறுப்பளிப்பதும் அவசியம்.

அரசாங்கத்துக்கு ஆதரவானவர்கள் அல்லது சுயநலம் கருதி அதற்கு ஒத்தூதுவர்களை முக்கிய பதவிகளிலும் பொறுப்புள்ள பதவிகளிலும் அமர்த்தி மக்களுக்குத் தேவையான சேவைகளை நிறைவேற்ற முடியாது. அரச விசுவாசிகளையும் பந்தம் காவிகளையும் உள்ளத்தாலும் செயலாலும் மக்கள் நலன் நாடாதவர்களையும் பணிக்கு அமர்த்தி மக்கள் சேவை ஆற்றுவதாகத் தம்பட்டம் அடிப்பதால் யாருக்கு என்ன பயன்?

வன்னி மக்கள் இன்னும் எத்தனை காலத்துக்கென்று அரசு தமக்கு உதவிடும் என்று எண்ணி அல்லாடுவது? இதற்கு ஒரு முடிவே வராதா? கால அவகாசம் விதிக்கப்படாத எந்தத் திட்டமும் சேவையும் மக்கள் மீது சுமத்தப்படும் பளுவே அன்றி வேறல்ல. வன்னிக்கு அது மிகமிகப் பொருந்தும்.

# செயலிழந்த பத்திரிகைப் பேரவையை உயிர்ப்பிப்பதற்கு அரசு கடும் முயற்சி

## எட்டு ஊடக அமைப்புக்கள் கண்டனம்

யாழ்ப்பாணம்,மே.15

பத்து வருடங்களுக்கு முன்னர் செயலிழந்த பத்திரிகைப் பேரவையை மீண்டும் உயிர்ப்பித்து அதன் மூலம் ஊடகவியலாளர்களைத் தண்டிக்கவும் சிறையிலிடவும் கூடிய அதிகாரத்தை நடைமுறைப்படுத்த அரசு எடுத்துவரும் முயற்சிக்குப் பிரதான எட்டு ஊடக அமைப்புக்கள் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

இதுவரை காலமும் பின்பற்றப்பட்டு வருகின்ற சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக் கோவைப் பொறிமுறைச் செயற்பாட்டை பலப்படுத்துவதற்குப் பதிலாக அந்த நடவடிக்கையை குளறுபடிக்குள்ளாக்குவதாக- தடுப்பதாக இந்த நடவடிக்கை அமைவதோடு நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பலவீனமடையச் செய்து அச்சுறுத்துவதாகவும் அமைவதாக அந்த ஊடக அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இலங்கைப் பத்திரிகை சமாஜம், இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், ஊடக தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனம், தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பு ( இலங்கைக் கிளை) ஆகிய அமைப்புக்களே கூட்டாக அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

ஊடகவியலாளர்களைத் தண்டிக்கவும் சிறையிடவும் கூடிய அதிகாரம் கொண்ட இந்தப் பத்திரிகைப் பேரவையை மீண்டும் செயற்படுத்துவதை மேற்குறிப்பிட்ட எல்லா அமைப்புகளிலும் இலங்கையில் உள்ள ஊடகத் துறையைச் சேர்ந்த எல்லாத் தரப்பினரும் எதிர்த்துள்ளனர். குறிப்பாகப் பத்திரிகை பிரசுரத்தார், பத்திரிகைகளின் ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறை ஊழியர்கள் ஆகியோர் கூட்டாக ஒன்றிணைந்து பத்திரிகைப் பேரவையை மீண்டும் செயற்பட வைப்பதற்கு பலத்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையிலுள்ள ஊடகத்துறையோடு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதால் பத்திரிகைப் பேரவையை சட்டரீதியாக ஏற்படுத்த அரசு முடியாமல் உள்ளது.

ஏற்கனவே அந்த அமைப்புக்கள் இது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளன.

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பத்திரிகைப் பேரவைச் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதை நிறுத்திப் பத்திரிகைத்துறையினருக்காக சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக் கோவைப் பொறி முறையை முன்னெடுத்து வரும் 2003 இல் உருவாக்கப்பட்ட இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவை தொடர்ந்து இடையூறு இன்றி செயற்பட இடமளிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-4)

# 'சுழலும் சொற்போர்' இன்று

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கலை மாணவர் மன்றம் கம்பனின் கவிச் சுவையை இன்றைய தலை முறைக்கு உணர்த்தும் பொருட்டு ''சுழலும் சொற்போர்' எனும் நிகழ்வை நடத்தவுள்ளது.

யாழ். மத்தியகல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ் முன்னணிப் பேச்சாளர்கள் கலந்து கொண்டு சொற்போர் நடத்தவுள்ளனர்.

நிகழ்வின் தொடக்கவுரையை பாடசாலையின் அதிபர் எல். ஓங்காரமூர்த்தியும், அறிமுகவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

''கம்பராமாயணத்தின் கைகேயி சூழ்வினைப்படலம்'' எனும் விடயத்தில் ''கம்பராமாயணத்தில் மந்தரை சூழ்ச்சியால் பெரிதும் பாதிப்புக்குள்ளான பாத்திரம் ''பரதன் அல்ல கைகேயியே'' எனும் தலைப்பில் சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் கு. பாலசண்முகன், ''கைகேயி அல்ல தசரதனே'' எனும் தலைப்பில் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் நாக. தமிழிந்திரன் ''தசரதன் அல்ல இராமனே'' எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக கணக்கியல் துறைத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி, ''இராமன் அல்ல இலக்குவனே'' எனும் தலைப்பில் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

இந்த நிகழ்வின் நோக்குனர்களாக கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு அ.குமாரவேல் ஆகியோரும், நடுவராக பேராசிரியர் சண்முகதாஸும் கலந்துகொள்வர்.

(ம-313-11)

# மீள் எழுச்சிக் குழுத் தலைவரின் மனைவி மீது புதன் இரவு தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 15

மீள் குடியமர்வில் ஏற்பட்ட குளறுபடிகளைத் தொடர்ந்து மீள் எழுச்சிக் குழுவின் தலைவர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாதோர் அவரின் மனைவியைத் தாக்கியமையால் அவர் காயங்களுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புன்னாலைக் ட்டுவன் வடக்கில் கடந்த புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராம அலுவலர் பிரிவின் மீள் எழுச்சிக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாகப் பல்வேறு முறைப்பாடுகள் உடுவில் பிரதேச செயலருக்கும் யாழ் அரச அதிபர், மீள் எழுச்சித் திட்ட அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் நேரிலும், எழுத்து மூலமாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மீள் எழுச்சிக் குழுவின் தலைவர் வீட்டுக்குக் கடந்த புதன்கிழமை சென்ற இனம் தெரியாத குழுவினர் தலைவரின் மனைவியைத் தாக்கியதால் அவர் படுகாயமடைந்து யாழ். போதானா வைத்தியசாலையில் அனுமதிப்பட்டுள்ளார். தாக்குதல் நடைபெற்ற வேளை மீள் எழுச்சிக் குழுவின் தலைவர் வீட்டில் இருந்து தப்பியோடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-86)

# சேந்தாங்குளத்தில் குடியமர்ந்த மக்களுக்கு போதிய குடிதண்ணீர் வசதி இல்லை

கீரிமலை சேந்தாங்குளம் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் போதிய குடிதண்ணீர் வசதி இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சேந்தாங்குளம் பகுதியில் இருந்து கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்கள் அண்மையில் அந்தப் பகுதியில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

பல்வேறு அடிப்படை வசதிகள் இல்லாமையால் கஷ்டப்படும் இந்த மக்களுக்குப் பெரிய பிரச்சினையாகக் குடிதண்ணீர் பிரச்சினை இருந்து வருகின்றது.

வலி.வடக்குப் பிரதேச சபையினால் இரண்டு நாள்களுக்கு ஒரு தடவை குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சுமார் 80 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 350 பேர் வரை வாழும் இந்தப் பகுதிக்கு போதிய குடிதண்ணீர் வசதி இல்லாமை பெரும் சிரமமாக உள்ளதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

வலி.வடக்குப் பிரதேச சபையினால் வழங்கப்படும் பவுசர் மூலமான குடிதண்ணீர் நாளாந்தம் வழங்கினால் அந்தப் பகுதியில் வாழும் மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றத்தில் அலறியது கைபேசி; பெண்ணுக்கு அபராதம்

நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் நீதிமன்ற திறந்த மண்டபத்தில் அமர்ந்திருந்த பெண்ணின் கையடக்கத் தொலைபேசி மணி அலறியது.

இந்தச் சம்பவம் கடந்த 11 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது. நீதிவானின் கட்டளைக்கமைய நீதிமன்றப் பொலிஸாரால் மீசாலையைச் சேர்ந்த பெண்ணுக்கு எதிராக வழங்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பெண்ணை எச்சரிக்கை செய்த நீதிவான் 500 ரூபா அபராதம் விதித்தார்.

(த-207)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

நவாலி,மே 15

நவாலிப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி மருந்து தற்போது ஏற்றப்பட்டுவருகின்றது.

இது பற்றி பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்புச் செய்யப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்ட இடங்களில் வீதியோரம் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு இந்தத் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட உதயன் செய்தியாளர் படம் பிடிக்க முனைந்த போது ஊசி ஏற்றிக் கொண்டிருந்தவரால் வைத்திய மேலதிகாரியின் உத்தரவின்றி படம் எடுக்க விடமாட்டேன் என்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார். இதனை ஆட்சேபித்து அங்கு நாய்களுடன் நின்ற மக்கள் வீதியில் நடக்கும் சம்பவங்களை படமெடுப்பதற்கு யாருடைய உத்தரவும் தே வையில்லை என்று மக்கள் சத்தமிட்டுச் சென்றனர். (த-100)


### STUDY IN UK, CANADA, USA CYPRUS, POLAND & SINGAPORE

- UK → தவணைக்கட்டண அடிப்படையில் பணம் செலுத்தலாம் மற்றும் பகுதிநேர தொழில்வாய்ப்பு
- USA → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே.
- CANADA → IELTS, Sponsor, வயதெல்லை ஆகியன இல்லாமல் 2வது வருடத்திலிருந்து PR கிடைக்கும்.
- POLAND → விசா கிடைத்ததும் Tuition fee செலுத்த வேண்டும்.
- SINGAPORE → பதிவுக்கட்டணம் மட்டுமே செலுத்த வேண்டும். கல்லூரி அனுமதி உத்தரவாதம்.
- CYPRUS → கட்டணம் விசா கிடைத்ததும் பெறப்படும்.

CYPRUS & POLAND பதிவு செய்வதற்கான கடைசித் திகதி 30 May 2011

அல்சரா - 0778339943, பஸ்னா - 0778 438403

READ International
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

### வீசா சேவை

UK, USA, CANADA மற்றும் Europe நாடுகளுக்கான Student Visa ஆலோசனை, Financial SponsorShip என்பன
தொடர்பு: 0214910959

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சிவன் கோயிலடி No - 14 வளவுக் காணி விற்பனைக்கு. 3 பரப்பும் 2 குழியும் கண்டி வீதியிலிருந்து 100 M தூரத்துக்குள். 0777220055


### பெயர் மாற்றம்

இல 44, சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி மேற்கு என்னும் முகவரியில் வசிக்கும் வேலன் சாந்தநாயகம் ஆகிய நான் இன்று (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை முதல் வேலன் சாந்தநாயகி எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன். இன்று முதல் நான் சகல ஆவணங்களிலும் வேலன் சாந்தநாயகி என்றே கையொப்பமிடுவேன்.

வேலன் சாந்தநாயகி

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
01.04.1950

மறைவு
09.04.2011



திருமதி தேவராசா தவமணி (அன்பு)

எமக்காக சிரித்து எமக்காக அழுது
எமக்காய் வாழ்ந்து உறவுகளை அணைத்து
உத்தமியாய் வாழ்ந்து தெய்வத்திடம்
சங்கமமான எம் அன்புத் தாயே!
எம் உயிர் உள்ளவரை உம் நினைவு நீங்காது

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்

கராஜ் வீதி,
(கீரிமலை வீதி) சண்டிலிப்பாய்.

(40-19-27)(4219)


### விநியோகஸ்தர்கள் தேவை

மிகவும் உயர்ந்த தரமுடைய (ஐரோப்பிய தரம்) மினரல் தண்ணீர் போத்தல்களை வட மாகாணத்துக்குள் விநியோகம் செய்வதற்காக நல்ல நிதி வசதியும் திறமையும் மிகுந்த (வட மாகாணத்திலுள்ள) விநியோகஸ்தர்கள்/ கம்பனிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இல: 111/18, கிருல வீதி,
கொழும்பு - 5
தொலைபேசி: 0773152121

### வாடகைக்கு

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையுடன் இணைந்த கட்டடத் தொகுதியில் முற்றாக மாபிள் பதித்த 2800 சதுர அடிகளைக் கொண்ட இடம் உடனடியாக வாடகைக்கு உண்டு. 60 AMPS 3 Perch மின்சாரம், நீர், கழிப்பறை இணைக்கப்பட்டுள்ளது. வாகன தரிப்பிட வசதியும் கொண்டது. வங்கி மற்றும் சூப்பர் மாக்கெட், காட்சியறை போன்றவற்றுக்கு ஏற்றது. 0776 294351 / 0112592878


### உத்தரகிரியை அழைப்பு

தோற்றம்
22 ★ 06 ★ 1947



மறைவு
16 ★ 04 ★ 2011

திருமதி ரஞ்சிதமலர் இராஜரட்டினம்

நிகழும் கரவருஷம் சித்திரைத்திங்கள் 8ஆம் நாள் (16.04.2011) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயின் ஆத்மசாந்தி நிகழ்வுகள் வைகாசித் திங்கள் 2ஆம் நாள் நாளை(16.05.2011) திங்கட்கிழமை மாரியம்மன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். மேற்படி ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ராஜி, மரியம்மன் ஒழுங்கை,
திருநெல்வேலி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(4209) (38)

## சிவத்தொண்டின் சிகரத்துக்கு அஞ்சலி

### அமரர் சோமசுந்தரம் சோமசேகரம்



சுன்னாகம் பகுதியில் பெருமையும் கலாசார ஒழுக்கமும், பண்பியல்புகளும் நிறைந்த சிறந்த குடும்பத்தில் பிறந்தவரும் அமரத்துவமான எமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரியவருமான ஆசிரியர் சோமசுந்தரம் சோமசேகரம் அவர்கள் இளமைக்காலம் முதல் எல்லோருட னும் அன்பாகவும் விநயமாகவும் மெதுவாகவும் பேசும் இயல்புடையவர். பின் கல்வியுயர்ச்சி பெற்று பட்டதாரியாகி, ஆசிரியராகி, அதிபராகி உயர்வு பெற்றுப் பலதரப்பட்ட மக்களுடனும் பழகும் நிலையேற்பட்டு சமூகப்பணிகள், சமயப்பணிகள் என அவரது சேவை விரிவுபட்ட காலத்திலும் இவ்வியல்புகள் மாறாது எல்லோராலும் விரும்பப்படும் தன் புன்சிரிப்புடன் பண்பாளராகத் திகழ்ந்தவர். தாய், சகோதரியிடத்து நிறைந்த அன்புடையவராக ஆசிரியர், அவர்தன் கடமைகளை உரிய காலத்தில் சரிவர நிறைவேற்றி குடும்பக் கடமைகளையும் கூடியவரிடத்தில் சமூக நலன் பேணியும் செய்ததுடன், ஸ்ரீகதிரமலை சிவனிடத்திலும், சிவபூதவராயரிடத்திலும் தீவிரமான பக்தியுடையவராய் வாழ்ந்தார். எமது ஆலயத்தில் நடைபெறும் திருப்பணிகள் மகாகும்பாபிஷேகங்கள் அனைத்திலும் ஈடுபட்டு, மற்றவர்களையும் ஊக்கம் கொடுத்து உதவியவராவார். அத்துடன் எமது ஆலய சித்திரத் தேர்த் திருப்பணிச்சபையின், பொருளாளராக இருந்து அளப்பரிய பங்களித்து அப்பணியை சிறப்புற நிறைவேற்றியவராவார். இவர் பிற் காலங்களில் ஒரு துறவுநிலை பெற்று தனது உடன் பிறவா சகோதரர்களின் பாசத்தில் தன்னை ஆள்படுத்தியதையும், காண முடிந்தது. அவரது மறைவும் அந்தச் சகோ தரர்களுட னேயே நிகழ்ந்தது. இது அவரது உள்ளத் தூய்மையை காட்டுவதாகும். அவரது திடீர் பிரிவு அனைவருக்கும் அதிர்ச்சி தருவதாகும். எமது ஆலயத் துக்கும் பேரிழப்பாகும். அவரது ஆத்மா கதிரைமலை நாதனின் தாழ் சேர பிரார்த்தித்து இவரது பிரிவால் துயருறும் உறவுகள் அனைவருக்கும் தேறுதல் கூறி அஞ்சலி செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முத்தமிழ்க் குருமணி, சகலாகமசங்கிரகர்
சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.

(49,19, 25)


### வீடு வாடகைக்குண்டு

சங்கானை நகரத்துக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: 0770691871

### STUDY IN UK UKRAINE [MBBS] CYPRUS INDIA



Come with your Documents only
Processing within 3 weeks
100% VISA Guarantee
Admissions From Highly Trusted Colleges
June/July Intakes are starting now

வெளிநாடு செல்லவுள்ள மாணவ மாணவிகளுக்கு அனைத்து ஏற்பாடுகளையும் மிக குறுகிய காலத்தில் செய்து கொடுப்பதுடன் புதிய சட்ட திட்டத்தின் படி VISA மறுக்கப்பட்ட மாணவர்களின் VISA க்களையும் எங்களது பிரசித்திபெற்ற வழக்கறிஞர்களால் வெற்றி கரமாக உடனடியாக செய்து கொடுக்கப்படும்

INTERNATIONAL CITY COLLEGE
No-07,2nd floor, W,A,Silva Mawatta, Colombo-06
Tel: 0114 594 104 Fax:011 2582722, 077 12 50 789 , 0772 955 977
Jaffna Branch:-No-32,Mosque Lane,Opposite to Kasthurier Road, Jaffna. Tel-021 222 4844/0772199068
E-mail: citycollegelanka@gmail.com Web: citycollegelanka.com

யாழ். மண்ணில் வெற்றிகரமான கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறியைத் தொடர்ந்து கணினித் துறையிலும் கால் பதிக்கின்றது

### ELITE COLLEGE

Diploma in Computer Hard ware
ஆரம்பம் 27ஆம் திகதி காலை 9 மணிமுதல்
27,28,29,30,31 வரை.

- அனைத்து விதமான கணினிகளையும் திருத்தும்முறை
- கணினி ஒன்று சேர்த்தல் (Assemble முறை)
- கணினி மென்பொருள் (Software) போடும் முறை.
- கணினியில் வரும் அனைத்து பெயர்களையும் கண்டறிதல்.
- மல்டி மீடியா தொடர்பான பூரண அறிவு
- நூற்றுக்கு மேற்பட்ட நுணுக்கங்களைக் கண்டறிவதுடன் கணினியில் வரும் அனைத்துப் பிரச்சினைகளையும் துரிதமாகக் கண்டுகொள்ளுதல்.
- சுயமாக கணினிகளைப் பொருத்துதல் (Install செய்தல்)
- 5 நாள்கள் கொண்ட முழுநேர பாடநெறி. ஆரம்ப அறிவு தேவையற்றது. வயது வித்தியாசம் இன்றி இருபாலாருக்குமானது.தனிப்பட்ட கண்காணிப்பு அனைத்துக் கேள்விகளுக்கும் சரளமான பதில்
- உங்கள் திறமைக்கேற்ற சுயதொழில் வாய்ப்பு. பாடநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.

பதிவுகளுக்கு இன்றே விரையுங்கள்

இலவசம் P-4 கணினி ரகசியம் அடங்கிய CD

ELITE COMPUTER & BUSINESS COLLEGE
இல.1/5, மடம் வீதி, குருநகர் பேப்பரின் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 2396, 075 044 5070

(40-19-21)(4225)

### எமது சிகிச்சைகள்

புற்று நோய் தணிப்பு
தைராய்ட் பிரச்சினைகள்
ஈரல் கோளாறுகள்,
மஞ்சள் காமாலை,
மூட்டுவலி,முதுகுவலி,
ஒற்றைத் தலைவலி,
சுவாசப்பை கோளாறுகள்,
படுக்கைபுண் - நீரிழிவுப் புண்..
நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு
நீக்குதல் பக்க விளைவுகள் இல்லை. சிக்கனமான மூலிகை மருத்துவம்

### இனி இல்லை நெஞ்சு வலி




இருதய நோயாளர் எதிர்காலத்தில் நெஞ்சு வலி இன்றி சுகமாக வாழலாம். எமது ஆயுர்வேத மருந்தினால் இரத்த ஓட்டம் சீர்பெறும் வலியிலிருந்து உடல் நலம் பெறுவீர்கள்.

HOTLINE
0777 08310, 011 555 8442

இலவச மருத்துவ ஆலோசனைகள்

| பருத்தித்துறை | யாழ்ப்பாணம் |
| --- | --- |
| 16.05.2011 | 17.05.2011 |
| றோயல் சிட்டி மெடிக்கல் சென்டர் செட்டி வீதி | காமா டிஸ்பென்சரி 1207 K.K.S வீதி |

A BOI APPROVED & ISO 9001-2008 OMS CERTIFIED COMPANY

FAIR PHARMA (PVT) LTD
Level5/ East Tower, 1 C, World Trade Centre, Col - 01
Phone - +94 11 5 517 897, 5 551 879, 5 558 442
Email - fairpharmasrilanka@yahoo.com,
Web - fairpharmasrilanka.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடூரமாக நிகழ்ந்த குமுதினிப் படுகொலை





1985 மே 15 அன்றைய காலைப்பொழுது அமைதியாக விடிந்தது. அது ஒரு தீவு. அழகுக்கு அழகு செய்யும் கடற்கரையும் பச்சை படர்ந்த புற்றரையும் ஆலும் வேலும் பூவரசும் புளியும் பனை, தென்னைகளும் நிறைந்த பசுமைச் சோலையது. அதில் வாழும் மக்கள் தனித்திருந்த அத்தீவின் செழிப்புக்குக் காரணமான தொழில்களில் ஈடுபட்டுத் தம்மையும் தமது தீவின் தேவைகளையும் மேம்படுத்தும் பல்துறைசார் உழைப்பில் மூழ்கி இருப்பர்.

அன்று காலை குறிகாட்டுவான் துறைமுகம் நோக்கிய பயணத்துக்கென ஆயத்தமாகி, மாவலித் துறைமுகத்தில் நின்றது குமுதினிப் படகு. அதில் பயணிக்கவென வந்த அத்தனை பேரும் தத்தமது தேவைகளுக்கான ஆயத்தங்களுடன் தமது பொதிகளைச் சுமந்து படகில் ஏறினர் என்றும் போல் அன்றும். அந்தப் பரந்த கடற்பரப்பைக் கடந்து மக்களைக் கரைசேர்க்கும் துணிவுடன் குமுதினி புறப்பட்டது. அலைகடலுக்கு ஏற்றாற்போல் ஆடி அசைந்து அது பயணித்தது. படகின் படகோட்டிகள், சிப்பந்திகள் உட்பட 70 பயணிகள் குமுதினியை நிறைத்திருந்தனர். நயினாதீவின் தெற்குக் கடல் வெளியைப் படகு அண்மித்த வேளை, இரண்டு பிளாஸ்ரிக் படகுகளில் வந்த ஆயுதம் தாங்கியோரால் அது தடுக்கப்பட்டது. வழமையாக நடைபெறும் சோதனை நடவடிக்கை ஒன்றென எண்ணிய படகோட்டி, படகை நிறுத்தினார்.

ஆயுதம் தாங்கியோர் படகினுள் ஏறினர். அவர்களின் கைகளில் துப்பாக்கி மாத்திரமல்ல, கத்தி, கோடரி போன்ற பல ஆயுதங்களும் இருந்தன. குற்றமெதுவும் செய்யாத அந்த அப்பாவிப் பயணிகளை அவர்கள் எதிர்பாராத விதமாகத் தாக்கத் தொடங்கினர். பயணிகள் ஐயோ ஐயோ எனக் கூக்குரலிட்டுக் கத்தினார்கள்.

இந்தத் தாக்குதலில் அனைத்துப் பயணிகளுமே காயமடைந்தனர். ஏழு மாதக் குழந்தை தொடக்கம் 85 வயது வ்யோதிபர் வரை ஆண், பெண் என்ற வேறுபாடுகளின்றி வெட்டியும் கொத்தியும் அடித்தும் காயப்படுத்தப்பட்டனர். இரத்த வெள்ளத்துக்குள் ஒருவர் மேலொருவராய் காயப்பட்டு வீழ்ந்தவர்களுள் 32 பேர் உயிரிழந்தனர். ஏனையோர் காயங்களுடன் குற்றுயிராய்க் கிடந்தனர். இயந்திரவிசை நிறுத்தப்பட்ட நிலையில் குமுதினி நீரோட்டத்துடன் அலைந்து குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையேயான கடற்பரப்பில் மெல்ல அசைந்தது. அதுகண்டு அங்கு விரைந்து சென்றோர் தமது படகுடன் குமுதினியை இணைத்துக் கரைக்கு இழுத்து வந்தனர். காயப்பட்டவர்களையும் இறந்தவர்களையும் புங்குடுதீவு, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைத்தனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோரில் மேலும் நால்வர் உயிரிழந்தனர்.

இந்தக் கொடூரப் படுகொலைகளால் கொலைஞர்களின் இரக்கமற்ற செயல் உலகறியப் பரவினாலும் உண்மைகள் இன்றும் வெளிவரத் தயங்குவதாகவே தெரிகிறது. இந்தப் படுகொலையால் உயிரிழந்த 36 பேர்களின் பெயர்கள் விவரம் வருமாறு:

அந்திரேஸ் அந்தோனிப்பிள்ளை (41), ஞானப்பிரகாசம் தேவசகாயம்பிள்ளை (42), கிறிஸ்ரியன் செபமாலை(53), எலிசம் கிறகரி (63), தொம்மன் நாகேந்திரன்(24), மரியமாணிக்கம் ஞானப்பிரகாசம்(45), கந்தையா சதாசிவம்(51), கணபதிப்பிள்ளை கார்த்திகேசு(47), குமாரவேலு கனகலிங்கம்(36), நிர்மலாதேவி பசுபதி(18), சுவக்கீன் யேசுதாஸ் (52), றெகேசியர் சந்திரகுமார் (19), வேலுப்பிள்ளை கந்தையா (47), சுபாஜினி விஸ்வலிங்கம் (7 மாதங்கள்).

நமசிவாயம் கந்தையா (46), சடையப்பு கோவிந்தன்(45), குசலகுமாரி சாந்தலிங்கம் (24), அனுசா அரியநாயகம் (20), தர்மலிங்கம் அமிர்தலிங்கம் (18), குமாரசாமி விநாயகமூர்த்தி (27), வைத்திலிங்கம் சதாசிவம் (42), ஐயம்பிள்ளை தெய்வானை (70), வேலுப்பிள்ளை புஸ்பராணி (60), சின்னவன் அந்தோனி (68), தர்மலிங்கம் ராஜேஸ்வரன்(12), தில்லைநாதன் (36).

ராமநாதன் கனகம்மா(48), மரியம்மா பத்திநாதர் (49), நிர்மலா பத்திநாதர் (15), யோகராசா பத்திநாதர் (14), எம்.யேசுநாயகம் (24), ஐயன் சின்னவன் (23), முத்தன் மணிவண்ணன்(13), ராமன் முரு[illegible](85), சசிகலா தனபாலசிங்கம்(02), சொர்ணம்மா பசுபதி (60).

**ஆர். இராசரத்தினம்**
நெடுந்தீவு.

# அற்ப விடயங்களில் ஆட்டம் போடும் அதிகாரிகள்



வீதியால் பீடி புகைத்துக் கொண்டு சைக்கிளில் வந்த முதியவரிடமிருந்த பீடிக்கட்டைப் பொலிஸார் பறித்து பிய்த்து எறிந்தனர். பஸ்ஸினுள் இருந்தவாறு யன்னலால் வெற்றிலை துப்பியவரை பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். மீன் சந்தைக்குள் வெற்றிலை துப்பியவரை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நீதிமன்றில் ஆஜர் செய்தார்.

சாவகச்சேரிச் சந்தையில் வெங்காயம் தூற்றிய வர்த்தகர்களைப் பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். இவை அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள்.

யாழ்ப்பாணத்தில் கடமையிலீடுபட்டுள்ள பொலிஸாரினதும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினதும் கடமையுணர்வு பாராட்டுதற்குரியது. சின்னச்சின்ன அல்லது அற்ப விடயங்களுக்கெல்லாம் கடுமையாகச் சட்டத்தை அமுல்படுத்தும் இந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் பாரதூரமான விடயங்களில் அக்கறை செலுத்தாமலிருப்பதன் மர்மம் புரியவில்லை.

ஒருவர் பொது இடத்தில் நின்று புகைப்பிடிக்கும்போது அவரைச் சூழவுள்ள ஐம்பது மீற்றர் தூரத்துக்குள் நிற்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று வைத்துக் கொள்வோம். இதை விட இன்று யாழ்ப்பாணத்தில் பெரிய பிரச்சினையாக உள்ளது. வாகனப் புகையும் வாகனங்கள் கிளப்பும் புழுதியும்தான் யாழ்ப்பாணத்தில் ஓடும் பெரும்பாலான மினி பஸ்களும் இ.போ.ச பஸ்களும் சுருள் சுருளாக டீசல் புகையைக் கக்கியவாறே செல்கின்றன.

'மொபெட்' மோட்டார் சைக்கிள்களும், 'யமாஹா' மோட்டார் சைக்கிள்களும் வளையமாக புகையைக் கக்கிக் கொண்டு செல்கின்றன. கண்ணிவெடியகற்றும் வாகனம் பாடசாலை தொடங்கும் நேரமும் முடிவடையும் நேரமும் வீதி முழுவதும் புகையை வாரியிறைத்துக் கொண்டு செல்கிறது. (கண்ணி வெடியகற்றும் நடவடிக்கையிலீடுபட்டுள்ள நாடுகள் தமது நாடுகளில் இப்படியான வாகனங்களை வீதிகளில் இறங்கவே அனுமதிக்க மாட்டா) வாகனங்கள் வெளிவிடும் புகையின் அளவைப் பரிசோதிக்கும் பரிசோதனை நிலையம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவில்லை.

இந்த நிலையம் ஏன் இன்னமும் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவில்லையென மோட்டார் போக்குவரத்துத்திணைக்கள அதிகாரிகளைக் கேட்டால் அது மாகாண சபையின் வேலை என்று பதிலளிக்கின்றனர்.

பீடி, சிகரெட் புகையை விட டீசல் புகை சுற்றாடலுக்கும் வீதியால் செல்வோருக்கும் கூடுதல் கேடு விளைவிக்கிறது என்பது பொலிஸாருக்கும் சுற்றாடல் அதிகாரிகளுக்கும் தெரியாதா? இவர்கள் வாகனப் புகையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியாதா? யாழ்ப்பாணத்தில் காப்பற் வீதி தவிர்ந்த ஏனைய வீதிகளில் பயணம் செய்யும் அனைவரும் கண்ணையும் மூக்கையும் பொத்தியபடியே பயணம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

வீதி புனரமைப்பிலீடுபடுவோர் ஏனோ தானோ என்று வீதிப்புனரமைப்பிலீடுபடுவதே இந்தப் புழுதிப்படலத்துக்குக் காரணம்.

இதற்[illegible] சீமெந்து மணல், சல்லி என்பவற்றைச் சுமந்து செல்லும் லொறிகளும் உழவு இயந்திரங்களும் வீதி முழுவதும் தூசிப்படலத்தை வாரியிறைத்துக் கொண்டே செல்கின்றன. இதைப்பற்றி வீதியில் கடமையிலீடுபட்டுள்ள பொலிஸார் எதுவித சிந்தனையுமின்றி தம்பாட்டில் நிற்கின்றனர்.

இரு வாரங்களுக்கு முன்னர் அளவெட்டியில் உள்ள கடையில் ஐயர் ஒருவர் தேங்காயெண்ணெய் வாங்கி பயற்றம் பணியாரம் செய்தபோது எண்ணெய் பொங்கி அடுப்பினுள் தள்ளியுள்ளது. காரணம் தரமற்ற எண்ணெய்.

யாழ். நகரில் சில இடங்களில் அரைக்கும் ஆலைகளிலிருந்து மிளகாய் காற்றுடன் கலந்து வருவதால் வீதியால் மக்கள் பயணம் செய்ய முடியாத நிலைமையுள்ளது.

வீடுகளில் கோழிப்பண்ணை வைத்திருப்பவர்களின் வீட்டுப் பக்கமாக வீதியால் செல்லும் மக்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்ல வேண்டிய நி[illegible]க்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகள் நாய்களின் ஓய்விடமாக மாறியுள்ளது. ஜனாதிபதியின் உத்தரவு யாழ். ஆஸ்பத்திரியில் அமுல்படுத் தப்படுகிறதா? யாழ்ப்பாணத்திலுள்ள உணவகங்களின் தரம் பற்றி காவல்துறையினரும் சுகாதார அதிகாரிகளும் கவனமெடுக்க வேண்டும்.

அற்ப விடயங்களில் கவனத்தைச் செலுத்தி சாதனை புரிவதை விடுத்து பாரதூரமான விடயங்களில் அக்கறை எடுத்து இதய சுத்தியுடன் செயற்பட முன்வ[illegible]ம.

**ந.பரமேஸ்வரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 15.05.2011 முதல் 21.05.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவு செய்யலாம். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ அடிக்கடி பரபரப்பு மற்றும் மனக் குழப்பங்களுக்கு ஆள்படலாம். உடல் ரீதியான உபாதைகளாலும் உற்சாகம் குறையலாம். சிறிய விடயங்களுக்குக் கூடப் பெரிய அளவில் கோபப்பட்டு சிலரிடம் சண்டை போடலாம். பூர்வீக சொத்துக்கள் மூலம் ஆதாயம் பெறலாம். தம்பதியர் இடையே உருவான பிரச்சினைகள் தீரும். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த கோயில்களுக்குச் செல்லலாம். அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு சில காரியங்களைச் செய்து விட்டுப் பின்னர் வருத்தம் அடைவீர்கள். கோபதாபங்களால் சிலருடன் இணக்கம் பாதிக்கப்படலாம். குழப்பங்கள், தடுமாற்றங்கள், பிள்ளைகளால் செலவு நேரும். பணவரவுகளைப் பெறலாம்

### இடபம்

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். சிலரிடம் சகஜமாகப் பேசி வம்பில் மாட்டிக் கொள் ளலாம். திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம், உற்சாகம் குடிகொள்ளும். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். சில விடயங்களில் தந்திரமாக செயற்பட்டுக் கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். பணவரவுகளைப் பெறலாம். உறவினர் தொடர்பான நிகழ்ச்சிகளுக் காகவோ அல்லது தொழில் ரீதியான விடயமாகவோ அடிக்கடி வெளியூர் பயணங்கள் செல்லலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகச் செலவுகள் செய்து விட்டு அவ திப்படலாம். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றவும், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை களுக்காகவும் கணிசமான தொகையைச் செலவிடலாம். சிலர் வெளி நாட்டுப் பயணம் செல்லும் சூழலும் உருவாகும். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், சகோத ரர்கள், பங்காளிகள், நிலம், பூமி தொடர்பான விடயங்கள், மாமன், மைத்துனர்களின் கோரிக்கை களை நிறைவேற்றி வைத்தல் போன்றவற்றுக்காகக் கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். அரசு காரியங்கள் இழு பறிக்குப்பின்னர் முடிவுக்கு வரும். பொலிஸ் தொடர்பான தொல்லைகள் உண்டு. ஆதாயமில்லாத அலைச் சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிடலாம். திடீர் பயணம் செல்லலாம்.

### மிதுனம்

எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். மற்றவர்கள் பாராட்டும் வகையில் சில காரியங்களைச் செய்வீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். நீண்ட நாள்களாகத் தள்ளிவைத்த வெளியூர் பயணம் செல்லலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். வழக்கமாகச் செய்யும் வேலைகளைச் செய்ய முடியாமல் போகலாம். சிறிது சிறிதாகச் சேமித்த பணம் கைக்குக் கிடைத்து பெருமை அடைவீர்கள். வயதுக்கு வந்த பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து அவர்கள் மூலம் வருமானம் பெறலாம். தடைப்பட்ட சுபகாரியங்களை நடத்தும் வாய்ப்பு உருவாகும். மனைவி, குடும்பத்தினரின் நீண்ட நாள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பெருமைப்படுதல் தொடர்பான பிரச்சினைகள் அதிகரிக்கும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அலைச்சல், திரிச்சல், வேலைப்பளு உண்டு.

### கடகம்

குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். வழக்கத்திற்கு மாறாக கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். நீங்கள் சந்திக்க நினைத்த சிலரை எதிர்பாரமல் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் அல்லது சக ஊழியர்கள் சிலருடன் பெருமைப்பாடு தொடர்பான பிரச்சினைகள் உருவாகலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். தொழில் ரீதியான விடயங்களில் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். முக்கிய வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். என்னதான் பொறுப்போடு வேலை செய்தாலும், அதை விமர்சிப்பவர்களே அதிகம். பாராட்டுவோர் எண்ணிக்கை குறைவே. வேண்டாத இடமாற்றங்களையும் எதிர்கொள்ளலாம். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் வரும். பொலிஸ் தொடர்பான விவகாரங்களில் வெற்றிகரமாக முடிவு கிடைக்கும். தந்தை வழி உறவுகளால் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு மனக்கசப்பு அதிகரிக்கும். மகிழ்ச்சி உற்சாகமாகக் காணப்படுவர். மாமன், மைத்துனர்கள் சந்திப்பால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்களில் தடை ஏற்படும். பணவரவுகளைப் பெறலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

### சிங்கம்

ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். உறவினர்கள் சந்திப்பால், விருந்து, உபசரிப்புகளால் சந்தோஷம் அடைவீர்கள். சில பிரச்சினைகளை நினைத்து அதிக பரபரப்பு அடைவீர்கள். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யலாம். தர்ம, புண்ணிய காரியம் செய்வீர்கள். நல்ல பல வாய்ப்புகள் தேடி வரலாம். தந்தை வழிச் சொத்துக்கள் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்வுக்கு வரும். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வீட்டில் வசதி வாய்ப்புக்கள் அதிகரிப்பதோடு, உறவினர்கள் மத்தியிலும், தொழில் ரீதியாகவும் உங்களின் அந்தஸ்து உயரும். பணப்புழக்கமும் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். அரசியல்வாதிகள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். பணவரவுகளைப் பெறலாம். குடும்பச் செலவு கூடும். காரியத்தடை நேரும்.

### கன்னி

சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். பொழுது போக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். வீண் விவகாரங்களில் சிக்கி மற்றவர்களின் பழிச் சொல்லுக்கு ஆளாகலாம். குடும்ப உறுப்பினர்களுடன் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். திட்டமிட்ட காரியங்களைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். பொருள் இழப்புகளைத் தவிர்க்க எதிலும் விழிப்போடு இருக்க வேண்டும். உடல் ரீதியான உபாதைகளை எதிர்கொள்ளலாம். அரசியல்வாதிகள் சிலர் வாயைக் கொடுத்து பிரச்சினையில் மாட்டிக் கொள்ளலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களிலும் எச்சரிக்கை அவசியம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். செலவு, அலைச்சல் உண்டு. முக்கிய செய்தி கேட்கலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். பணம் வரும்.

### துலாம்

கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். தம்பதியர் இடையே அன்னி யோன்யம் அதிகரிக்கும். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். உங்களின் மதிப்பு, கௌரவம் மேம்படும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். தம்பதியர் இடையே ஏற்பட்ட பிரச்சினை கள் விலகி ஒற்றுமை கூடும். பிரிந்தவர்கள் மீண்டும் ஒன்று சேரலாம். தொட்ட காரியங்கள் எல்லாம் தடையின்றித் துளிர் விட்டு வளரும். தந்தை, சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான வகையில் அலைச்சல், திரிச்சல் உண்டு. தந்தையுடன் கருத்து வேறுபாடு வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லவும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக் கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். ஆடை, ஆபரணம் வாங்கலாம். செலவு, அலைச்சல் உண்டு

### விருச்சிகம்

மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் தடை போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். தொழில் ரீதியாக வெளியூர் பயணங்கள் செல்லலாம். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கடன் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். மற்றவர்களை நம்பி பணத்தைக் கொடுக்கும் போது, கவனம் அவசியம். சக ஊழியர்கள், நண்பர்களுடன் கருத்து வேறுபாடுகள் வரலாம். நீங்கள் மலைபோல் நம்பியவர்கள் எல்லாம் கைவிடலாம். ஆரோக்கியக் குறைவுகளுக்கும் ஆள்படலாம். தொழில் ரீதியாக சிறு முன்னேற்றம் காணலாம். தந்தையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகி, பாசம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாகப் பார்க்காத உடன் பிறப்புகளைப் பார்க்கலாம். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள் மூலம் ஆதாயம், அனுகூலம் பெறலாம். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போருக்கு வருவாய் கூடும். காரிய வெற்றி உண்டு. நல்ல செய்தி கேட்கலாம். பணவரவுகளைப் பெறலாம். உறவால் நன்மை உண்டு

### தனுசு

ஊக்கம், உற்சாகமாக, பரபரப்பாகச் செயற்படுவீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். ஏதோ ஒரு வழியில் பணவரவுகளைப் பெறலாம். எந்தக் காரியத்தைச் செய்யும் முன்னரும் ஒன்றுக்குப் பலமுறை யோசித்துச் செய்யவும். மதிப்பு, கௌரவத்திற்குப் பாதிப்பு வரலாம். குடும்பத்தினருடன் கோபதாபங்கள் ஏற்படலாம். தண்டச் செலவு நேரும். சிலர் இடமாற்றங்களாலும் அலைச்சல், அவதிகளுக்கு ஆளாகி இருக்கலாம். வீடு மாற்றங்களையும் சந்திக்க நேரிடலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறும் வாய்ப்பு உருவாகும். நீண்ட நாள்களாக விற்காமல் இருந்த சொத்துக்களை விற்கும் சூழ்நிலை உருவாகும். வீட்டில் வசதி, வாய்ப்புகள் அதிகரிக்கும். மழலைச் செல்வத்தை எதிர்பார்த்திருப்போருக்கு வாரிசு உருவாகும். புதிய சொத்துக்கள், ஆடை, ஆபரணங்கள், விலை உயர்ந்த பொருள்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். உறவினர்கள், நண்பர்கள் நீங்கள் கேட்காமலேயே உதவி செய்யலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடை வீர்கள். சில விடயங்களில் ஆத்திரம், அவசரமாக செயற்பட்டு பிரச்சினைக்கு ஆளாகலாம். கலகலப்பான அனுபவம் உண்டு. பக்தி நாட்டம் கூடும். காரிய வெற்றி உண்டு. பணம் வரும்.

### மகரம்

ஏதோ ஒரு வகையில் பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, தூரத்து உறவினர் ஒருவரைப் பார்க்கலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும். புதிய அனுபவம் பெறலாம். தொழில் ரீதியான அலைச்சல், இடமாற்றம், பொறுப்பு மாற்றம், வீடு மாற்றம் போன்றவற்றைச் சந்திக்கலாம். ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் உறவினர்களுடன் பகை, மனஸ்தாபம் ஏற்படலாம். வெளிநாட்டுப் பயண முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அதற் கான வாய்ப்புக் கிடைக்கும். தாயார் தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். உடல் நலக்குறைவுகளுக்கு ஆள்படலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால், அடிக்கடி அலைய நேரிடும். பொறுமையை சோதிக்கும் நிகழ்ச்சிகள் நடக் கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். முகவர் தொழில் புரிவோருக்கு வருமானம் அதிகரிக்கும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்களால் அனுகூலம் உண்டு. அடுத்தவர் விவகாரங்களில் மூக்கை நுழைக்க வேண்டாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும் செலவு நேரும். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

### கும்பம்

மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல், அதை நீங்களே செய்ய நேரிடலாம். தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். சிலருடன் சேர்ந்து முக்கிய வேலையாக வெளியூர்ப் பயணம் செல்லலாம். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். பணப்பற்றாக் குறை உண்டாகலாம். குடும்பத்தில் உள்ளவர்களோ, பணிபுரியும் இடத்தில் சக ஊழியர்களோ உங்களைச் சூடான வார்த்தைகளால் பேசி வெறுப்பேற்றலாம். மற்றவர்களைப் போல நம்மால் எதையும் செய்ய முடியவில்லையே என, ஆதங்கம் அடைவீர்கள். நடந்து முடிந்த விடயங்களை நினைத்து, அடிக்கடி மற்றவர்களிடம் புலம்புவீர்கள். இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்கு வரும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். அரசியல்வாதிகளுக்கு கௌரவம் அதிகரிக்கும். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். தம்பதியர் இடையே பாசம் கூடும். கவனம் அவசியம். நீண்ட தூரப் பயணம் செல்ல வாய்ப்புக்கள் கிடைக்கும். உடன் பிறப்புக்களுடன் எச்சரிக்கையாக இருப்பது சிறந்தது.

### மீனம்

சிலவேளைகளில் நெருக்கடிகள் அதிகரிக்கும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும். உறவினர் ஒருவரைப் பார்க்கலாம். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சில விடயங்களில் முடிவு எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். வீண் பயம் உண்டாகும். தடைப்பட்ட சுபகாரியங்கள் விறுவிறுப்பாக நடைபெறும். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்துப் பெருமை அடைவீர்கள். அவர்களுக்காகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யும் சூழ் நிலை உருவாகும். உறவினர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகிப் பாசம் அதிகரிக் கும். அடமானமாக வைத்திருந்த பொன், பொருள்களை மீட்கலாம். சேமிப்பை அதிகரித்து கடனில் பாதியைச் செலுத்துவீர்கள். எதிர்ப்பு, போட்டிகள் விலகும். காட்டமான பேச்சுவார்த்தைகளைக் கொஞ்ச நாள்களுக்குத் தவிர்க்க வேண்டும். அதேபோல், யாருக்கும் உத்தரவாதம் கொடுப்பதும் சரியல்ல. பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில், மற்ற வர்கள் மத்தியில் பளிச்செனத் தோற்றம் அளிப்பதில் நாட்டம் செல்லும். பெண்களால் சந்தோஷமான அனுபவம் உண்டு. பணவரவுகளைப் பெறலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து வசதிகள் சீரில்லை மீளக்குடியமர்ந்த மாணவர் சிரமம்

வலி.வடக்கு, மே 15

அண்மையில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட மாவை கலட்டியில் வசிக்கும் 80 இக் கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாத நிலையில் தவிக்கின்றனர்.

கடந்த 20 வருடங்களாக இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் வாழ்ந்த இந்த மக்கள் மீளக்குடியமர அனுமதிக் கப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 80 குடும்பங்கள் வரை மாவைக் கலட்டிப் பிரதேசத்தில் மீளக் குடியேறியுள்ளனர்.

இந்தக் குடும்பங்களிலுள்ள மாணவர்கள் முன்னர் காங் கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, அருணாசலம் வித்தியாலயம் எனப் பல பாடசாலைகளில் கல்வி கற்று வந்தனர். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வசித்த இடங்களில் இருந்து சுமார் 05 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள தமது சொந்த இடமான மாவைக் கலட்டிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஒழுங்கான போக்குவரத்து வசதிகள் கூட இல்லாத பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள இந்தக் குடும்பங்களில் உள்ள ஆரம்பப் பிரிவு முதல் இடைநிலைக் கல்வி வரை கற்கும் பாடசாலை மாணவர்கள் உரிய பாடசாலைகளுக்குச் சென்று கல்வியைத் தொடரமுடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

அடிப்படை வசதிகள் இன்றி கஸ்டப்படும் இந்தப் பெற்றோர் தமது நிலைகளின் கல்வி பாதிக் கப்பட்டுள்ளதாகப் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

எனவே இது குறித்து உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-86)

# தாலியை அறுத்த திருடன் தப்ப முடியாமல் மாட்டினார்

யாழ்ப்பாணம்,மே 15

கோயில் திருவிழாவில் கலந்த கொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண் ஒருவரின் தாலிக்கொடியை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்ற இளைஞர் ஒருவரை மடக்கிப் பிடித்தனர் மக்கள்.

இந்தச் சம்பவம் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய வீதியில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

மேற்படி ஆலயத்தின் வருடாந்த திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற ஏழாம் திருவிழாவில் கலந்து விட்டு பெண்மணி ஒருவர் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

அந்த வேளையில் அவரைப் பின் தொடர்ந்து சென்ற இளைஞர் ஒருவர் அவர் அணிந்திருந்த தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு தப்பிச் செல்ல முயன்றார்.

அந்தப் பெண் உடனே கூக் குரல் இட்டமையால் திரண்ட மக்கள் தாலிக்கொடியை அறுத்த இளைஞரை மடக்கிப் பிடித்து நன்கு கவனித்தனர்.

பின்னர் அந்த இளைஞர் தெல்லிப்பழைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (த-26)

# யாழ்.நகர்ப் பகுதியில் 'கற்பகம்' விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம்,மே.15

பனை அபிவிருத்திச் சபையின் "கற்பகம்" விற்பனை நிலையம் ஒன்று கடந்த வியாழக் கிழமை யாழ்.மின்சார நிலைய வீதியில் மத்திய பஸ் நிலையத் துக்கு அருகில் திறந்து வைக்கப் பட்டது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத் தினம் தலைமையில் நடை பெற்ற திறப்பு விழா நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு நிலையத் தைத் திறந்து வைத்தார்.

யாழ்.நகருக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் குடா நாட்டின் பனம் பொருள் உற்பத்திகளைக் கொள்வனவு செய்ய வசதியாக இந்தக் கற்பகம் விற்பனை நிலையம் யாழ்.நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும். தேவையான பனம் பொருள் உற்பத்திகளை இதில் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார். (த-26)




என்னமுன்னேற்றம்: மனைப்பொருளாதார வாழ்வாதாரத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி பாரம்பரிய மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண பிரதம செயலாளர் அ.சிவசுவாமி மாநகர சபை முதல்வர் திருமதி யோயேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (த-313)

# கிளானை வைரவர் ஆலயத்தை புனரமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 15

கொல்லங்கலட்டி கிளானை ஞானவைரவர் ஆலயப் புனரமைப்புத் தொடர்பான கலந்துரையாடலும் பொதுக்கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெற்றது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து தற்போது மக்கள் மீளக்குடியர்த்த அனுமதிக்கப் பட்ட இந்தப் பகுதியில் அமைந் துள்ள கிளானை ஞானவைரவர் ஆலயத்தில் புனமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்கான இந் தக் கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

ஆலய பரிபாலன சபையினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் நிர்வாக சபை மீளாய்வு செய்யப்படுவது டன் புதிய தொண்டர் சபையும் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# யாழ்.ஆனைப் பந்தியில் விக்கிரகங்கள் திருட்டு

யாழ்ப்பாணம், மே 15

ஆனைப்பந்தி சிவகுருநாதர் முருகன் கோயில் 50 லட்சம் பெறுமதியான ஐம்பொன் விக் கிரகங்கள் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 50 கிலோ கிராம் நிறையுடைய ஐம்பொன் விக்கிரகங் கள் திருடப்பட்டவை தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத் தில் ஆலய நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்றுக் காலை பொலிஸார் நேரில் ஆலயத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண் டனர். (த-313)

# 6 ஆயிரம் பயனாளிகளுக்கு மனைப் பொருளாதார உதவி

யாழ்ப்பாணம், மே.15

யாழ்.மாவட்டத்தில் குடும் பங்களின் வருமானம் மற்றும் போசனையை அதிகரிக்கும் நோக்கில் 6 ஆயிரம் பயனாளி கள் முதற்கட்டமாகத் தேர்ந் தெடுக்கப்பட்டு மனைப் பொரு ளாதார மேம்பாட்டு உதவிகள் வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார். பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சின் செய லாளர் எஸ்.சிவஞானசோதி.

மனைப்பொருளாதார மேம் பாட்டு நிகழ்ச்சித் திட்ட அங்கு ரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சின் செயலாளர் எஸ்.சிவ ஞான சோதி இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற் றுகையில்:

தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் தலா 400 பயனாளிகள் தேர்ந் தெடுக்கப்பட்டு அவர்கள் கடற் றொழில், கால்நடை வளர்ப்பு, குடிசைக் கைத்தொழில், விவ சாயம் போன்ற முயற்சிகளில் ஈடுபட ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபா வீதம் வழங்கப் பட உள்ளது. அவர்களுக்கு மேலதிக மாக நிதி தேவைப்படும் போது சமுர்த்தி வங்கிகள் ஊடாக கடன் வழங்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

வாழ்வாதார, பொருளாதார நிகழ்சித் திட்டம் பசில் ராஜ பக்ஷவின் பொருளாதார அபி விருத்தி அமைச்சினால் முன்னெ டுக்கப்பட உள்ளது. உலக உண வுப் பிரச்சினைக்கு ஈடுகொடுக் கும் வகையில் வீட்டுத் தோட் டப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி மரக்கறிகள், உணவுப் பொருள்களை தேவையானளவு கிடைக்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.

யுத்த காலத்தில் பொருளா தாரப் பின்னடைவுகள் ஏற்பட் டன. அதனை ஈடு செய்யவும் வேலையில்லாப் பிரச்சினையை குறைக்கவும் திட்டம் உதவும். நாடளாவிய ரீதியில் ஒரு மில்லியன் வீட்டுத் தோட்ட மனைப் பொரு ளாதார நிகழ்ச்சித்திட்டம் நடை முறைப்படுத்தப்படுகின்றது. முதற் கட்டமாக இன்று யாழ்.மாவட் டத்தில் அமுல்படுத்தப்படும் இந்த நிகழ்ச்சித் திட்டம் ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்படும் என்றார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் பாரம் பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவி ருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளு நர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திர சிறி ஆகியோர் இந்த நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பித்து வைத் தனர்.

பல்வேறு திணைக்களங் களின் உயர் அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், சமுத்தி உத்தி யோகத்தர்கள் எனப் பெருமள வானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (த-250)

# திருட்டு முயற்சி பலிக்கவில்லை

யாழ்ப்பாணம், மே 15

பட்டப்பகலில் வீதியால் சைக்கிளில் சென்ற பெண் ஒருவரைத் தள்ளி விழுத்திவிட்டு அவர் அணிந்திருந்த தங்க நகைகளை அபகரிப்பதற்குத் திருடர்கள் எடுத்த முயற்சி கை கூடாமையால் அவர்கள் ஓடித் தப்பினர்.

இந்தச் சம்பவம் நீர்வேலி தெற்குப் பகுதியில் கடந்த சனி யன்று இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் நண்பகல்வேளை வீதி சன நடமாட்டம் குறைந்த நேரத்தில் இந்தத் திருட்டு முயற்சியை மேற்கொண்டனர். எனினும் அது பலிக்கவில்லை. குறித்த பெண் தன்னை சுதாக ரித்துக் கொண்டு சத்திமிட்டமை யால் திருடர்கள் தமது முயற்சி யைக் கைவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்க் காணிக்கை



### அமரர் பொன்னையா அருளானந்தம்

(ஓய்வுபெற்ற கணக்காளர்)

எமது நண்பன் அ.அன்புருவேல் அவர்களின் அன்புத் தந்தையின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

A\L 2000, பழைய மாணவர்கள்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(40-25-27)(4229)

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் நிர்வாக சபை உறுப்பினர்
**சுப்பிரமணியம் வெற்றிவேலாயுதம்**
அவர்களின் அன்புத் தாய்

திருமதி
### அன்னலட்சுமி சுப்பிரமணியம்

(40)(4227)

09.05.2011 திங்கட்கிழமை சிவபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை.

## மரண அறிவித்தல்

### சவிரி பத்திநாதர்



புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 10ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சவிரி பத்திநாதர் நேற்று (14.05.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி பத்திநாதர் புஸ்பத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சவிரி - அனந்தாசி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான மனவல்- திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.05.2011) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு புங்குடுதீவு புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10ஆம்வட்டாரம்,
புங்குடுதீவு,

(4231)

தகவல்:
புஸ்பம்-மனைவி.

## மரண அறிவித்தல்

### செல்லர் சரவணன்



சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் சரவணன் 11.05.2011 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர்-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அரியம் மற்றும் பூபதி, கர்ணன் (கண்ணன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற கிருஷ்ணனின் மைத்துனரும் செல்லக்குமார், ஆனந்த குமார் (தங்கப்பழம்), கணேசகுமார், சிவகுமார் (ஜேர்மன்), கமலகுமாரி (சுவிஸ்), வசந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள்.

சுழிபுரம் மத்தி, சுழிபுரம். (40-25-27)(4228)

Study at KDU University college, Malaysia for renowned UK, Australian or Swiss degrees

தொடர்புகளுக்கு
0773013060




*Choose Your Course* • A-Level & Foundation Studies • American Degree Program • Australian Matriculation (AUSMAT) • Business • Design** • Engineering • Hospitality & Tourism • Culinary Arts • Information Technology • Language • Law* • Mass Communication/Public Relations • Nursing** • Professional Accountancy (ACCA, CAT)

*PJ Campus only. ** Penang Campus only.

UNITED KINGDOM: University of Cambridge International Examinations • Keele University • University of London International Programmes Registered Centre • Oxford Brookes University • Manchester • Northumbria University • University of Hertfordshire
AUSTRALIA: UNSW Global (The University of New South Wales) • UTAS • Murdoch University • WACE
SWITZERLAND: IMI
UNITED STATES: Southwest Minnesota State University

Partner Universities & Examination Boards

PEOPLE INSPIRE PEOPLE

KDU UNIVERSITY COLLEGE

Integrated Corporate Solutions
107 B 1/1, Galle Road, Colombo -06. SriLanka.
Tel : +94 11 2553520 . Mobile +94 77 3013060
E-Mail :sutha@icslanka.com web : [illegible]

www.kdu.edu.my
blog: campuslife.kdu.edu.my
facebook.com/kdu.universitycollege

Silver Award Winner Education & Learning Category




தென்மராட்சி, மே 15

சாவகச்சேரி நுணாவில் மேற்கு மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பெரும் திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ற-207)

* * *

தென்மராட்சி, மே 15

வரணி வடக்கு, கும்பிட்டான் புலம் கற்பக விநாயகர் ஆலயத்தின் பெருந் திருவிழா கடந்த 8 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

நாளை திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

* * *

யாழ்ப்பாணம்,மே 15

உடுப்பிட்டி வடக்கு, கொம்மாந்துறை மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த எட்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும், நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(ற-313, 253)

* * *

யாழ்ப்பாணம்,மே 15

சிலம்புப் புளியடி ஞானவைரவர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 21 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ள திருவிழாக்களில் இறுதிநாள் அலங்காரத் திருவிழா இடம்பெறும்.

சங்கானை இந்து இளைஞர் மன்றத்தின் அனுசரணையுடன் நடைபெறும். திருவிழாக் காலத்தில் தினமும் மாலை ஆறு மணிக்கு கதாப்பிரசங்கம் நடைபெறும்.

(ற-313)

* * *

காரைநகர்,மே 15

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் தேர்திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கும் இடம் பெற உள்ளது.

(ற-250)

## வீடு வாடகைக்கு

அரியாலை, கனகரத்தினம் வீதியில் 6 விசாலமான அறைகளைக் கொண்ட மேல் மாடி வீடு வாடகைக்கு விடப்படும். 2500 சதுர அடி கொண்ட, 6 வாகனங்கள் நிறுத்தக் கூடிய வசதி உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(சி/018)
தொடர்புகளுக்கு: 0770356955

## காணி விற்பனைக்கு

கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் உள்ள 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777543682

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரியடியில், கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் (கண்டி வீதிக்கு மிகஅருகில்) கௌரவமான குடியிருப்புக்கள் உள்ள பாதுகாப்பான, ரம்யமான சூழ்நிலையில் அமைந்துள்ள, அழகிய விசாலமான வீடு வாடகைக்கு விடப்பட உள்ளது. அரசாங்க நிறுவனம் நடத்துவதற்கோ அல்லது தனியார் துறையின் விருந்தினர் விடுதியாகவோ (Guest House) பாவிப்பதற்கு உகந்தது.

தொடர்புகளுக்கு: 0776509721

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து மில்லியன் ரூபா செலவில் கிளி. மத்திய கல்லூரி புனரமைப்பு

கிளிநொச்சி,மே 15

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் புனரமைப்பு வேலைகளுக்கு 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

தொடர் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகச் சேதமடைந்த இந்தப் பாடசாலை நீண்ட காலமாக உரிய புனரமைப்பு வேலைகள் எதுவும் இடம்பெறாத நிலையில் தற்காலிகக் கொட்டகைகளிலேயே கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக வடக்கு மாகாண ஆளுநர் பாடசாலையின் புனரமைப்பு வேலைகளுக்கென 5 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். விரைவில் தற்காலிகக் கொட்டகைகள் யாவும் அகற்றப்பட்டு நிரந்தரக் கட்டடங்கள் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் ஆளுநர் உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் தாய்ப் பாடசாலையின் மத்திய கல்லூரியின் புனரமைப்பு மற்றும் அதிபர் நியமனம் தொடர்பாக கல்விச் சமூகத்தினர் நீண்ட காலமாக வேண்டுகோள் விடுத்து வந்த நிலையில் அண்மையில் நிரந்தரமாக அதிபர் ஒருவர் இந்தப் பாடசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய கட்டடங்கள் அமைப்பது மற்றும் நிரந்தர அதிபர் நியமனம் தொடர்பாக நடவடிக்கையெடுக்கப்பட்டமை குறித்து பாடசாலைச் சமூகத்தினர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகின்றது. (க)

# பச்சிலைப் பள்ளியில் இந்திய வீட்டுத்திட்டம்; 50 வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டது

கிளிநொச்சி, மே 15

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப் பள்ளியில் இந்திய வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளிலுள்ள கரந்தாயில் 50 வீடுகள் இந்திய வீட்டுத்திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ளன. இவற்றுக்கான அடிக்கல்லை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் கடந்த புதன்கிழமை பி.ப. 1.40 மணிக்கு நட்டு வைத்தார்.

இந்த வீட்டுத்திட்டத்துக்கென 50 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். மூன்று மாதத்துக்குள் முடிவடையும் இந்த வேலைகளுக்கு 1.1 மில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட திட்டப் பணிப்பாளர், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர், வீட்டுத்திட்டப் பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த 50,000 இந்திய வீட்டுத் திட்டத்தை அரியாலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# அம்பலப்பெருமாள்குளத்தில் படிப்பகம்

அக்கராயன், மே 15

துணுக்காய் அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் படிப்பகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

சுமார் 43 வருடங்களுக்கு முன்னர் 1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பலப் பெருமாள் குளம் குடியேற்றத் திட்டத்தில் இதுவரை படிப்பகம் ஒன்று அமைக்கப்படாமை பெரும் குறையாகவே இருந்து வந்துள்ளது. தற்போது 100 இக்கும் மேற்பட்ட மக்கள் மீள் குடியமர்ந்த நிலையில் படிப்பகம் அமைக்கப்படாமையால் கிராம மக்கள் பயனுள்ள வகையில் பொழுதைப் போக்கவும் தமது பொது அறிவை விருத்தி செய்யவும் இயலாத நிலையில் உள்ளனர். கிராம மக்களின் இந்தக் குறையை நீக்கும் பொருட்டு படிப்பகம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் கிராம முக்கியத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது படிப்பகத்தை அமைப்பதற்கான இடத்தேர்வு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-410)

# பாம்புக் கடி அதிகரிப்பு

அக்கராயன்,மே 15

கிளிநொச்சி மாவட்டத்தில் பாம்புக்கடிக்கு ஆளாகி மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரியவருகின்றது.

தற்போது வெப்பக் காற்றுடன் கூடிய காலநிலை காணப்படுவதால் பாம்புகளின் நடமாற்றம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் கிளிநொச்சியில் மீள் குடியமர்ந்து பாதுகாப்பில்லாத தற்காலிகக் கொட்டகைகளில் வாழும் மக்கள் பாம்புக்கடிக்கு இலக்காகும் அவல நிலையிலுள்ளனர்.

கிளிநொச்சிப் பொது மருத்துவமனையில் தினமும் குறைந்தது மூவராவது பாம்புக்கடிக்கு இலக்காகி அனுமதிக்கப்படுவதாகத் தெரியவருகின்றது.

அத்துடன் இங்குள்ள கிராம மருத்துவமனைகளில் மருந்துவர்கள் இல்லாததால் பாம்புக் கடிக்கு உள்ளாவோர் பெரும் அவலங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-410)

## உறவும் பிரிவும்...



சிறந்த மரியாதை: ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்திலிருந்து இடமாற்றலாகிச் சென்ற பெரும்பாக உத்தியோகத்தர் வே.கந்தசாமி, அரவது பாரியார், புதிதாக இந்த நிலையத்தில் பெரும்பாக உத்தியோகத்தராகப் பெறுப்பேற்ற எஸ். அமிர்தலிங்கம் ஆகியோர் கமக்கார அமைப்பினருடன் காணப்படுகின்றனர். (500)

# ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான செய்திக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மறுப்பு

யாழ்ப்பாணம், மே15

உதயன் பத்திரிகையில் இந்த மாதம் 10 ஆம் திகதி வெளிவந்த "வன்னி மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்றம். மகாசிவத்தின் கருத்து வேதனையளிப்பதாகத் தகவல்" என்ற தலைப்பின் கீழ் வெளி வந்த செய்திக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரான த.மகாசிவம் மறுப்பறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

மேற்படி தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட செய்தியானது உண்மைக்குப் புறம்பானதும், மக்களை விசேடமாக ஆசிரியர்களை, தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு எதிராகவும், பொதுச் செயலாளர் மகாசிவத்துக்கு எதிராகவும் திசை திருப்பும் நோக்கமாகவும் அமைந்துள்ளது.

தமிழர் ஆசிரியர் சங்கம் வன்னியிலிருந்து இடமாற்றம் கோரிய அனைவரையும் இடமாற்றம் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாகவே இருந்துள்ளது.

ஆனால் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலிருந்து முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி, மடு ஆகிய கல்வி வலயங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட முறையற்ற திட்டமிடப்படாத இடமாற்றங்களையே சங்கம் எதிர்க்கின்றது.

ஏனென்றால் எவ்வித இடமாற்றத் திட்டமில்லாமல் பாரபட்சமான முறையில் அப்பாவி ஆசிரியர்கள் கட்டாய இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் பல ஆசிரியர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. மாகாண இடமாற்றச் சபை கூட்டப்படாமல் இடமாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. திறந்த முறையில் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை, இணையத்தளம் ஊடாகவும், ஊடகங்கள் மூலமும் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் ஆசிரியர்களுக்குத் தனிப்பட்ட நேரடி அறிவித்தல் இல்லை.

இப்பொழுதும் கூட ஆசிரியர்களுக்குத் தொலைபேசி மூலம் இடமாற்றங்கள் அறிவிக்கப்படுகின்றன.

மேலும் மேன்முறையீடு செய்வதற்காகச் சென்ற ஆசிரியர்கள் ஆளுநரைச் சந்திக்க அனுமதிக்கப்படாமல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களால் ஆளுநர் அலுவலகத்தில் வைத்துத் துரத்தப்பட்டுள்ளனர். ஆனால் இந்த ஆசிரியர்களில் சிலர் மறுதினம் அதிகாரிகள் இல்லாத நேரம் ஆளுநரை நேரடியாகச் சந்தித்து மேன்முறையீட்டைச் சமர்ப்பித்த போது மனித நேயத்துடன் ஆளுநர் இவர்களின் விடயத்தை அணுகி இடமாற்றங்களை இரத்துச் செய்துள்ளார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# ஸ்கந்தபுரம் புனித அந்தோனியார் முன்பள்ளி

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் புனித அந்தோனியார் முன்பள்ளி 19 ஆம் ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடியுள்ளது.

1993 ஆம் ஆண்டு மே 5 ஆம் திகதி தொடங்கப்பட்ட இந்த முன்பள்ளி தனது 19 ஆவது ஆண்டு நிறைவு நாளில் புதிய கட்டடத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-410)

# கெழுத்திக் கருவாடு



சுவையான கருவாடு: மன்னார் பள்ளிமுனைக் கடற் பகுதியில் பிடிக்கப்படும் கெழுத்தி மீன்கள் பதப்படுத்தப்பட்டு கருவாடாக உலர விடப்பட்டுள்ளன. (601)

மன்னார்,மே 15

மன்னார் மாவட்டத்தில் தற்போது பலத்த காற்று வீசுகின்ற காலநிலை காணப்படுவதால் மீனவர்களின் கடற்றொழிலில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இத்தகைய காலநிலையே எதிர்வரும் நான்கு மாதங்களுக்கும் நிலவுமென மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் அவர்களின் வருமானத்தில் பெரும் பின்னடைவு ஏற்படுமென அவர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த நிலையில் மன்னார் பள்ளிமுனைக் கடற் பகுதியில் தொழில் செய்யும் மீனவர்களின் வலைகளில் கெழுத்தி எனப்படும் ஒருவகை மீன் தற்போது பிடிபடுகின்றது. இந்த மீன்களைப் பதனிட்டுக் கருவாடாக மாற்றும் நடவடிக்கைகளில் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒரு கிலோ கெழுத்தி மீன் கருவாடு கிலோ 200 ரூபாவுக்கு விற்பனையாகின்றது.

தென்பகுதி வர்த்தகர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் இந்தக் கெழுத்திக் கருவாட்டை அதிகம் கொள்வனவு செய்து செல்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SPOKEN ENGLISH**

அனுபவமிக்க ஆசிரியரினால் 3 மாதத்தில் ஆங்கிலம் சரளமாகப் பேச, கூட்டாகவோ, தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது உங்கள் இல்லங்களில் கற்பிக்கப்படும்.
அழையுங்கள் :- 0770357307
34, ஜமுனா வீதி, கல்வியங்காடு.

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள CALIBER -115 2004 மொடல் மோட்டர் பைக் விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு:- 0786475419

**கோழிக்குஞ்சு விற்பனைக்குண்டு**

தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட முதற்தர புறொயிலர் கோழிக் குஞ்சுகள் ரூபா 60/= மற்றும் சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் (Brown - Layers) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778318422 (நாவற்குழி)
0777490914 (சாவகச்சேரி)

**வீடு வாடகைக்கு**

நல்லூர், Temple Road இல் 5 அறைகளுடனும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு. தனியார் நிறுவனங்களுக்கு மட்டும். தொடர்பு: 0717831852

**விற்பனைக்கு**

யாழ். மானிப்பாய் வீதிக்கு அண்மித்ததாக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு முற்புறமாக 15 பரப்பளவிலான வயல் நிலம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778733317

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்ப, 5' 8'' உயரமான, 1973 இல் பிறந்த, M.B.B.S டாக்டர் மகனுக்குப் பொருத்தமான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு: 0718473884,
0771723464

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்.பலாலி வீதி, ஊரெழுவில் 3அறைகள், சமையலறை, வரவேற்பறை, குளியலறை (சுடுநீர் வசதியுடன்) சுற்று மதிலும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள், கம்பனிகள் விரும்பத்தக்கது. தொடர்பு: 0779937402.

**வீடு வாடகைக்கு** கண்டி வீதி, மாம்பழம் சந்திக்கு அருகில் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனத் தரிப்புடன் 3அறை வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனம் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0776909284.


# மின்சாரம் தாக்கி கடும் எரிகாயங்கள்

யாழ்ப்பாணம், மே 15

கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை தளம் (பிளாற்) அமைப்பதற்காக இருப்புக் கம்பியை மாடியில் நின்றவாறு மேலே எடுத்தபோது அது மின்சாரக் கம்பியில் தட்டுப்பட்டதில் மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி கடுமையான எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் புத்தூர்ச் சந்தியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்த பூவிலிங்கம் இராஜேஸ் கண்ணா (வயது 33) என்பவரே உடலின் பல இடங்களிலும் எரிகாயங்களுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார். (ஒ-4)


**வீடு விற்பனைக்கு**

நல்லூர், செட்டித்தெருவுக்கு அண்மையில் 639/4, நாவலர் வீதி என்னும் முகவரியிலுள்ள 2 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. சுற்றுமதிலுடன் கூடியது.
தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி இலக்கம்:- 0772267191.

**வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் பொஸ்கோ பாடசாலை அண்மிய மருதடி வீதியில் சகல வசதியுடன் கூடிய நான்கு அறைகளும் இரண்டு வரவேற்பறைகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 0779955754, 0750405806.

**இறைச்சிக் கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

**வேலைக்கு ஆள் தேவை**

கைதடியில் உள்ள லங்கா எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பின்வரும் வேலைகளுக்கு அள்கள் தேவை. 1. லிகிதர் (காசினை கையாளுபவர்) 2.எரிபொருள் நிரப்புநர் (பம்பர்). தொடர்புகள் கடிதம் மூலமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம், கைதடி.

## AGS SHARMA & CO.

(Chartered Accountants)
G.S.Swaminathan Sharma
MBA(UK), FCA (SL), FCMA (UK), CMA (AUS), FSCMA (SL)

**நாங்கள் பின்வரும் சேவைகளை உங்களுக்காக வழங்குகிறோம்**

காசேடு, பேரேடு தயாரித்தல், கணக்காய்வு அறிக்கை, வருமான வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, பொருளாதார சேவைகள் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, நிறுத்தி வைத்தல் வரி, சமூகப் பொறுப்பு வரி, ஏனைய வரிச் சேவைகள்.

வியாபாரப் பதிவு (வரையறுக்கப்பட்ட கம்பனிகள், பங்குடமை, தனிநபர் வியாபாரம்) வியாபார இலச்சனைப் பதிவு, பதிவு செய்யப்பட்ட செயலாளர், (பதிவு இல: SEC/(02) 2005/ 173) முதலீட்டு சபை பதிவு ஆலோசனை, முகாமைத்துவ ஆலோசனைகள், ஆரம்பிக்கும் தொழிலுக்குரிய ஆலோசனைகள், கற்கை நெறி அமைப்பு, விரிவாக்கம்.

Address:-
139, Hospital Road,
Hospital Junction,
Jaffna.

Tel: 0212224589, 0777802900, 0212228258
E-Mail: agsjaffna@gmail.Com
Swaminathan@agsarma.Com

BRANCH: # 155/ 18-1/ 1, Messenger Street,
Colombo- 12,
Sri Lanka.

E-Mail: audit@agsarma.Com
Tel: 0113133044, 3158480, 2435666.

## ஹீரோ, கென்டன் காட்சியறை



HERO CYCLES
KENTON

சிறியோர் முதல் பெரியோர் வரையான அனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்களை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

சிறுவர்களின் மின்சார மீள்நிரப்புக் (Recharchable) கார்களை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்



ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்
ஸ்ரார் ரேடர்ஸ்
இல.258, 260, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4921672

## வீடு வாடகைக்குண்டு

சாவகச்சேரி, நுணாவில் மத்தி, ஏ-9 வீதியில் ஐந்து அறைகள், Hall, சமையல் அறை, குளியல் அறை, ஐந்து பரப்பளவுள்ள வாகன தரிப்பிட வசதியுடைய, நாற்சார்வீடு (3672 சதுர அடி) வாடகைக்கு உண்டு.

நிறுவனங்கள், கம்பனிகள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0716419047

**மோட்டார் சைக்கிள் விற்னைக்கு**

ஒரு கைப்பாவனையில் உள்ள பொக்சர் டபிள் சீற் (VDxxxx) மொடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. சுந்தரம் ஸ்ரோர்ஸ், சீனியர் லேன், யாழ்ப்பாணம்.

**ஜேர்மனியில் பல்கலைக்கழகங்களின் உயர் கல்வி**

G.C.E-A/L முடித்தவர்கள் மட்டும் மிகவும் குறைந்த கட்டணம், பகுதி வேலை வாய்ப்புடன் கூடிய மேற்படிப்பைத் தொடர்வதற்கு.
[4193] தொடர்பு: 0716419050

**அக்குபஞ்சர்/மாற்று வைத்தியம்**

பாரிசவாதம் உட்பட சகல நோய்களிடமிருந்து நிவாரணம் பெற்றிட நாடுங்கள்
ஷென்மென்அக்குபஞ்சர் வைத்தியசாலை
இல.34, ஜமுனா வீதி, கல்வியங்காடு, நல்லூர். 0770357307
[4179]

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணக் கச்சேரி பொஸ்கோ பாடசாலையை அண்மித்த பகுதியில் இல. 2/1, றக்கா லேனில் வீட்டுடன் 2 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0779955754, 0750405806.

**தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்யமான Chartered Accounting நிறுவனத்துக்கு பயிலுனர்கள் தேவை. கணக்கியல் துறையில் கல்வி கற்பவர்கள் விரும்பத்தக்கது. ஆவர்வமுள்ளவர்கள் உங்களது சுய விவரக் கோவையை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
[illegible]
swaminathan@agsarma.com


**ஓராண்டு நினைவஞ்சலி**



அமரர் வேலுப்பிள்ளை
செல்லாச்சி
(மண்டைதீவு)

அன்னையின் மடியில்:
19.12.1926

கர்த்தரின் பாதத்தில்:
15.05.2010

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது
(சங்கீதம் 116:15)

ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவு அழியவில்லை அம்மா உங்களை நினைவு கூர்ந்து ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சகோதரி : தங்கமேனி,
உறவினர்கள்.
இல.16, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(48,19,20)

**யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை பாடசாலை அபிவிருத்தி சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2011**

தலைவர்: திருமதி சிவமலர் அனந்தசயனன் (அதிபர்)
இடம்: துரையப்பாபிள்ளை மண்டபம்
காலம்: 29.05.2011 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.30 மணி

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திருமதி சி.அனந்தசயனன், தலைவர்.
வை.சிவராசா, செயலாளர்.
(சி/010)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மயிலங்காடு, ஏழாலை தெற்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணியளவில் யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயக் கேட்போர் கூடத்தில் நிலையத் தலைவர் கருணைநாதன் அபராசுதன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது என்பதனை அறியத் தருகிறோம்.

நிர்வாகம்.
(சி/4008)


**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA No-1 புறொயிலர் குஞ்சுகள் 19.05.2011 விநியோகிக்கப்படும்.

விலை 90 கூடுதல்கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். இறைச்சிக் கோழிகள் மீண்டும் கொள்வனவு செய்யப்படும்.

* ராஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்
* ஜென்சிபாம், முதலாம் கட்டை, பருத்தித்துறை

T.P.: 021 222 2867, 0776090926

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஞ்சியூரான்




பெண்ணின் உடல் வளர்ச்சியும் உளவளர்ச்சியும் மிகத் துரிதமாக நடைபெறுவன. இயற்கையின் கொடை என்றும் இதனைக் கூறலாம். பெண் என்ற சொல் 'பேண்' என்பதன் குறுக்கம் என்பர். அதனால் எல்லாவற்றையும் பேணவேண்டிய பொறுப்பு பெண்ணுக்கேற்பட்டது. 'ஆண்' என்ற சொல் 'ஆள்' என்ற வினையடியிருந்து அமைந்த சொல்லென்பர். அதனால் எல்லாவற்றையும் ஆளவேண்டும் என்ற குண இயல்பு ஆணுடையதாயிற்று. சங்க இலக்கியங்களில் இக்கருத்துப் பாடல்களூடாகப் பேசப்பட்டுள்ளது. இன்பவாழ்க்கையில் குறிப்பாகக் காம இன்பத்தை அனுபவிப்பதில் ஆண் அதிக நாட்டம் கொண்டிருந்தான். அதனால் காம இன்பத்தைக் கொடுப்பதற்கெனப் பெண்களிடையேயும் ஒரு குழுவினர் உருவாகியிருந்தனர். அவர்கள் 'காமப்பரத்தையர்' எனச் சிறப்புப் பெயர் பெற்றிருந்தனர்.

இத்தகைய பரத்தையர் குடும்ப அமைப்பின் சிதைவுக்குக் காரணமாக இருந்தனர் என்று சங்கப்புலவர்கள் கூறமுற்படவில்லை. ஆண்களின் சுயநலமான போக்கே பரத்தமையொழுக்கம் சமூகத்தில் நிலை பெற வாய்ப்பளித்தது.

எனவே அதனைப் பற்றிய தெளிவை ஏற்படுத்தச் சங்கப்புலவர்கள் முயற்சி எடுத்துள்ளனர். மருதத் திணைப் பாடல்களில் தோழி கூற்றாக வரும் பாடலமைப்பில் தம் நோக்கத்தை நிறைவேற்றியுள்ளனர் எனலாம். பின்வரும் பாடல் மூலம் இந்தக் கருத்தைத் தெளிவுபடுத்தலாம்.

*''யாயாகியளே விழவு முதலாட்டி*
*பயறு போலிணர பைந்தாது படீஇயர்*
*உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்*
*காஞ்சி யூரன் கொடுமை*
*கரந்தன ளாகவின் நாணிய வருமே''*

*[குறுந்தொகை:10]*

சங்க இலக்கியங்களில் சித்திரிக்கப்படும் சமூக வாழ்வியல் சில மரபான நடைமுறைகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. சிறப்பாகக் குடும்ப வாழ்வியல் நடைமுறைகளில் பண்பாடுபேணும் பொறுப்பானது பெண்ணுக்குரியதாகவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. திருமணம் முடித்த பெண் பண்பாட்டுப் பேணலுக்காகப் பல துன்பங்களையும் கொடுமைகளையும் சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது. இந்தச் சகிப்புத் தன்மை பெண்ணின் சிறப்புக்குணமாகும். அதனைப் புலவர்கள் பாடல்களிலே பதிவு செய்துள்ளனர்.

''யாயாகியளே'' என்ற தொடர் பெண்மையின் மேன்மைக்குணமான தாய்மைக் குணத்தை விளக்கி நிற்கிறது. திருமணம் முடிந்த பின்னர் பெண் தாய்மையடையும் போது கோலமும் மாறுகின்றது. ஒரு குழந்தையைத் தனது வயிற்றிலே தாங்கியிருக்கும் கோலம் இயற்கை பெண்ணுக்கு அளித்திருக்கும் ஒரு கொடையாகும்.

ஆண் அந்தக்கோலத்தின் பண்பாட்டு நிலையைக் கருத்திற் கொள்ளாமல் காம வயப்பட்டு நிற்பதைப் பல சங்கப்பாடல்கள் சுட்டிக் காட்டியுள்ளன. தாய்மை அடைந்திருக்கும் பெண்ணைத் தனது பரத்தமை ஒழுக்கத்தினால் உளரீதியாக ஆண் துன்புறுத்துகின்ற இழிவான நிலையைப் புலவர்கள் அவதானித்துள்ளனர். அதனை ஏனையோரும் அறியப்பாடற் பொருளாக்கியுள்ளனர்.

'விழவு முதலாட்டி' என்ற தொடர் பெண்ணினுடைய வழிபாட்டு நடைமுறை தொடர்பான பங்களிப்பைச் சுட்டி நிற்கிறது. தாய்மைப்பேறு பெற்ற பெண் குடும்பத் தலைவியாகப் பொறுப்பேற்கிறாள். இல்லக்கிழத்தியாக அவளைப் புலவர்கள் காட்சிப்படுத்துகின்றனர். ஆண் ஒருவனுடைய காதற்கிழத்தியாக இருந்த பெண் தாய்மை அடைந்தவுடன் இல்லக்கிழத்தியாகிறாள். அவளே வழிபாட்டு நடைமுறைகளையும் தொடக்குகின்ற தலைமைத்துவப் பொறுப்பையும் ஏற்கிறாள். அதாவது அவளால் நிர்வகிக்கப்படும் இல்லத்தில் நடைபெறும் பண்பாட்டு நிகழ்வுகள் அனைத்தையும் முன்னின்று செய்யும் 'முதலாட்டி' ஆகிறாள்.

அவளுடைய கணவன் பற்றிய காட்சிப்படுத்தல் அடுத்த அடிகளில் அமைக்கப்பட்டுள்ளது. பயறு போன்ற பூக்களிலிருந்து பசிய தாதுகள் படிந்திருக்கும் நறுமணம் வீசுகின்ற மென்மையான பூக்கொம்பர்களை உழவர்கள் வளைக்கின்ற காட்சி.

காஞ்சிமரங்கள் நிறைந்த வளமான ஊர் அதனால் அவன் காஞ்சியூரான் எனக் குறிப்பிடப்படுகின்றான். 'உழவர்' என்ற சொல் மருதநிலத்துக்குரிய உழவுத் தொழில் செய்வோரைக் குறிப்பிடுகின்றது. நீர்வளமுள்ள வயலும் வயல் சார்ந்த இடமும் மருதநிலம் என வழங்கப்பட்டது. இந்த நிலத்தில் நிரந்தரமான குடியிருப்புக்கள் தோன்றியிருந்தன. அந்தக் குடியிருப்புக்களில் குடும்ப வாழ்வியல் நடைபெற்றது. வளமுள்ள நிலமாகையால் உணவுத் தேட்டம் நீண்ட காலத்துக்குப் பயன்படுத்தக் கூடியதாகவும் இருந்தது. அதனால் ஓய்வுநேரம் கிடைத்தது. அந்தநேரத்தில் பொழுதுபோக்குக் கலைகளில் நாட்டம் சென்றது. பாணர் என்னும் இசைக்குழுவினர் ஆடல், பாடல் வல்ல பெண்கள் பொழுதுபோக்க உதவினர். இது இளமையும் அழகும் கொண்ட இளம் பெண்களின் பங்களிப்பாக இருந்தமையால் அதனுடன் காமக்களியாட்டமும் இணைய வாய்ப்பாயிற்று.

இந்த வாய்ப்பு செல்வச்சிறப்புப் பெற்ற குடும்பத் தலைவரால் பரத்தையர் எனப்படுகிற பெண்கள் கூட்டம் தோன்றி வளரக் காரணமாயிற்று. காம இன்பத்தைப் பொருள் கொடுத்துப் பெறலாம் என்ற நடைமுறை ஏற்பட்டது. இந்த வாய்ப்பை ஆண் நன்கு பயன்படுத்திக் கொண்டான். உறுதிமொழி செய்து ஆணும் பெண்ணும் இணையும் கற்பொழுக்கத்தைக் கைவிட்டான். தன் பொருள் பலத்தால் மனைவியையும் பரத்தையையும் தனக்குச் சேவை செய்வோராக எண்ணினான்.

ஆண்மகனின் இத்தகைய கொடிய செயற்பாட்டையே இப்பாடல் 'ஊரன் கொடுமை'யெனப் பதிவு செய்துள்ளது. இத்தகைய கொடுமை பெண்ணால் பொறுமையாக எதிர்கொள்ளப்பட்டது.

இத்தகைய பெண் தன்னையும் தன் கணவனையும் இணைத்து வைத்த தோழியிடமே பெண் கணவனின் பரத் தமையொழுக்கத்தை மறைத்து வாழ்கிறாள். ஆனால் தோழி அதை முன்னரே அறிந்துள்ளாள். தன்தோழியின் தாய்மைப் பண்பைக் கண்டு வியக்கிறாள். இவ்வியப்பு உண்மையிலேயே பாடலைப் பாடிய புலவருக்கே ஏற்பட்டுள்ளது.

'நாணியவருமே' என்ற தொடரில் பரத்தமை மேற்கொண்ட கணவனைப் பற்றிய செய்தியைத் தோழி அறிந்திருப்பாளோ என்ற ஐயத்தோடு வெட்கப்பட்டு வருகின்ற பெண் காட்சிப்படுத்தப்பட்டுள்ளாள். எல்லா நடைமுறைகளையும் தலை நிமிர்ந்து செய்யும் தகுதி பெற்ற குடும்பப்பெண் தலைகுனிந்து வரும் காட்சியிது.

புலவர் பெண்ணின் மனோநிலையை நன்குணர்ந்து அதற்கேற்ற பெண் மொழியிலேயே பாடலை அமைத்துள்ளார். வளமான வாழ்வு நடத்தும் நிலையாக இருந்தபோதும் உள்ளூரத் துன்பம் அனுபவிக்கும் பெண்ணின் மௌன மொழியைப் புலவர் தோழி கூற்றாக்கியுள்ளார். இந்தப் பாடலைப் பாடிய ஓரம்போகியார் பல மருதப் பாடல்களைப் பாடியுள்ளார். குறுகிய பாடலில் பெண்ணின் துன்பத்தைப் புலப்படுத்தி அகப்பொருள் இலக்கணம் கூறும் ஊடல் நிமித்தத்தை விளக்கியுள்ளார். 'கமழ்பூ மென்சினைக் காஞ்சி' என்ற தொடர் பெண்ணுக்கு உருவகமாக உள்ளது.

அழகு, இளமை, தாய்மைப் பண்பு என்பன இருந்தாலும் ஒரு பெண்ணை ஆண் எவ்வாறு வஞ்சிக்கிறான் என்பதைப் புலவர் இப்பாடல் மூலம் விளக்கியுள்ளார். மருதப் பாடல்களில் ஆண் எவ் வாறு 'குடும்பம்' என்னும் அன்பான இணைப்பைச் சிதைக்கிறான் என்பது தெளிவாக எடுத்துக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.



கலாநிதி
மனோன்மணி
சண்முகதாஸ்



# உடல் மட்டுமா ஊனமானது?

சிறுகதை

காதைப் பிளக்கும் அளவுக் குச் சந்திரமுகியில் வருமம் ''ரா... ரா...ரா...'' என்னும் பாடல் ஒலிக் கிறது. சிறுவர்கள் நல்ல ஸ்ரைலாக ஏதோ தமக்குரிய பாணியில் ஆடி மகிழ்கிறார்கள். இடையி டையே பலூன்கள் படார் படார் என வெடிக்கின்றன. எங்கும் நவீன சிங்கப்பூர் சோடிணைகள் அழகாய் அடுக்கப்பட்ட பிளாஸ்ரிக் கதிரைகள். கதிரைகளில் ஸ்ரைலாக பலகாரத் தட்டுடன் இருக்கும் பெண்கள். வீடியோவுக்கு ஆகவே கேக்கை ஸ்ரைலாகச் சாப்பிடும் பெண்கள் கூட்டம். வீடியோக்காரர்கள் தமது புகழை நிலை நாட்ட ஓடி ஓடி அழகான சோடணை களையும் பெண்களையும் சுற்றிச் சுற்றித் தமது வீடியோவுக்குள் அடக்கிக் கொண்டிருந்தனர். இவை யாவற்றையும் பார்க்கின்றபோது ஏதோ உயர்ந்த வீட்டு விசேஷம் ஒன்று நடக்கின்றது என்பது சொல்லாமலேயே புரிந்துவிடும். ஆம் அது ஒரு பிறந்தநாள் கொண்டாட்ட வீடு.

அருந்தவனுடைய மூன்றாவது பிறந்தநாள். அதுதான் இன்றைக்கு அந்த வீட்டில் களைகட்டி இருக்கும் விசேட நிகழ்வு. ரவி,கமலா தம்பதிகளின் செல்வப் புதல்வனும் ஏக புதல்வனும் ஆன அருந்தவன் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றான். ரவியும் கமலாவும் திருமணம் செய்து நீண்ட காலமாகப் புத்திர பாக்கியமே இல்லை. போகாத கோயில் இல்லை. வேண்டாத தெய்வம் இல்லை. செய்யாத நேர்த்தியோ, பார்க்காத வைத்தியரோ இல்லை.

திருமணமாகிப் பத்து வருடத்தின் பின்தான் கடவுள் கண்ணைத் திறந்தார். ஒரு மகன் பிறந்தான். அருந்தவங்கள் பல செய்து பிறந்தவன் என்பதால் அருந்தவன் என்று பெயர் இடப்பட்டு செல்லமாக வளர்க்கப்பட்டான்.

அருந்தவனுடைய பிறந்தநாளில் இன்று இரட்டிப்பு மகிழ்ச்சி என்ன என்றால் பல வருடங்களின் பின் ரவி, கமலா ஆகியோரது சொந்த இடத்தில் அவர்களது சொந்தவீட்டில் தமது பிள்ளையின் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர்.

புன்னாலைக்கட்டுவனில் இருந்து இடம்பெயர்ந்து சென்று அகதி வாழ்க்கை வாழ்ந்து பல இடங்களிலும் சீரழிவுப்பட்டு அலைக்கழிந்துவிட்டு இப்போதுதான் ஓரளவு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின்றனர்.

தமது சொந்த இடத்துக்குச் சென்றபின்தான் தமது பிள்ளையின் பிறந்தநாளைக் கொண்டாடுவது என்ற வைராக்கியத்தில் இருந்தனர். இன்றுதான் அதற்குப் பலன் கிடைத்தது. அதுதான் மூன்றாவது பிறந்தநாளை முதலாவது பிறந்தநாள் கொண்டாடுவதை விடச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

ரவியினதும் கமலாவினதும் சகோதரர்கள் யாவரும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்றனர். எனவே அவர்களுக்குத் தமது சொந்த இடத்தை ஒளிநாடாக்களிலாவது பார்க்க வேண்டும் என்ற ஆசை. எனவே சிறப்பாக வீடியோ எடுக்க வேண்டிய தேவையும் இருந்தது. ''சொர்க்கமே என்றாலும் அது நம்மூரு போல வருமா'' என்ற பாடலை சும்மாவா பாடினார்கள்.

அருந்தவன் மூன்று மெழுகுதிரியை யும் ஊதிக் கேக் வெட்டியபின் பல கோணங்களில் நின்று ஸ்ரைலாகப் படம் எடுத்தார்கள். பெற்றோரினதும் மற்றோரினதும் மனம் மகிழும் வகையில் அருந்தவனும் ''போஸ்'' கொடுத்து புகைப்படக்காரரின் வேலையை இலகுவாக்கினான். தனது வீட்டுக்கு அருகருகே இருக்கும் தமது சகோதரர்களின் வீடுக ளும் தெரியும் வகையில் வீடியோ எடுக்க ஆசைப்பட்டாள் கமலா.

எனவே ''மிக்ஸிங் '' பாணியில் வெளியில் வைத்து வீடியோ எடுக்க முடிவு செய்தனர்.

கஜநந்தினி, யாழ்ப்பாணம்.

வீடியோக்காரரும் தமது வீடியோவை விளம்பரப் படுத்தும் வகையில் அவனை வெளியில் உள்ள மரங்களின்கீழ் அழகாகப் படம் எடுத்தனர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
17.11.1937

இறைவனடியில்
15.05.2010

**அமரர் தம்பிராசா**
**திருஞானசம்பந்தர்**

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எம் துயர்

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:
த.கணேசலிங்கம் (சகோதரன்).

வேலக்கைப்பிள்ளையார் கோயிலடி,
மானிப்பாய்.

## மரண அறிவித்தல்

### திருமதி முத்துலிங்கம் இராசலட்சுமி (கிளி அக்கா)



நீராவியடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி முத்துலிங்கம் இராசலட்சுமி 13.05.2011 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற சுப்பையா முத்துலிங்கத்தின் மனைவியும் காலஞ்சென்ற அன்னம்மா, நல்லம்மா, முத்துலிங்கம்,துரையம்மா மற்றும் தையல்லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அனுசியா, அருளானந்தம் (ஜேர்மனி), சத்தியா, சிவானந்தன், பிறேமஜா ஆகியோரின் பாசமிகு தாயும் கிருஷ்ணமூர்த்தி, இந்துமதி (ஜேர்மனி), புவனேஸ்வரி, தர்மராஜா ஆகியோரின் அன்பு மாமியும் ஆதவன்,கஜலக்ஷி, அபிராம், விதுஷன் (ஜேர்மனி), நிதர்சன்(ஜேர்மனி), மதிநிலவன், மதுசுதன், மதுமிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று அவரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

215, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (4215)

## மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,மே 15

மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணி வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.பிறப்புச் சான்றிதழ், திருமணப் பதிவுச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியன இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற இந்த நடமாடும் சேவையில் ஏற்பாடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## நகை ஏல விற்பனை பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,மே 15

மக்கள் வங்கியில் இன்று ஞாயிறு நடைபெறவிருந்த நகை ஏல விற்பனை தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளதாகப் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். ஏல விற்பனைக்கான அடுத்த திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஏ)

## அறைகள் வாடகைக்கு

மடம்வீதி, திருநெல்வேலியில் (மருத்துவ பீடத்துக்கு அருகில்) சகல வசதிகளுடனும் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு.University மாணவர்களுக்கு உகந்தது. (பெண்கள் மட்டும்)

தொடர்பு: 0772627818

## மின்சார இயந்திரமூலம் நவீன அப்பள உற்பத்தி மெசின் விற்பனை

கைத்தொழில் முதலீட்டாளர் - சிறுகைத்தொழில் முயற்சியாளர் உற்பத்தித் தொழிலில் ஈடுபட (அப்பள உற்பத்தி) உடன் மின் மூலம் இயங்கும் 3 புத்தம் புதிய மெசின்கள் விற்பனைக்குண்டு. முதலில் தொடர்பு கொள்பவர்கள் உடன் பெறலாம். (அப்பள உற்பத்தியில் பிரத்தியேக தயாரிப்பு மெசின்கள்)

(012)(41) தொடர்பு:0775226462

## பெயர் மாற்றம்

இதுவரை மாணிக்கம் புஸ்பராணி என அழைக்கப்பட்ட எனது பெயரை இன்று முதல் மாணிக்கம் சுகந்தி என மாற்ற விரும்புகின்றேன்.

இன்று முதல் (15.05.2011) நான் சகல ஆவணங்களிலும் மாணிக்கம் சுகந்தி என்றே கையொப்பம் இடுவேன்.

(4218) மாணிக்கம் சுகந்தி.

## நவீன ரக மாடி வீடு மானிப்பாயில் வாடகைக்கு

வலி.தென்மேற்கு - மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் மத்தியில் (Commercial Bank, Peoples Bank அருகில்) யாழ்.பிரதான வீதியில் சகல நவீனவசதிகளுடன் முற்றாக மாபிள் பதிக்கப்பட்ட மேல் மாடியில் 6 அறைகளும் கீழ்த்தளத்தில் 5 அறைகளும் விசாலமான மண்டபத்துடன் கூடிய 5400 சதுர அடிப்பரப்புடைய அழகிய பெரிய வீடு உடன் வாடகைக்கு உண்டு. மேலும் தனிக் கிணறும் வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு. தனியார், அரச நிறுவனங்கள், வங்கிகள்,NGO க்களுக்கு மிக உகந்தது.

தொடர்பு:
(011)(41) 0716831554, 0779116301

## STUDENT VISA

**UK | NEW ZEALAND | CYPRUS**

- ஜீலை மாதத்திற்கான கல்லூரி அனுமதிகள்
- உடனடிப்பயணம்
- IELTS இன்றியும் விண்ணப்பிக்கலாம்
- O/L இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்
- வயதெல்லை 16-40 வரை
- இலவச ஆலோசனைகள்

HOTLINE
0755 091 091

10 வருடம் அல்லது வேறுவகையில் வீசா நிராகரிக்கப்பட்டவர்கள் எமது சட்டத்தரணியின் உதவியுடன் மீள் முறையீடு செய்து தரப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 31.05.2011 | Reg No: PV67191

**GREENWICH COLLEGE (PVT) LTD**

34, Galle Road, Dehiwala.
(Opp. Municipal Council, Dehiwala)
T: 011 2 713 214
E: info@greenwich.lk



## யாழ்.நகரின் மத்தியில் (பஸ் நிலையம் முன்) இன்று முற்பகல்10.00 மணி சுப நேரத்தில்



# சண்ஜெயா உணவகம்

15.05.2011 **SUNJEYA FOODLAND**

என்னும் உணவகம் புது நிர்வாகத்தின்கீழ் புதுப் பொலிவுடன் உங்கள் முன்

எமது தயாரிப்புக்களில் சில

- பிறைட்றைஸ்
- புரியாணி
- சாப்பாடு
- கொத்து றொட்டி

(சிக்கன்,மட்டன், கணவாய், இறால், மீன், முட்டை, மரக்கறி.)

- அனைத்து வகையான காலை, மதியம், இரவு உணவுகள்
- இவற்றைவிடக் குளிர்பான வகைகள்
- ஐஸ்கிறீம் வகைகள்
- சிற்றுண்டிகள் (றோள், பற்றீஸ், கட்லட்)

இன்னும் பல

சுத்தம் சுவை தரம்




குறிப்பு: களியாட்ட நிகழ்வுகள், வேறு விழாக்கள், நிகழ்வுகள் அனைத்துக்கும் ஒடர்கள் உடனுக்குடன் விசேடமாகக் கவனிக்கப்படும்.

# சண்ஜெயா உணவகம்

414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(H.N.B. க்கு அருகில்)

புதிய நிர்வாக உறுப்பினர்கள்.

(49,21,25)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழுக்கு ஆங்கிலம் (14)

தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்துச் சொற்கள் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

**'ம' வரிசையில்**

மகன் : Son
மகள் : Daughter
மகுடம் : Crown
மயானம் : Cemetery
மஞ்சள் : Turmeric
மண் : Earth
மணல் : Sand
மணமகன் : Bridegroom
பாலம் : Bridge
மருமகள் : Daughter in Law
மணி : Bell
மண்டபம்:Hall
மதியம்:Noon
மந்தி:Monkey
மந்திரி:Minister
மந்தை:Herd
மயக்கம்:Faintfulness
மயிர்:Hair
மயில்:Peacock
மயினா:Mynabird
மரம்:Tree
மரணம்:Death
மரபு:Tradition
மரியாதை:Respect
மருந்து:Medicine
மருமகன்:Son in Law
மர்மம்:.Myestery
மலை:.Mountain
மலிவு:Cheap
மல்லி:Coriander
மழை: Rain
மறதி:Forgetfullness
மறியல்:Prison
மறுமொழி:Reply
மனம்:Mind
மனசாட்சி:Conscience
மனைவி: Wife
மனிதன்:Human
மடையன்:Fool
மஞ்சள் நிறம்:Yellow colour
மறுப்பு: Rejection
மக்கள்:People
மன்னன்:King
மல்லன்:Wrestler
மணம்:Smell

**'மா' வரிசையில்**

மாதம்: Month
மாலை:Evening , garland
மாவு:Flour
மாடு:Cow, Bull
மாகாணம்:Province
மாடி:Flat, Storey
மாணவன்:Student
மாப்பிள்ளை:Bridegroom
மாமிசம்:Flesh
மாம்பழம்:Mangofruit
மார்கழி:December
மாளிகை:Palace
மாற்றம்:Change
மான்:Deer

**'மி' வரிசையில்**

மிருகம்:Animal
மிளகு:Pepper
மிட்டாய்:Sweet meat
மித்திரன்:Friend
மிளகாய்:Chilly
மின்சாரம்:Electricity
மின்னல்:Lightning

**'மீ' வரிசையில்**

மீசை:Moustache
மீறு:Violate
மீன்:Fish
மீனவன்:Fisher man
மீள் குடியமர்வு:Resettlemen
மீண்டும் வா:Come again

**'மு' வரிசையில்**

முகம்:Face
முற்றம்:Court yard
முகப்பு:Front portion
முகரு:Smell
முகில்:Cloud
முகூர்த்தம்:Auspicious time
முக்கால்:Three fourth
முக்கியம்:Important
முக்கோணம்:Triangle
முதலை:Crocodile
முடக்கு:Corner of a road
முடி:Crown, Hair
முடிவு:End
முட்டாள்:Folish Person
முட்டை:Egg
முதல் :first
முதியவர்:Elder Person
முதுகு:Back
முதுமை:Oldness
முத்தம்:Kiss
முத்திரை:Stamp
முத்து:Pearl
முயல்:Hare
முயற்சி:Attempt
முழங்கால்:Knee
முனிவர்:Hermit
முன்னணி:Front line
முன்னோர்:Ancestors

தொகுப்பு:ரம்யன்

(வளரும்)

## தவிப்பு



நண்பி!
என் பாசம்
புரியாமல் என்னை விட்டு
வெகுதூரம் சென்று விட்டாய்
நான் தினம் படும் வேதனை
உனக்கு ஏன் புரியப் போகிறது?
ஆனாலும் என்றோ ஒரு நாள்
என்னுடன் வந்து சேர்வாய்
என்ற நம்பிக்கையில் இன்றும்
உயிருடன் வாழ்கிறேன்

சி.நித்யா,
நாகர்கோவில்.

## விடை தெரியுமா? 107

1) தாவர உணவுகளை மட்டுமே உண்ணும் சிலந்தியினம் ஒன்றினைத் தற்போது கண்டு பிடித்துள்ளனர். அச்சிலந்தியின் பெயர் என்ன?

2) பாகிஸ்தானில் பதுங்கியிருந்த சர்வதேச தீவிரவாதியும் அல் குவைதா பயங்கரவாதத்தின் தலைவராகவும் இருந்து அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டவர் யார்?

3)தென்னாபிரிக்க நாட்டின் ஜனாதிபதியின் பெயர் என்ன?

4) சர்வதேச அன்னையர் தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது

5) தாய்லாந்து நாட்டின் பிரதமர் யார்?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 21.05.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடைகள் 105

1) இன்டெக்ஸ்.
2) மே 25.
3) சத்தியநாராயணன்.
4) ப்நோம் வெனில்.
5) ஈரான்.


### வெற்றி பெற்றவர் விவரம்

1. வி.டினேஸ்,
தரம் 9,
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

2. வி. நிக்ஷன்,
தரம் 8 ஜ,
யாழ். அரசடி இந்துக் கல்லூரி.

உங்களுக்கும் பரிசில்கள்





தெ.துசாந்,
யா/விக்னேஸ்வராக் கல்லூரி



க.சயந்தன்,
தரம் 6,
யா/புற்றளை மகா வித்தியாலயம்



செ.கஜநிதன்,
தரம் 6,
யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.



ச.தர்சன்,
தரம் 5,
அ.மி.த.க. பாடசாலை, வல்வெட்டித்துறை




## விந்தைச் செய்திகள்

**விந்தையான மனிதர்கள்**

நாம் எல்லோரும்கொக்குகள் ஒற்றைக் காலில் நிற்பதைப் பார்த்திருக்கிறோம். கொக்கைப் போல ஒற்றைக்காலில் வெகு நேரமாக நிற்கும் மனிதர்களைப் பார்த்தது இல்லை. ஆபிரிக்காவில் உள்ள சூடான் நாட்டு ''ஷில்லுகு'' என்ற பழங்குடி மக்கள் அவ்வாறு ஒற்றைக் காலில் நிற்பார்கள். அவர்கள் ஒற்றைக்காலில் நின்றுதான் கடவுளின் அன்பைப் பெறுவார்கள்.

**ஆர்க்கியாப் டெரிக்ஸ்**

இந்தப் பறவைகளுக்குப் பற்கள் இருப்பதில்லை. ஆனால் 15 கோடி ஆண்டுகளுக்கு முன் உலகிலேயே தோன்றிய மு[illegible] பறவையான ஆர்க்கியாப் டெரிக்ஸ் என்னும் பறவைக்கு பற்கள் இருந்தன.

ா.ஜிந்துஜா,
சோன்டவிஸ்.

## சிந்திக்க சில...

★நீங்கள் எப்படிப்பட்ட பிரச்சினைகளைச் சந்திக்கிறீர்கள் என்பது முக்கியமானது அல்ல. எதிர்ப்படும் பிரச்சினைகளை நீங்கள் எப்படிச் சமாளிக்கிறீர்கள் என்பது[illegible]ன் முக்கியம்.

★எதிர்ப்பைக் கண்டு பயப்படாதீர்கள் முன்னேற்றத்துக்கு எதிர்ப்புகள் இன்றியமையாதவைகள். வெற்றி என்ற காற்றாடி எதிர்புக் காற்றை எதிர்த்துக் கொண்டு தான் மேலே பறக்கிறது.

★தனக்குத் தெரியாதவைகள் பற்றிக் கேள்விப்பட்டவன் 5 நிமிடங்களுக்கு முட்டாளாக மற்றவர்களுக்குத் தென்படுவான். கேள்வி கேட்கத் தயங்குபவன் வாழ் நாள் முழுவதும் முட்டாளாகவே இருப்பான்.

★ஆறு அமைதியாக ஓடும் இடங்களில் ஆழம் நி[illegible]றைந்திருக்கும். மௌனமாகச் செயற்படுபவர்களிடம் நிறைய ஞானம் இருக்கும்.

★அறிவும் திறமையும் மிகுந்தவர்களுக்கு பொறுப்புக்கள் நிறைந்த பெரிய பதவிகள் கிடைக்காமல் இருப்பது நம் நாட்டின் மிகப் பெரிய சாபக் கேடாகும்.

★எந்த நினைவு உன்னை அதிகமாகத் துன்புறுத்துகிறதோ அதற்குப் பெயர் தான் பசுமையான நினைவு.

★ எதைச் சிந்திக்கிறாய் என்பதில்லை எப்படி சிந்திக்கிறாய் என்பதில்தான் புதிய கருத்து வரும்.

★சொந்தமாகச் சிந்திக்கத் தெரியாதவனுக்குத் தொலைக்காட்சி தான் தஞ்சம்.

★தொலைக்காட்சி நாடகங்களில் நடிப்பவர்கள் என்னவோ சுய நினைவுடன் தான் நடிக்கிறார்கள். ஆனால் அதைப் பார்ப்பவர்கள்தான் சுயநினைவை இழக்கிறார்கள்.

★ஒரு மனிதனுக்கு இரக்கமும், கோபமும் அதிகமாக இருந்தால் அவனைவிட நல்லவனும் இல்லை. கொடியவனும் இல்லை.

லோ.தானுஜன்,
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதிக்கப் பிறந்தவள் நீ...!



பூவான தோற்றத்தில்
புன்னகைகள் மலர்த்தி
புயலாக வருந்தடைகள் தகர்த்து
போராடு பெண்ணே....!
இவ்வுலகில் - நீ
சாதிக்கப் பிறந்த சக்தியென்றுணர்...
முள்ளாக நெருடும்
முனகல்களை உடைத்தெறிந்து
முன்னோக்கி நட
முடியும் எல்லாம் உன்னால்...

பா.பொன்நிலவன், மீசாலை.

## உருப்படாத ஜீவன்கள்....



சுடுகாட்டு சூழலிலே
வெறிநாய்களின் கிரந்தம்
மனம்கெட்ட மடையர்களின்
அநியாயச் செயல்...
எரிசாம்பல் புகுந்து
இழி செய்யும் துணிவு
பேடிகளை விட - வேறு
எவர்க்கு வரும்....?
மனிதாபிமானத்தை மறந்து
அவர் புரிந்த கொடுமை
அவமானஞ் சுமந்து வாழும்...
யார் வந்து புகட்டி
புரியப் போகிறது
இவர்களுக்குப் பாடம்...?
அன்னையின் அருமைகள்
புரியாத எருதுகள்
பாவம்....
ஓர் அறிவு கொண்ட
உருப்படாத ஜீவன்கள்
இப்படியே உதவாமல் போகட்டும்
இவர் வாழ்வு...

வொ.சுஜந்திரன், யாழ்ப்பாணம்.



## அகதியின் புலம்பல்

### பசி



வீறிட்டு
அழுதது
குழந்தை
பாலுக்கு
கொடுப்பதற்கு
அந்தத் தாயிடம்
கடைசிவரை
இருந்தது
கண்ணீர் மட்டும்தான்

### விதி



உயிரைக் கொடுத்து
உரிமை
கேட்ட நாம்
கடைசியாய்
பவுணைக் கொடுத்து
ஒரு பால்மா பெட்டி
வேண்டினோம்
பெற்ற
பிள்ளையைக் காப்பாற்ற!

### ஆத்மா



எம்மைக்
கொன்று
கொன்று
எம் மண்ணில்
புதைத்[illegible]
பகைவே[illegible]
இந்த உண்மையை
எங்கே புதைப்பாய்?
சொல்!

தேனாள் சுரேஷ், மன்னார்.

## அவள் மட்டும் அழகு

வயது ஏற... ஏற... வரட்சி காணும்
காதலியின் அழகைப் போலல்ல
எப்போதும் மாறாத எழில்மிகு
அழகு இவளின் அழகு

தொடுகின்ற எல்லாப் பொழுதும்
சுகம் தருவதில்லை
காதலியின் அணைப்பு
தொட்டணைக்கும் போதெல்லாம்
சுகம்தர மறப்பதில்லை இவளின் அணைப்பு

சாமி மீது சத்தியம் செய்தால்கூட
சந்தர்ப்பம் வந்தால்
இன்னொருவனுக்குச் சொந்தமாவாள்
இதயக் காதல் சாமியே வந்தும்
சண்டையிட்டு பிரிக்கமுடியா
சத்திய தேவதைதான் இந்தப் பூமணி

பொக்கட்டில் பணமிருந்தால் மட்டுமே
புன்னகை காட்டும் சில
பொம்புளைகள் போலல்ல
பொக்கை வாயாகிப் போன பின்னும்
புன்னகை காட்டியணைக்கும்
கண்மணி இவள்

நேற்றைய உலக அழகி நாளைய கிழவி
நேற்றும் இன்றும் என்றும் - என்
நெஞ்சம் சொல்லும் இவள்தான்
இவனுக்கு அழகி

ஏதாவது கொடுத்தால்தான்
இறங்கிவரும் தெய்வம்
ஏதும் கொடுக்காமலே
ஏற்றி அணைத்தது இந்தத் தெய்வம்

இயேசுவோ... நபியோ...
புத்தனோ... கண்ணனோ...
பூமிக்கு வந்ததும்
புண்ணியவதி இவளின்
புண்ணிய வழிதான்
எண்ணி எண்ணியே
எந்நாளும் வியந்து
எழுதுவேன் நான்
என் தாய்க்கு கவிதான்

யோ.புரட்சி


## நினைவுகள்....!



தூக்கம்
என்னை விட்டு
தூரவிலகிப் போகின்றது....!
உறவுகள்
உங்களின் - நினைவுகள்
எப்போதும் என்னருகில்
விழித்துக் கொண்டிருப்பதனால்..

அ.திலக்ஷ், யாழ்ப்பாணம்.

## கையாளும் கரங்களில் தங்கும்



அவசியத் தகவலை அடுத்தவர் அறிதற்கு
உதவிடும் கருவியாம் கையடக்கத் தொலைபேசியை
கவனமாய் கையாண்டால் களிப்பு உருவாகும்
கவனமில் பாவனையால் கவலை கருவாகும்

அமைதி நிறைந்து அறிவுதரு நூலகத்துள்
துணையாய்த் தூக்கிவரும் தொலைபேசி தனையெடுத்து
தமைமறந்து கதைக்கின்றார் அமைதியைக் கலைக்கின்றார்
பகைமை நிலையைப் பாவனையால் பெறுகின்றார்

ஆலயம் ஆண்டவனின் உறைவிடம் என்பதனால்
சீலமுடன் அடியார்கள் அருள்பெற வருகின்றனர்
ஒலமிடு தொலைபேசி அழைப்பின்றி நுழைந்து
ஆலயத்துள் அமைதிக்கு இடையூறு தருகிறது

கத்தியால் ஒருயிரைக் காப்பாற்றி வைத்திடலாம்
பித்தாகி உயிரொன்[illegible]லாம்
மொத்தத்தில் சிந்தித்[illegible]
கத்தியைக் கையாளும் கரங்களில் தங்கும்

திருமதி [illegible] க.அருளைநாயகம்

## கருவின் விண்ணப்பத்துக்கு ஒரு தாயின் பதில்

கண்டேன் கண்ணே
உன் மடலை
கலங்குதடா நெஞ்சமிங்கே
கனக்குதடா கருவும் இங்கே

கருவிலேயே உனக்கேன்
கனப்பான ஊர்ப்பற்று
கலைத்திட்டா கண்ணே - நீ
காலங்கள் போட்டுதடா

அகதிதானே நாமும் இங்கே - சொல்
அநாதைகள் இல்லைத்தானே
அகதி என்ற சொல்லைவிட - பார்
அசிங்கமிங்கே அதிகமடா

அம்மா நான் சொல்லுகிறேன் - கேள்
அழித்திட்டா ஊர்ப்பற்றை
அல்ல என்று சொல்லுகிறாய் - நீ
அழிந்திட்டா கருவிலேயே

- சங்கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகளின் முன்னால் உள்ள சவால்

**ஞாயிறு காரம்**

சந்திரசேகர ஆசாத்

கடந்த முப்பது ஆண்டுகளாக ஏராளமான உயிர்களையும் சொத்துக் களையும் அழித்துவிட்டுப் பெருந் தொகையானோரை ஊனமுற்றவர்களாகவும் விதவைகளாகவும் அநாதைகளாகவும் ஆக்கிவிட்டுப் போர் நிறைவுபெற்றுவிட்டது. எந்தவொரு நோக்கத்துக்காகப் போர் தொடங்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறாதது மட்டுமன்றிப் பல எதிர்விளைவுகளும் உருவாகக் கூடிய சூழலும் தோன்றிவிட்டது.

எனினும் போர்க்காலத்தில் நிலவிய ஒரு சூழல் மாற்றமடைந்து சமூகம் ஒரு புதிய நிலைமைக்குள் புகுந்துவிட்டது. விமானக்குண்டுகள், எறிகணை வீச்சுக்கள், துப்பாக்கி வேட்டுக்கள் என்பனவும் தொடர் இடப்பெயர்வுகளும் இல்லாமற் போய்விட்டன. போரின் விளைவுகள், போரின் பின்னான இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளும் எங்கும் காணப்படும் இராணுவப் பிரசன்னமும் தமிழ் மக்களுக்கும் இயல்பு வாழ்வுக்குமிடையே பலமான சுவர்களை எழுப்பிவிட்ட போதிலும் இரத்தம் சிந்துதல் என்பது இல்லாமல் போய்விட்டது. எப்படியிருப்பினும் எமது சமூகம் போரின் முன்பும் போரின் போதும் நிலவியதைவிட வித்தியாசமான ஒரு சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்.

இப்படியான நிலையில் முன்பு போரின் கதாநாயகர்களாக விளங்கிய முன்னாள் போராளிகளும் இந்த மாற்றமான சூழலுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகவே உள்ளனர். போரின்போது இவர்கள் தங்கள் சொந்த நலன்கள், தங்கள் குடும்ப நலன்கள் என்பன வற்றுக்கு மேலாக விடுதலை, இலட்சியம், தியாகம் போன்றவற்றை முன் னிறுத்திச் செயற்பட்டவர்கள். இப்போது அவர்கள் அதற்கு நேர்மாறாகத் தமது குடும்பம், தமது எதிர்காலம் என்பன தொடர்பாகச் சிந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான போராளிகளுக்கு இது முற்றிலும் ஒரு புதிய அனுபவமாகும். எனவே இன்று அவர்கள் சற்றுத் தடுமாறி நிற்பதும் இயல்பு நிலைக்குத் திரும்பச் சிரமம்படுவதும் தவிர்க்க முடியாததாயுள்ளது. ஆனால் எமது சமுதாயம் இவர்களை எப்படி நோக்குகிறது, அவர்களை எப்படி அணுகுகிறது என்பதுதான் நாம் இங்கு எதிர்கொள்ளும் முக்கிய கேள்வியாகும்.

இப்படியான ஒரு நிலையில் எமது சமூகம் முன்னாள் போராளிகளை ஒதுக்குகிறது என்பது போன்ற குரல்கள் சற்றுப் பலமாகவே ஒலிக்க ஆரம்பித்துள்ளன. மேலோட்டமாகப் பார்க்கும்போது அதில் உண்மையிருப்பதாகவே தோன்றும்.

எனினும் நாம் இந்தக் கூற்றுத் தொடர்பான சரியான முடிவுக்கு வருவதானால் இந்தக் கூற்றின் தோற்றுவாய் தொடர்பான அடிப்படையை ஆழமாக நோக்க வேண்டும்.

ஒரு சாரார் மக்களுக்காகத் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் போராடியவர்கள், இன்று கவனிக்கப்படாமல் விடப்படக்கூடாது என்ற ஆதங்கத்துடன் இந்தக் கூற்றை முன்வைக்கின்றனர். இன்னொரு சாராரோ இந்தக் கூற்றை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதன் மூலம் விடுதலைப் புலிகளின் எந்தவொரு எச்சத்தையும் மிஞ்சவிடாமல் அழித்துவிட வேண்டும் என முயற்சிக்கின்றனர். அதாவது முன்னாள் போராளிகளுக்கு அனுதாபப்படுவது போன்ற போர்வையில் அவர்கள் மத்தியில் மக்கள் பற்றிய வெறுப்புணர்வை ஊட்டவும் மக்கள் மத்தியில் மக்கள் தாங்களாகவே அவர்களை ஒதுக்கிவிட்டனர் என்ற எண் ணத்தை விதைக்கவும் முயன்று வருகின்றனர்.

ஆனால் இந்த இரு தரப்பினரும் வெவ்வேறு தளங்களில் நின்று வெவ்வேறு நோக்குகளுடன் ஒரே வார்த்தைகளைப் பாவித்து வருகின்றனர். ஒரு சாராரிடம் முன்னாள் போராளிகள் பற்றி அனுதாபமும் இன்னொரு சாராரிடம் முன்னாள் போராளிகள் மேல் அனுதாபம் காட்டப்படுவது என்ற போர்வையில் போராட்டத்தையும் போராட்டத்தின் ஆதரவு சக்திகளையும் கொச்சைப்படுத்தும் நயவஞ்சகத்தனமும் புதைந்து கிடப்பதையும் ஆழமாகச் சிந்தித்தால் உணரமுடியும்.

ஒரு நாட்டிலோ, ஒரு சமூகத்திலோ, ஒரு கட்சி யிலோ அல்லது ஒரு விடுதலை அமைப்பிலோ இரண்டு நேரெதிரான அம்சங்களுக்கிடையே ஒரு பிரதான முரண்பாடு உண்டு. மேலும் அந்த அம்சங்களும் நம்மகத்தே எதிரெதிரான அம்சங்களிடையேயான முரண்பாடுகளைக் கொண்டிருக்கும். இது இயற்கையின் தவிர்க்க முடியாத விதியாகும்.

இந்த வகையில் விடுதலைப்புலிகள் களத்தில் இருக்கும்வரை பிரதான முரண்பாடு இலங்கை அரசின் அதிகார பீடத்துக்கும் விடுதலைப்புலி களுக்குமிடையேயானதாகவே இருந்து வந்தது. விடுதலைப் புலிகள் மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்த காலப்பகுதி யில் அது வளரும் அம்சமாகவும் ஆட்சியதிகாரம் நலியும் அம்சமாகவும் விளங்கியது.

அதேவேளையில் விடுதலைப்புலிகள் அமைப்புக்குள் நிலவிய அக முரண்பாடுகள் பற்றிப் பலரும் கண்டு கொள்ளவுமில்லை; அதைப் பொருட்படுத்த வுமில்லை. நல்லவைக்கும் கெட்ட வைக்குமான முரண்பாடு, சரிக்கும் பிழைக்குமிடையேயான முரண்பாடு, முற்போக்குக்கும் பிற் போக்குக்குமான முரண்பாடு, இன வாதத்துக்கும் தேசிய விடுதலைப் போராட்டத்துக்குமான முரண்பாடு என நேரெதிரான தன்மைகள் கொண்ட முரண்பாடுகளும் மோதல்களும் நிலவி வந்தன. விடுதலைப் புலிகளின் இறுக்கமாக கட்டுப்பாடு காரணமாகவும் சகல விடயங்களும் ஒரு தனிநபர் தலைமையைச் சுற்றிக் கட் டமைக்கப்பட்ட காரணத்தாலும் இவை வெளிபாடடையவில்லை. ஆனால் ஒரு மௌனமான பனிப்போர் உள்ளே நிகழ்ந்து கொண்டேயிருந்தது.

எனினும் சரியான அம்சங்கள் வளர்ச்சிப் போக்கிலும் பிழையான அம்சங்கள் அழிவுப் போக்கிலும் இருந்த காரணத்தால் போராட்டம் வேகமாகவும் சரியான திசையிலும் முன்னேறிச் சென்றது.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் தோன்றிய போர் நிறுத்தம் காரணமாக ஏற்பட்ட புதிய சூழ்நிலை சமூகத்தில் மட்டுமின்றி விடுலைப்புலிகள் அமைப்பிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தின.

மக்களுக்குச் சேவை செய்யும் நோக்குடன் உருவாக்கப்பட்ட புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புக்கள் மெல்ல மெல்ல அதிகார மையங்களாக மாறின. தாங்கள் மக்களின் குழந்தைகள் என்ற உணர்வு மங்கிப் போகத் தாம் மக்களை விட மேம்பட்டவர் என்ற எண்ணம் மேலோங்கும் நிலை எழுந்தது. ஆடம்பரவாழ்வு, ஆடம்பர இல்லம், ஆடம்பர வாகனம் எனப் பாரிய மாற்றங்கள் ஒரு சில போராளிகள் மட்டத்தில் தோன்றின.

ஒட்டுமொத்தமாக எல்லாப் போராளிகளும் இப்படி மாறினார்கள் என்று சொல்ல முடியாது. பெரும்பாலானவர்கள் தியாகம், அர்ப்பணிப்பு, இலட்சிய உறுதி என்பவற்றை இறுகப் பற்றியிருக்க பொதுமக்களுடன் தொடர்புடைய நிர்வாகக் கட்டமைப்புக்களின் அதிகார பீடங்களில் இருந்தவர்களில் ஒரு பகுதியினரே இப்படி விலை போனவர்களாகுவர்.

அதாவது இதுவரை சரியானது வளரும் போக்கிலும் பிழையானது அழியும் போக்கிலும் இருந்த நிலை மாறி போர்நிறுத்த காலத்திலும் அதன் பின்பும் சரியானது அழிவடையும் போக்கிலும் பிழையானது வளர்ச்சியடையும் போக்கிலும் மாற்றமடைய ஆரம்பித்தன.

இப்படியானவர்களை மக்கள் அந்த நாள்களிலேயே வெறுத்தது மட்டுமின்றி இவர்கள் அந்நிய உளவு நிறுவனங்களால் விலைக்கு வாங்கப் பட்டுவிட்டனர் என்று சந்தேகிக்கவும் ஆரம்பித்தனர்.

இப்படியானவர்களில் ஒரு பகுதியினர் விடுதலைப்புலிகள் அமைப்பை விட்டு வெளியேறி அரச தரப்புடன் இணைந்து கொண்டனர். இன்னொரு பகுதியினரோ தொடர்ந்தும் புலிகளுடன் இருந்து கொண்டே மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஒரு பக்கம் களமுனைகளில் போராளிகள் மக்களைக் காக்க உயிர்களை அர்ப்பணித்து உணவு, தூக்கமின்றிப் போராடிக் கொண்டிருக்க வேறு சிலரோ படைக்கு ஆள்சேர்த்தல் என்ற பேரில் சகல மக்கள் விரோத நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

கடைசிக் காலகட்டம் விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் நிலவிய அக முரண்பாடுகள் நல்ல அம்சங்கள் நலிவடையவும் தீய அம்சங்கள் வலுவடையவுமான ஒரு நிலையை நோக்கியே நகர்ந்தன.

இது விடுதலைப்புலிகளை ஒரு மீள முடியாத தோல்விக்குள் தள்ளியது. இப்படியான அடிப்படைகளைப் புரிந்து கொள்ளும் நிலையில் முன்னாள் போராளிகள் புறமொதுக்கப்பட வேண்டியவர்களா? ஆதரிக்கப்பட வேண்டியவர்களா? என்பதை முடிவு செய்ய முடியும்.

ஒரு அமைப்புக்குள் சரிக்கும் பிழைக்குமிடையேயான போராட்டம் எப்படி நிரந்தரமானதோ அவ்வாறே தனிப்பட்ட ஒவ்வொரு போராளிகளிடமும் சரிக்கும் பிழைக்குமிடையேயான போராட்டம் தொடர்ச்சியானது. இந்தவகையில் அவனுள் சரியைப் பின் தள்ளி பிழை மேலெழும் போது அவன் போராளி என்ற அந்தஸ்தை இழக்கிறான். அவன் காட்டிக் கொடுப்பவனாகவும் துரோகி யாகவும் மாறும் வாய்ப்புக்களும் உண்டு.

போர்க்காலத்தில் மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்ட பலர் தற்சமயம் அரச புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து செயற்படுகின்றனர் என இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதை மக்கள் நம்புவதற்குரிய பல சம்பவங்கள் போரின்போதும் அதன் பின்பும் இடம்பெற்றுள்ளன. இப்படி விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டமைப்பு முற்றாகச் சீர்குலைந்துவிட்டது. இப்போது அதற்குத் தலைமையோ, வழிகாட்டலோ இல்லை. இந்த நிலையில் முன்னாள் போராளிகள் வெறும் தனிநபர்கள்தான்.

இப்போது விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளில் ஒரு பகுதியினர் விடுதலை யாகிவந்துவிட்டனர்.

இவர்களில் இருவேறு வகையினர் உண்டு. ஒரு பகுதியினர் இலட்சியப் பற்றுடனும் தியாக உணர்வு டனும் மக்கள் மீது எல்லை யற்ற அன்புடனும் களத் தில் நின்றவர்கள். இவர் களில் பெரும்பாலானோர் ஆயுதப் போராட்ட அணி களில் நின்றவர்களே! மக்கள் இன்றும் அவர்களை நேசிக்கிறார்கள். தங்களில் ஒருவராக அணைத்துக் கொள்கின்றனர். அவர்கள் மக்களோடு மக்களாக எவ்வித முரண்பாடுகளுமின்றி வாழ்கின்றனர்.

இன்னொரு சாரார் போர்க்காலத்தில் கூடத் தாம் மக்களை விட மேம்பட்டவர்களாகக் கருதியவர்கள். எவ்வித கூச்சமுமின்றி மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள்.

இவர்களை மக்கள் சந்தேகக் கண் கொண்டே பார்க்கின்றனர். இவர்களைக் கண்டு அஞ்சுகின்றனர். இவர்கள் புலனாய்வுப் பிரிவினரின் முகவர்களாக இருக்கக்கூடும் என்ற கருத்தும் மக்களிடம் உண்டு. எனவே இவர்களைக் கண்டு மக்கள் தூரவே விலகுகின்றனர். ஒட்டுமொத்தமாக இவர்களை வெறுக்கின்றனர்.

எனவே முன்னாள் போராளிகளை மக்கள் ஒதுக்குகிறார்கள் என்ற கருத்து முற்றிலும் தவறானதாகும். இறுதிவரை நேர்மையான போராளிகளாக இருந்தவர்களை மக்கள் நேசிக்கிறார்கள்; ஆதரிக்கிறார்கள்; மதிக்கிறார்கள். ஆனால் போராளிகள் என்ற போர்வையில் மக்கள் விரோத நடவடிக்கைளில் ஈடுபட்டவர்களையும் இன்று எதிர் வழமாகச் செயற்படுபவர்களையும் மக்கள் வெறுக்கின்றனர், ஒதுக்குகின்றார்கள். ஏற்கனவே மக்களை விடத் தாம் மேம்பட்டவர்கள் எனக் கருதி நடந்து கொண்டவர்கள் இப்போதும் அப்படியான ஒரு எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கக் கூடும். ஆனால் எப்போதுமே முட்டாள்கள் அல்ல.

ஆனால் முன்னாள் போராளிகள் சமூகத்தால் ஒதுக்கப்படுகிறார்கள் எனப் பிரசாரம் செய்வதன் மூலம் ஒதுக்கப்பட வேண்டியவர்கள் ஒதுக்கப்படுவதைத் தவறான நடைமுறையாகக் காட்டுவது அடிப்படையில் துர்நோக்கம் கொண்ட முனைப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வெளிநாட்டு வேலை வாய்ப்பு

# அபுதாபி - டுபாய்
# ABU DHABI - DUBAI

(ஐக்கிய அரபு இராச்சியம்)

எமது வெளிநாட்டு கம்பனி முகவருடன் நேர்முகப் பரீட்சை 23.05.2011 (திங்கட்கிழமை) கொழும்பில் உள்ள எமது காரியாலயத்தில் நடைபெறும். நேரில் சமூகமளிக்கவும்.

டுபாயில் உள்ள ஒரு பிரபல்யமான கிளீனிங் கம்பனிக்கு கீழ் குறிப்பிடும் ஆட்கள் உடனடியாக தேவைப்படுகிறது.

## HOUSE KEEPERS - 50 ஆண்கள்

சம்பளம் **DHS 800** (S.L.Rs.24,000/-)

(வேலை செய்யும் இடங்கள் - சுப்பர் மார்கட்டிலும், சொப்பிங் மோல்ஸ்)

**Working Place - Supper Markets & Shopping Malls.**

Candidates should have passed G.C.E (O/L) Examination with good English knowledge.

Should be smart and with pleasing personality.

(ஆங்கிலத்தில் ஓரளவு பேசத்தக்கவராகவும், திடகாத்திரமானவராகவும் இருத்தல் வேண்டும்.)

வயது: 22 - 35 Age: 22 - 35 Yrs

**Training in House Keeping will be given to the selected candidates in Dubai by our Foreign Principal.**

தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய ஒரு மாத தொழிற் பயிற்சி டுபாயில் வழங்கப்படும்.

### Terms & Conditions

Free Accommodation, Food & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract two years (Renewable). Working hours - 8 Hours. Other terms & conditions will be as per U.A.E Government Labour Laws.

Please come to our Colombo office on **23rd May, 2011, (Monday)** with your Passports, Educational Certificates and with other supporting documents with 6 PPT size coulour photos with white background for the interview with our Foreign Principal.

## TRANSSTAR

INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,
375, Second Floor, Dam Street, Colombo 12.
(375, 2ம் மாடி, டாம் வீதி, கொழும்பு-12)
**Tel: 011 - 471 8936 / 238 6824**
E-mail: transstar@sltnet.lk

S.L.Bureau Labour Licence : 1311. (Near Hulftsdorp Courts - Colombo)
S.L.Bureau Approval AL/1311/Advt/02/11. (ஹல்ஸ்டொர்ப் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்)
Govt. Approved Charges - Rs.41,664/- (டாம் வீதியில் உள்ள ஹல்ஸ்டொர்ப் தபால் நிலையத்திற்கு அடுத்த கட்டிடம்)


## பண்ணிசை வகுப்புகள்

ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் திருமுறைப் பண்ணிசை வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.30 மணி முதல் நடைபெற்று வருகின்றன. கலாபூஷணம் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் இந்த வகுப்புக்களை நடத்தி வருகிறார்.

இந்தப் பண்ணிசை வகுப்புக்களில் கலந்து கொள்வதன் மூலம் பஞ்சபுராணம், பன்னிரு திருமுறை ஓதுவதற்கான பயிற்சியை பெறுவதுடன் அதற்கான சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று குருபீடாதிபதி ஸ்ரீ மத்வேத வித்தியாசாகரர் சுவாமிகள் அறிவித்துள்ளார். (ஒ-323)

## நியமனம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு பொது மருத்துவ நிபுணர் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் மேற்படிப்பை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய வைத்தியக் கலாநிதி திருமதி சகுந்தலா கடோற்கஜன் என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த வியாழன் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ம-207)


## மணமக்கள் தேவை

இந்து கௌர குடும்பத்தைச் சேர்ந்த 1978 ஆண் Engineer, கிரகபாவம் 5, 1984 பெண் Medical Student 8 இல் செவ்வாய், 34 பாவம் (இருவருக்கும் London PR உண்டு). 1980 பாவம் 27 ஆண் ஆசிரியருக்கும், 1984 4இல் செவ்வாய் பாவம் 12 பெண் வங்கியாளருக்கும் (நால்வரும் சகோதரர்கள்) மணமக்கள் தேவை.

தொடர்பு: 0771619518, 0750979712

## சிறுநீரகம் தேவை

எனது மகன் துரைராசா சசீகரன் என்பவருடைய இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்துள்ளமையால் உடனடியாக மாற்றுச் சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமென வைத்தியர்கள் பணித்துள்ளார்கள்.

எனவே கருணையுள்ளம் கொண்ட உதவும் கரங்களிடமிருந்து O - (O Negative) குருதியைச் சேர்ந்த சிறுநீரகம் ஒன்றை வழங்கி உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

★ உதவுபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0777114862,0777034269. து.இராசேஸ்வரி

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்த போடப்பட்ட சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், புறோயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (21.05.2011) காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| ★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை | - 0778996085 |
| ★ சன்வதி பாம் சென்ரர், தொண்டமானாறு | - 0776904590 |
| ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | - 0774656377 |
| ★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை | - 0771392593 |

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.
நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.


## அறிவித்தல்

### விழுது அலுவலகம் இடமாற்றம்

இல.167, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வந்த எமது "விழுது" ஆற்றல் மேம்பாட்டு மையம் எதிர்வரும் 16.05.2011 ஆம் திகதி முதல் இல.23, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம் (தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகில்) என்ற முகவரியில் இயங்கும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகள்:0212229866.
மின்னஞ்சல்: jaf.viluthu@gmail.com

கி.சுதாகரன்
மாவட்ட அலுவலர்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை வளஞ்சார் அபிவிருத்திக்கு வழிபிறக்குமா?




பனையிலிருந்து பெறப்படும் பொருள்கள் சுதேச மருத்துவத்திலும் பயன்படுத்தப்படுவதை அறிய முடிகின்றது. பனையின் மலர்கள், பழங்கள், விதைகள் என அனைத்தும் மருத்துவத் தன்மை கொண்டவையாக உள்ளன. பனம் பாளை மற்றும் வேர்களும் மருத்துவக் குணங்களை உடையனவாகும். பாளைகளை எரித்துப் பெறப்படும் சாம்பல் மண்ணீரல் வீக்கத்தைத் தடுக்க பயன்படுகின்றது.

பதநீர்

தமிழ்நாடு மற்றும் கேரளாவில் பதநீர் முக்கியமான உணவுப் பொருளாகக் கருதப்படுகின்றது. நாள்தோறும் ஒரு குவளை வீதம் 45 நாள்களுக்குத் தொடர்ச்சியாகப் பதநீர் பருகிவந்தால் உடல் எடை கூடும். மூச்சு இழுப்புக் குறைபாடு உள்ளவர்களுக்கு அதனைக் குணப்படுத்த பதநீர் உதவுகிறது. செரித்தலை மேம்படுத்தவும் உடற்சூட்டைத் தணிக்கவும் பதநீர் பயன்படுகிறது.

காலை பதநீர் குடிப்பதை விட மாலையில் பதநீரைக் குடித்தால் உடல் குளிர்ச்சியாகும். மாலையில் எடுக்கப்படும் பதநீரில் எப்போதும் சுண்ணாம்பு அதிகமாக இருக்கும். பதநீர் குடிக்க விரும்புபவர்கள் அதிலுள்ள சுண்ணாம்பின் காரத்துக்குப் பயப்படுகின்றார்கள். சுண்ணாம்பை மிகவும் குறைந்தளவில் பயன்படுத்தும் போது நொதிப்பதற்கான வாய்ப்பு அதிகமென்பதால் சீவல் தொழிலாளர்கள் அதிகளவு சுண்ணாம்பைப் பயன்படுத்துகின்றனர் என்று அறியப்படுகின்றது. சேகரிக்கப்படும் பதநீர் சிறிதளவு நொதிப்படைந்து விட்டால் அதனை முழுமையாக வெளியே ஊற்றவேண்டியிருப்பதால் நொதித்தலை முழுமையாகத் தடுக்கவே அதிகளவு சுண்ணாம்பைப் பயன்படுத்துகிறார்கள். சுண்ணாம்புக்கு மாற்றீடான உணவாகக் கூடிய பதார்த்தமொன்றை விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்து அறியக்கிடைத்தால் இந்த சுண்ணாம்புப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிட முடியும்.

ஆனாலும் பதநீரில் இளம் நுங்கைத் தோண்டிப் போட்டால் அது அதிகளவாக உள்ள சுண்ணாம்புச் சத்தை உறுஞ்சிக் கொள்ளும். அத்துடன், பதநீரும் குடிப்பதற்கு மணமுள்ளதாக இருக்கும் என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினதும் தோட்டக் கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரியும் பேராசிரியர் வி.பொன்னுச்சாமி தெரிவித்துள்ளார். அத்துடன், நாள்தோறும் காலைவேளையில் பதநீர் பருகி வந்தால் மலச்சிக்கல் நீங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இன்னும் பதநீரின் பயன்களெனப் பலவுண்டு. விற்றமின்களின் பற்றாக்குறையினால் ஏற்படும் பெரிபெரி, ஸ்கேவி போன்ற நோய்களைப் பதநீர் பருகி வருவதன் மூலம் குணப்படுத்தலாம். இரத்தச் சோகையால் பாதிக்கப்பட்டோரின் இரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப் பதநீர் பயன்படுகின்றது. குழந்தைகளின் வளர்ச்சியை மேம்படுத்துவதோடு குழந்தைப் பருவத்தில் ஏற்படும் பல்வேறு நோய்களையும் பதநீர் குணமாக்கிவிடும்.

ஆண், பெண் பனைகளிலிருந்து பெறப்படும் பதநீரின் பண்புகள் வேறுபட்டுக் காணப்படும் என அறிய முடிகின்றது. ஆண் பனைகளில் இருந்து பெறப்படும் பதநீரில் சாம்பல் சத்து, அஸ்கோபிக் அமிலம், கல்சியம் என்பவற்றின் அளவு பெண் பனைகளிலிருந்து பெறப்படும் பதநீரைக் காட்டிலும் அதிகமாகக் காணப்படுகின்றது.

பதநீரில் உடல் வளர்ச்சிக்குத் தேவையான உயிர்ச்சத்துக்களும், ஊட்டச் சத்துக்களும் நோய் அணுகாமல் காக்கும் மருத்துவக் குணங்களும் உண்டு. பதநீர் அருந்துவதால் உடலுக்குக் குளிர்மையும் முகப்பொலிவு கூடுதலும் களைப்பு நீங்குதலும் உண்டாகும்.

பதநீரை நொதிக்காது போத்தலில் அடைக்கும் வழிமுறை கண்டுபிடிக்கப்பட்டால் நல்லதொரு குடிபானமாகவும் உள்ளூர் உற்பத்தியில் சிறந்தொரு கைத்தொழிலாகவும் வாய்ப்புமுண்டாகும். தமிழ் நாட்டில் பதநீரைக் கொள்கலனில் அடைத்து விற்கும் முறை உண்டு. அதனை எங்களூருக்கும் அறிமுகப்படுத்தினால் பதநீரை உற்பத்தி செய்பவர்களுக்கும் பொதுமக்களுக்கும் சிறந்த சேவையை செய்ததாகி விடும். இன்னும் இதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

பதநீரை போன்று நுங்கு, பனம்பழம், பனை வெல்லம், பனங்கற்கண்டு ஆகியனவற்றின் பயன்பாடும் அளப்பரியது.

பனை வளத்தின் மகிமைகளை பெருமையுடன் கூறிக் கொள்ளும் அதேவேளையில், இருக்கின்ற வளத்தை பேணிப்பாதுகாக்கவும் வேண்டும். தரிசு நிலங்கள், உவர் நிலங்கள், வயல் வரப்புகள் என அதிகம் வினைத்திறனாகப் பயன்படுத்தாத இடங் களில் பனை விதைகளை நடும் திட்டத்தை ஊக்குவிக்க வேண்டும். தமது ஆர்வத்தில் மில்க் வைற் தொழிலதிபர் மறைந்த கனகராசா நடுகை செய்த பனம் விதைகளனைத்தும் வளர்ந்து இளம் வடலிகளாகி மரங்களாகி விட்டன. அவர் பெயர் சொல்லும் இந்தப் பனைகள் இனிவரும் சந்ததிக்கான அரும்பெரும் சொத்தாக இருக்கின்றன. எந்த விதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் இத்தகைய கைங்கரியத்தை முன்வந்து செய்த கனகராசா மறைந்தாலும் இந்தப் பனைகளூடாக எம்முள் வாழுகின்றார். இவர் போல பல கொடை வள்ளல்கள், தர்மகர்த்தாக்கள் எமது சொத்தாம் கற்பக தருவை வளர்க்க முன்வர வேண்டும். அப்போது தான் பனை வளஞ்சார்ந்த அபிவிருத்தி முழுமைபெறும். வாருங்கள் எங்களூர் வளத்தைக் காப்பதுடன் அதனை வினைத்திறனான வகையில் பயன்படுத்துவோம்.

பனை வளத்தின் அனைத்துப் பயன்பாடுகளையும் இங்குள்ளோர் பயன்படுத்த நாம் உந்துசக்தியாக இருக்க வேண்டும். எமது பொருள்களை - உள்ளூர் உற்பத்திப் பண்டங்களை - நாமே உருவாக்கி உள்வாங்க வேண்டும். எங்களூர் பொருள்களுக்கு எங்களூரிலேயே எங்களவர்களே பயன்படுத்தும் நிலை வரும் போது இவற்றுக்கான தேவையும் அதிகரிக்கும்.

பனை வளத்தின் அபிவிருத்தியென்பது நாம் அதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்திலேயே தங்கியிருக்கின்றது.

இதற்காக நாமெல்லோரும் இணைந்து செயற்படவேண்டும். வாருங்கள் எம் இனிய உறவுகளே! எங்கள் ஊர் வளத்தின் அபிவிருத்தியில் நாம் ஒவ்வொருவரும் பங்குகொள்வோம்.



(முற்றும்)

பேராசிரியர் கு.மிகுந்தன்,
தலைவர், விவசாய உயிரியல் துறை,விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# தேவதாரு பட்டை குடிநீர் சீதபேதிக்கு மிகச் சிறந்தது


## காசுக் கட்டி

வேறுபெயர் - கதிரம், கத்தக்காம்பு மரம், கருங்காலி.
தாவரவியற் பெயர் - Acacia catechuu (அக்கேசியா கற்றச்சு)
குடும்பம் - Mimosaceae ( மைமோசியே)
சிங்களப் பெயர் - ரத்கிஹிரிய
சமஸ்கிருதப் பெயர் - கதிரா
ஆங்கிலப் பெயர் - Catechu Tree

இது மரவகுப்புக்குரியது. நடுத்தர உயரம். பட்டை கறுப்பு நிறம். பிளவுபட்டுத் துண்டுதுண்டாக உரிந்து காணப்படும். கிளைகளில் முட்களுண்டு. கூட்டிலைகள் கருவேலமர இலைகளைப் போன்றிருக்கும். ஆனி, ஆடி மாதங்களில் பூக்கும். பூங்கதிர்களில் வெள்ளை அல்லது மஞ்சள் நிறப் பூக்கள் காணப்படும். கார்த்திகை, மார்கழி மாதங்களில் விதைகளுண்டாகும். இந்த மரத்திலிருந்து பெறப்படும் ஒரு சத்துப் பொருளே காய்ச்சுக் கட்டி அல்லது காசுக்கட்டி எனப்படுகிறது.

காசுக்கட்டியைப் பொடி செய்து 200 மி.கி அளவில் காலை, மாலை தேன் சேர்த்துக் கொடுத்துவர குழந்தைகளுக்குண்டாகும் சீதபேதி, வயிற்றுக் கடுப்பு வயிற்றுளைவு என்பன குணமாகும்.

இத்தூளை சுடுநீரில் ஊறவைத்து அந்த நீரால் வாய் கொப்புளித்துவர வாய்ப்புண் மாறும்.



## தேவதாரு

வேறுபெயர் - அமரர் தரு, தேவ விருட்சம், தேவதாரி
தாவரவியற் பெயர் - Cedrus deodara (சிட்ரஸ் டியேடரா )
குடும்பம் - Coniferae (கொனிபேரே)
சிங்களப் பெயர் - தேவதார
சமஸ்கிருதப் பெயர் - தேவதாரு
ஆங்கிலப் பெயர் - Himalayan Cedar


இனமய மலைச் சாரலில் விசேடமாகக் காணப்படுவதாலும் தேவர்களுக்குப் பிரியமான விருட்சம் என்ற கருத்தினாலும் இது தேவதாரு என்று அழைக்கப்படுகிறது.

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

தமிழ் மருத்துவத்தில் தேவதாரு தேவதாரம், தேவதாளி என்று மூன்று மூலிகைகள் குறிப்பிடப்படுகின்றன. இவை மூன்றும் ஒன்றேயெனச் சிலர் கருதுவர். அது தவறு. தேவதாரம் என்பது செம்மணத்தி அல்லது செம்புளிச்சையைக் குறிக்கும். தேவதாளி என்பது பேய்ப் பீர்க்கைக் குறிக்கும்.

தேவதாரு அல்லது தேவதாரியில் இமாலய தேவதாரு, நாட்டுத் தேவதாரு (Erythroxylon indicam), சீமைத் தேவதாரு (Pinus longifoia), சுருள் அல்லது சரள தேவதாரு என்னும் வகைகள் உண்டு.

தேவதாரு [illegible] கிளைகள் [illegible] இலைகள் [illegible] உச்சியில்



கொத்தாகவும் காணப்படும். பூக்கள் வெள்ளை அல்லது பச்சை நிறம்.

இதன் பட்டையைக் குடிநீர் செய்து சீதபேதி, தீராத கழிச்சலுக்கு கொடுத்துவர மாறும்.

தேவதாருப்பட்டை, பாற்படாகம், சீந்தில், கோரைக் கிழங்கு, கொத்தமல்லி என்பவற்றைச் சமவளவில் எடுத்து குடிநீர் செய்து காலை, மாலை பருகிவர கடுமையான காய்ச்சல், தினச்சுரம், முறைச்சுரம், அசீரண பேதி, சீத பேதி என்பன மாறும்

இதன் பட்டைத் தூளை நாட்பட்ட விரணங்களின் மீது தூவிவர அவை மாறும்.

மரக்கட்டையிலிருந்து கற்பூரமணமுடைய தைலத்தைப் போன்ற சாரம் வடியும். அதை துர்நாற்றம் வீசும் புண்கள், அழுகிய விரணங்கள் மற்றும் தோல் நோய்களுக்குப் பூச மாறும்.




(தொடரும்...)

Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 162



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1.அருச்சுணன் மகன்
5.குரங்கு
7.போற்று
8.பிரி
10.போதை தருவது
11.அச்சுக்கு கொண்டு வருதல்
13.அந்தக் காலத்தில் பதியும் தாள் இதுதான்.
14.கட்டடத்தைத் தாங்குவது
15.இரத்தல்
17.வாழ்.
19.துணிச்சல்காரன்
21.பெருக்கல் குறி
22.சிலை
24.அறுப்பது இதனால்
25.விடாய்.

### மேலிருந்து கீழ்

1.மரியாதை கொடுத்தல்
2.தாமதமாகு
3.சந்திரன்
4.இளம்பெண்
6.காலிலும் இருக்கும், கையிலும் இருக்கும்
9.கிடுகு வேலி அடைக்கப் பயன்படும்.
11.துயில் கொள்
12.குளிர்மையைக் குறிக்கும்.
13.மற்றைய
16.வாழ்க்கை வரலாறு
17.விதியின் தன்மை
18.நோன்பு
20.முனிவர்கள் கோபத்தில் வழங்குவது
23.ஒருவகை மாவு.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 160 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)ஆகமம் (4) தமது. (7)பரல். (8) தண்ணளி (9)யுகம். (11)நார். (12) பாவித்த (13)தாள் (14)தம்பதி. (17)தரம் (19)தயங்கு (20) வதி (21)பகர் (22) வெகுளி (23)பொன்.

### மேலிருந்து கீழ்

(1) ஆபத்பாந்தவன் (2)கர. (3)மல்யுத்தம். (4)தண் (5)மணநாள் (6)துளிர் (8)தம் (10)கதம் (13)தாதியர் (15)பதகளி (16)நகுலன் (18)ரதி (21)பகு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 160 இற்கான சரியனவிடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு **ச.தேவகஜனன்,** பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம் பண்டத்தரிப்பு.

2 ஆம் பரிசு **மதிவதனன் ஹரிஸ்,** கந்த உடையார் லேன், பருத்தித்துறை.

3 ஆம் பரிசு **திருமதி றோ.ம.தயானந்தன்,** 15 ஆம் மைல்கல், உடுப்பிட்டி.

4 ஆம் பரிசு **தி.ஜெயமாலா,** இல.4, அம்பலவாணர் வீதி, உடுவில், சுன்னாகம்.

5 ஆம் பரிசு **திருமதி ஸ்ரீ கிருஷாந்தி உமாபதிசிவம்** இல.18, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 162**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 25.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.161இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 29.05.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

### பாராட்டுப் பெறுவோர்

**சு.முருகேசன்,**
வலி.தெற்கு பிரதேசசபை சுன்னாகம்.

**சி.ரோகினி,**
24/4,1/1 பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-6

**சு.பாலமுரளிதரன்,**
இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# வீதி வி10

''நினைத்தோ எதிர்பார்த்தோ வருவதல்ல அதிர்ஷ்டம். நினையாப் பிரகாரமாக வருவதே அதிர்ஷ்டம்'' இது அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பவர்களின் தாரக மந்திரம். அதே போன்றுதான் விபத்தும் நினையாப் பிரகாரமாக வரும். ஒரு நாளைக்கு யாழ். மாவட்டத்துள் நடக்கும் விபத்துக்களில் பத்திரிகைகளில் இடம்பெறுவன மட்டும் நான்கு- ஐந்து தேறும். பல விபத்துச் செய்திகள் படங்களுடன் பத்திரிகைகளில் இடங்களைப் பிடித்துக் கொள்கின்றன. போகிற போக்கைப் பார்த்தால் இன்று எதுவித வீதி விபத்தும் ஏற்படவில்லை- என்பது கூட ஒரு செய்தியாகப் போய்விடும். அந்த அளவுக்கு வீதி விபத்து என்பது அன்றாட நிகழ்வாகிவிட்டது.

கடந்த ஆண்டு, அரசால் வீதி விபத்துப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென ஓர் ஆணைக் குழு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதில் நாடு முழுவதிலும் தினசரி வீதி விபத்தில் மட்டும் 6 பேர் வரை மரணமடைகின்றனர் எனவும், பலர் காயங்களுக்கு உள்ளாகின்றனர் எனவும், பெருமளவு பொருளாதார இழப்பு ஏற்படுகின்றது எனவும் - ஆகவே இதுபற்றி ஆராய ஓர் ஆணைக்குழு அவசியம் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இந்த ஆண்டில் மேலும் வளர்ச்சிப் போக்கில் நாம் உள்ளோம். கடந்த வாரச் செய்திகளின்படி தற்போது சராசரியாக வீதி விபத்தில் நாள் ஒன்றுக்கு 10 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பத்திரிகைகளில் விபத்துச் செய்தி தினசரிச் செய்தி ஆகிவிட்ட போதிலும், நம்மவர்கள் இன்னும் சமாந்தரச் சவாரியைக் கைவிடவில்லை. சுவாரசியமாகக் கைத்தொலைபேசியில் பேசியவாறு வாகனம் ஓட்டுவதைக் கைவிடவில்லை. போதாக் குறைக்கு எதுவித முன்னறிவித்தலும், சைகைகளும் இன்றி வீதியைக் குறுக்கறுத்து ஓடும் நாய்கள் பல்கிப் பெருகி விட்டன. அவைதான் பாவம் பகுத்தறிவு அற்றவை.

நாம் கவனமாகப் போனால் விபத்து ஏற்படாது என்று கூற முடியாது. ஒவ்வொருவரும் கவனமாக வாகனம் ஓட்டினாலன்றி விபத்து ஏற்படுவதைத் தடுக்க முடியாது. ஒரு வாகனத்தை நாம் வாங்குவது ஷோகேஸில் வைத்து அழகு பார்ப்பதற்கல்ல. எமது தேவைகளுக்குப் பயணிப்பதற்காகத்தான் பெருமளவு பணத்தை முதலிட்டு வாகனம் வாங்குகின்றோம். குறுகிய வீதிகள் இன்னும் போதியளவு விசாலிக்கப் படவில்லை. ஆனால் வாகனங்கள் பெருகிவிட்டன; பெருகுகின்றன. (அட்டவணையைப் பார்க்கவும்) வீதிகள் விசாலிக் கும்வரை காத்திராது எமது மனங்களை விசாலிப்பு அடையச் செய்யவேண்டும்.

பிறவுண் வீதி, அரசடி வீதி குறுக்கறுக்கும் சந்தியில் எனது வாகனத்தின் வேகத்தைக் குறைத்து, வேறு ஏதாவது வாகனம் வருகிறதா என அவதானித்துக் கொண்டிருந்தேன். எனக்குப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் தூள் கிளப்பிக் கொண்டு அப்படி வெட்டி, இப்படிவெட்டி வேகத்தைக் குறைக்காமலே சந்தியைக் கடந்து சென்றது. ஆகா! எவ்வளவு கெட்டிக்காரன் என்று என் மனதுள் அவரைப் பாராட்டியவாறு நானும் சந்தியைக் கடந்து சென்றேன்.

அந்தக் கெட்டிக்காரன் அடுத்த சந்தியில் மோதுப்பட்டு வீழ்ந்து கிடந்தார். அவரின் கெட்டித்தனம் அடுத்த சந்தியில் எடுபடவில்லை. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கெட்டிக்காரனாக இருப்பவனே உண்மையான கெட்டிக்காரன்!எல்லோரும் உண்மையான கெட்டிக்காரராகத் திகழ திடசங்கற்பம் பூண வேண்டும். அப்பொழுது தான் விபத்திலிருந்து நாம் எம்மையும் காப்பாற்றி மற்றவர்களையும் காப்பாற்ற முடியும்.

**செல்லக்கண்டு செல்வதாசன்**

**மோட்டார் வாகனத் திணைக்களம் 2009 புதிய பதிவு**

| | |
|---|---|
| மோட்டார் கார்கள் | 5762 |
| மோட்டார் சைக்கிள் | 1,35,421 |
| முச்சக்கர வண்டிகள் | 37,364 |
| லோறிகள் | 7823 |
| டிரக்டர் | 15,284 |
| பேருந்துகள் | 2637 |
| புதிய சாரதி அனுமதிப் பத்திரங்கள் | 3,33,235 |

**2010 இல் புதிய சாரதி அனுமதிப் பத்திரங்கள்**

| | | |
|---|---|---|
| ஜன | - | 2,738 |
| பெப் | - | 3,994 |
| மார்ச் | - | 7,101 |
| ஏப்ரல் | - | 3,944 |
| மே | - | 10,308 |
| ஜூன் | - | 14,548 |
| ஜூலை | - | 18,391 |
| ஓகஸ்ட் | - | 17,699 |
| [illegible] | - | [illegible] |

தகவல்: [illegible] அமைச்சு

முன்னேற்ற அறிக்கை 2009 முன்னேற்ற அறிக்கை 2010

# உடல்.....

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ரவியும் வண்ணத்துக்கு ஒரு ஜீன்ஸும் அதுகேற்ற வகையில் அழகான சப்பாத்துக்களையும் அருந்தவனுக்கு அணிவித்தான். ''அண்ணை இப்படியே நடந்து வரேக்க ஒரு படம் எடுங்க'' என்றாள் கமலா. ''அப்பு நடந்து வா... நடந்து வாறன் குழந்தை வேலன் நடந்து வாறான் குழந்தை வேலன்..'' எனக் கையைத் தட்டித் தட்டி முன்னே இருந்து கமலா பாட அருந்தவனும் புளுகத்துடன் கையைத் தட்டித் தட்டி சிரித்து சிரித்து ஐந்தாறு அடி எடுத்து வைச்சிப்பான். புகைப்படக்காரனும் ஆ... அச்சா...அச்சா... எனச் சொல்லி ஒரு கிளிக் செய்தான். அவனும் புகைப்படம் எடுக்கப் படார் என்று காது செவிடுபடும் படியாக ஒரு சத்தம் அம்மா....! என்று குழந்தையின் அலறல் ''என்ரை ஐயோ....! என்ரை பிள்ளை.... என்ரை பிள்ளை!'' எனக் கமலா அலறினாள்.

உறவினர்கள் நடந்தது எதுவும் அறியாது தலை தெறிக்க ஓட ரவியும் குழறிக் கொண்டு ஓடிப்போய் அருந்தவனை அள்ளி எடுத்தான். புதிதாகப் போடப்பட்ட சப்பாத்துப் பாதத்துடன் சிதைந்து மங்களத்திற்காக வைக்கப்பட்டிருந்த நிறைகுடத்தின் அருகில் போய் விழுந்து கிடந்தது. மற்றைய பாதம் சதைத்துண்டுகளாகச் சிதறி மரக்கிளைகளிலும் சுவரிலும் ஒட்டியிருந்தது...!

ஆம் வீடியோவுக்கு ஸ்ரைலாகப் புதுச்சப்பாத்து டன் நடந்து வந்தது கடவுளுக்குக்கூடப் பொறுக்கவில்லை என்றுதான் சொல்ல வேணும். இல்லாட்டி இப்பவா மிதிவெடி வெடிக்கவேணும். அதுவும் இந்தப் பிஞ்சுப் பாதங்களைத் தின்றா இந்த மிதிவெடி தன்ர கோரப் பசியைத் தீர்க்க வேணும்.சிரித்துச் சிரித்து படத்துக்கு 'ஸ்ரைலாக' இருந்தவன் இப்போது வாடிய மலராய் கிடந்தான். அவசர அவசரமாக ஆஸ்பத்திரிக்கு அள்ளி எடுத்துச் சென்றனர். முழங்காலுடன் கால் அகற்றப்பட்டுச் சிறிய கைக்குழந்தை போன்று கிடந்தான் அருந்தவன்.

பூமியில் ஆசைதீர நடந்து திரியமுதலே களையப்பட்டு விட்டது அவன் கால். ஊனமாக்கப் பட்டது அவன் உடல்மட்டுமா? அவனது வாழ்க் கையே ஊனமாகிவிட்டது. பத்து வருடங்களின் பின் கிடைத்த பாலனது நிலையைப் பார்க்கும் அவன் பெற்றோர்கள் தினம் தினம் மனதிலே ஊனமாக வேண்டியவர்களாகவே உள்ளனர். மிதிவெடிகள் உடலை மட்டும் ஊனமாக்குவது இல்லை. இன்று ஒவ்வொருவர் மனதையும் ஊனமாக்கும் வகையில் மெல்லக் கொல்லும் விஷமாகிவிட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 19

# ஒரு கணம் சிந்தித்தால் என்ன?

யாழ்.குடா நாட்டில் அதிகரித்துவரும் தற்கொலை பலரது மனதிலும் ஏதோ இனம் தெரியாத பயத்தையும் இயலாத் தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. பெறுமதிமிக்க உயிரின் தாற்பரியம் பூச்சி கொல்லிகளால் கரைந்து கொண்டும் அலரிக்கொட்டைகளில் அழிந்து கொண்டும் இருக்கிறது. இத்தனை காலமும் தமிழ் மக்களின் உயிரிழப்புகள் பல வரலாறுகளை ஏற்படுத்தியிருக்க இப்படியாக அவலச் சாவுகள் மக்கள் மனதில் வெறுமையை ஏற்படுத்தியுள்ளன.

ஏன் இத்தனை தற்கொலைகள்?

யாரில் என்ன தவறுள்ளது?

நம்மில் ஒரு தடவையேனும் தற்கொலை எண்ணம் தோன்றி மறையாதவர்கள் எத்தனை பேர்? விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் தான். ஏன் அவ்வாறான எண்ணம் தோன்றியவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடவில்லை? அது ஒரு கணநேர மனநிலைத் தடுமாற்றம். சில கேள்விகளுக்கு அவர்கள் விடை தேடிக் கொள்கிறார்கள். மறுகணம் தமது முடிவை மாற்றிக் கொள்கிறார்கள்.

1.நான் இறப்பதால் கிடைக்கும் பலன் என்ன?

2.நான் இறந்து விடின் துன்பப்படுபவர்கள் எத்தனை பேர்?

3.ஒரு சிறு நன்மையாவது என்னால் இந்த உலகத்துக்கு உள்ளதா?

4.நான் இறப்பின், மனத்தால் சித்திரவதைப்படுபவர்கள் உள்ளார்களா? உதாரணமாக ஒருவர் நான் இதைச் செய்திருந்தால் இவர் இறந்திருக்கமாட்டரா? என்று எண்ணித் துன்புறப் போவது யார்?

5.எனது இக்கட்டான இம் மனநிலைக் குழப்பத்துக்கு வேறு மாற்று வழியுள்ளதா?

6.வாழ்வில் ஒரு தடவையேனும் நான் மற்றவர்களால் பாராட்டப்பட்டு உள்ளேனா?

7.என்னை விட மிகச் சிக்கலில் உள்ளவர்கள் இருக்கிறார்களா?

8.ஆன்மீகப் பற்றுள்ளவராயின் இறந்த பின் என் ஆவிக்கு கொடுமையான மறுபிறப்பு கிடைத்து விடுமோ?

9.தவறுதலாக உயிர்பிழைப்பின் என் கௌரவம் என்ன ஆகிவிடும்?

ஏனோ ஒரு சிலர் இவ்வாறான கேள்விகளைச் சிந்திக்க முதலே முடிவெடுத்து விடுகிறார்கள் அல்லது கேட்டுக்கேட்டு விடை தெரியாமல் வேறு வழியற்று மரணத்தைத் தழுவிக்கொள்கிறார்களா? இப்படியாக இறப்பவர்களில் பலர் மனதளவில் மிகவும் துன்புற்றவராகவே தனது பிரச்சினைகளைக் கலந்து ஆலோசிக்க தகுந்த நபர் கிடைக்காமலே இறந்திருக்கலாம். அடுத்து எமது இளைய தலைமுறையினரின் தற்கொலை முயற்சிக்குப் பொதுவான காரணங்கள்தான் நம்பமுடியாமல் உள்ளன.

1.மோட்டார் சைக்கிள் வாங்குவதற்குப் பெற்றோர் கடன் எடுத்துத்தர முடியாமை.

2.காதலனோ, கணவரோ, மனைவியோ கையடக்கத் தொலைபேசி அழைப்புக்குப் பதிலளிக்காமை.

3.பரீட்சைகளில் தவறுதல்.

4.தொலைக்காட்சி பார்ப்பதையோ வேறு கேளிக்கைகளையோ குறைக்குமாறு கண்டிக்கப் படுகின்றமை.

ஏன் இப்படியான நிலமை ஏற்படுகின்றது. பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையிலான மனநெருக்கம் குறைவடைந்தமைதான் காரணம். வேறுவேறு காரணிகளால் ஒருவரையொருவர் அறிந்தும் புரிந்தும் கொள்ள நேரப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலை.

எனவே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களை யாரும் தாழ்வாகவோ வெறுப்பாகவோ நோக்குகின்ற தன்மை இயலுமானவரை குறைக்கப்பட வேண்டும். உடலில் ஏற்படும் நோய்போல அவருக்கு மனதளவில் தற்காலிகமாக ஏற்படும் ஓர் இயலாத் தன்மைதான் இதற்குக் காரணம்.

தற்கொலை எண்ணம் ஏற்பட்டு வலுப்படுகையில் அந்த நபர் தன்னையே கேள்வி கேட்டு மனநிலையைச் சீராக்கலாம்.

புரிந்துணர்வு உடைய ஒருவருடன் உரையாடித் தெளிவடைய வேண்டும். வன்னியில் இடம் பெயர்ந்த எம்மக்கள் இத்தனை இழப்பின் பின்பும் தமது நிலையைக் கட்டி எழுப்புகின்ற மனவலிமையுடையவர்களாக இருக்கின்ற போது, அதே தமிழராகிய எம் யாழ்.குடாநாட்டு இளம் சமுதாயம் ஏன் இப்படி வழிமாறிக் கொண்டு இருக்கிறது. விடையை அவரவரே தேடிக் கொள்வோம்.

விடையளிக்க வேண்டியவர்களின் பட்டியலில் பெற்றோர், நண்பர்கள் மருந்தக முதலாளிகள் (எந்த விதமான மருத்துச் சிட்டைகளுமின்றித் தொகையான மாத்திரைகளை வழங்குதல்.)

டாக்டர் ரி.பானு,
யாழ்.போதனா வைத்தியசாலை.

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது.மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

# நீர் ஓர் அருமருந்து

(சென்றவாரத் தொடர்ச்சி)

9. பாலருந்தும் நிலையில் உள்ள குழந்தைகளுக்கு ஏற்படும் பசி வேறு, நீர்த்தாகம் வேறு. குழந்தை அழும் போது ஒரு தேக்கரண்டி தண்ணீரை குழந்தையின் வாயருகே கொண்டு சென்றால் தாகம் என்றால் தண்ணீரைப் பருக எத்தனிக்கும், நீர்த்தாகம் இல்லை என்றால் தண்ணீரை மறுத்து விடும். அப்போது பால் அருந்தக் கொடுக்கலாம். எனவே, குழந்தை அழும் போது தாகமா? பசியா? என்பதையும் பிரித்துணர்ந்து தேவைப்படும் அளவில் குழந்தைக்குக் குடி தண்ணீரை ஊட்டுவதன் மூலம் செரிமானக் குறைபாடுகளை ஆரம்ப நிலையிலே சீராக்கப்படுவதால் அஜீரணம், மலச்சிக்கல், வாந்தி, வயிற்றுப் பொருமல் போன்றன தவிர்க்கப்பட்டுக் குழந்தையின் சீரான வளர்ச்சிக்கு உதவுகின்றது.

10. உணவு உண்ணும் போது இடையில் குளிர்பானங்களைப் பருகுவதைத் தவிர்த்தல்.

குடி தண்ணீர் எவ்வளவுதான் தூய்மையானதாக இருப்பினும் அது தேக்கி வைக்கப்படும் பாத்திரம் அதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். காரணம் தேக்கி வைத்திருக்கும் பாத்திரங்களின் தன்மையும் நீரில் நுண்ணியதாகக் கலந்து விடுகின்றது. இரும்பு அல்லது பிளாஸ்ரிக் குழாய்களில் தேங்கி நிற்கும் நீரில் துரு, பிளாஸ்ரிக்கின் இரசாயனக் கலவை குடிதண்ணீரை நஞ்சாக மாற்றுகின்றது. அலுமினியம், பிளாஸ்ரிக், ஈயம் பூசப்பட்ட பித்தளை, செப்பு போன்ற பாத்திரங்களில் தண்ணீர் தேக்கி பயன்படுத்துவதன் மூலம் நீரில் நச்சுத் தன்மை ஏற்பட்டு விடுகின்றது. கண்ணாடி, எவர்சில்வர் போன்றவற்றில் சேமிக்கப்படும் நீரில் நச்சு கலப்பு ஏற்படுவதில்லை. எனினும் கலந்து விட்ட நஞ்சுகளையும் அசுத்தங் களையும் நீக்கும் ஆற்றலும் இவற்றுக்கு இல்லை. தங்கம் வெள்ளி பாத்திரங்களை விடப் பழைய மண்பானையில் வைக்கப்படும் நீரே தரத்தில் உயர்ந்தது.

ச.சுதாகரன், தாதிய உத்தியோகத்தர்,
யாழ். போதனா வைத்தியசாலை

தற்போது சுற்றுச் சூழல் மாசடைவதால் நீரில் கலந்துவிட்ட மாசுக்களை அகற்றுவதற்கு நீரைக் கொதிக்கும் வரை நன்றாகக் காய்ச்சி ஆறவைத்துப் பழைய மண்பானையில் 10 மணி நேரம் வரை அசைவில்லாமல் ஆற வைத்துப் பின்பு வடித்து அடியில் உள்ள வண்டல்களை அகற்றிய பின் பானையைக் கழுவி நீரை அதனுள் ஊற்றி மூன்று நாள்களுக்கு குடிதண்ணீராகப் பாவிக்கலாம். (தொடரும்)

# மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் 3

பல கிறிஸ்தவ மத நிறுவனங்களும் இந்துமத நிறுவனங்களும் மருத்துவச் சேவைக்குப் பெரும் பங்காற்றிவருகின்றன. உளவளத் துணைக்கும் பாதிக்கப்பட்டவர்களின் ஆற்றுப்படுத்துகைக்கும் கிறிஸ்தவ அமைப்புக்கள் ஆற்றிவரும் பங்கு அளப்பெரியது. மத அமைப்புக்கள் பொதுச் சேவைகளில் ஈடுபாடு காட்டுவது ஒரு போற்றுதற்குரிய விடயமாகும். பல மதம் சார்ந்த அமைப்புக்கள் வைத்தியசாலைகளையே வழிநடத்தி வருகின்றன என்பது ஒரு மகிழ்ச்சியான விடயமாகும்.

மதத்துக்கும் மருத்துவத்துக்குமான நெருக்கம் எப்பொழுது ஏற்பட்டது? இது சம்பந்தமாகப் பண்டைய நூல்களில் என்ன சொல்லப்பட்டிருகிறது என்பதை ஆராயும் பொழுது பல தகவல்களை நாம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஆதிகால மருத்துவ முறைகளிலே சித்த மருத்துவமானது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இது திராவிடர்களின் மருத்துவ முறையாக வளர்ச்சி பெற்றுவந்திருக்கிறது. இன்றும் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்து நிற்கின்ற இந்தச் சித்த மருத்துவமானது எப்படித் தோற்றம் பெற்றது? இதன் அடிப்படைக் கருத்துக்கள் எங்கிருந்து கிடைத்தன? எமது சமய சரித்திர நூல்கள் இது சம்பந்தமாக என்ன சொல்கின்றன என்பதை நோக்குவோம்.

சித்த மருத்துவத்தின் தத்துவங்கள் ஆரம்பத்தில் இந்து மதத்தின் முழு முதற்கடவுளாகிய சிவனால் சக்தியிடம் கையளிக்கப்பட்டு சக்தி அதனை நந்தியிடம் கொடுத்து நந்தி அதனை சித்தர்களிடம் சேர்ப்பித்தாகப் பண்டய நூல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தத்துவங்கள் ஆரம்பித்திலே 18 சித்தர்களினால் கையாளப்பட்டிருக்கின்றன. சித்தர்களிலே முக்கியமானவராக அகத்தியர் இருந்திருக்கிறார். அகத்தியரின் தலைமையிலே தான் இந்தச் சித்த மருத்துவத்துறை முழுமையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதைத்தான் எமது சரித்திர, சமய, வரலாற்று நூல்கள் எடுத்துச் சொல்லி இருக்கின்றன.

சித்த மருத்துவத்துறையின் தோற்றம் பற்றிய இந்தக் கருத்துக்களை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளுகின்றோமா அல்லது நம்புகின்றோமா என்பது முக்கியமல்ல. இது அவசியமும் அல்ல. ஆனால் அக்காலத்திலிருந்தே மதமும் மருத்துவமும் ஒருங் கிணைந்து செய்பட்டிருக்கின்றன என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

சிவனின் சரிபாதியாக சக்தி இருக்கிறாள். உடலினுடைய ஒவ்வோர் இயக்கத்துக்கும் தொழிற்பாட்டிற்கும் ஏன் இந்த அண்டசராசரங்கள் அனைத்தின் இயக்கத்துக்குமே சத்தியே மூலகாரணமாக இருக்கிறாள் என்று இந்துமதம் சொல்கிறது. அதைத்தான் விஞ்ஞானமும் சொல்கிறது. மனிதனின் அசைவுக்கும் தொழிற்பாட்டுக்கும் சூரிய மண்டலங்களிலுள்ள அனைத்துப் பொருள்களின் அசைவுக்கும் அடிப்படையாக இருப்பது சக்தி. அதவாது (energy) என்று விஞ்ஞானம் வரையறுத்துச் சொல்கிறது.

விஞ்ஞானம் சொல்வதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த அடிப்படைத் தத்துவத்தை மதங்கள் சொல்லியிருக்கின்றன. இதே போல பல மருத்துவக் கருத்துக்களை மதங்கள் சொல்லியிருக்கின்றன. அவை எந்த மதத்தின் கருத்துக்களாக இருந்தாலும் உள்வாங்கப்பட்ட மனிதனின் சுகாதார மேம்பாட்டுக்காக அவை பயன்படுத்தப்பட வேண்டும். எல்லா மத அமைப்புக்களும் மனிதனின் சுகாதார மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

சி.சிவன்சுதன், வைத்திய நிபுணர்.
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பின் மகத்துவத்தை உணர்வோம் 1

உலகில் வாழ்கின்ற உயிரினங்கள் தம் உணர்ச்சியை வெளிப்படுத்த ஒலியெழுப்புகின்றன. மயில் அகவுகின்றது, குயில் கூவுகின்றது, யானை பிளிறுகின்றது, நாய் குரைக்கின்றது என்று உயிரினங்களின் ஒலிகளை நாம் பல சிறப்புச் சொற்களால் குறிக்கின்றோம். ஆனால், மக்கள் மட்டும் பேசுகின்றனர் எனக் கூறுகின்றோம். ஒருவர் தம் உணர்ச்சியையோ, கருத்தையோ மற்றவருக்கு வெளிப்படுத்தக் கருவியாய் இருக்கும் எதையும் நாம் மொழி என்று கூறுதல் பொருந்தும்.

விலங்குகளின் ஒலியை விலங்கு நூல் வல்லுநர்கள் விலங்குமொழி எனக் குறிப்பர். அதேபோன்று, பறவைகளின் ஒலிகளைப் பறவைமொழி என்பர். விலங்குகளும் பறவைகளும் எழுப்பும் ஒலிகள் பண்டைக்காலம் முதல் இன்றுவரை அதே நிலையிலேயே உள்ளன. ஆனால், மக்கள் தாங்கள் எழுப்பிய ஒலியைச் சிறிது சிறிதாகப் பொருள்தரும் ஒன்றாகச் செய்து மொழியைப் படைத்துள்ளனர் எனலாம்.

- புலன்களால் உணரப்படும் குறியீடுகளைக் கொண்டது மொழி எனலாம்.
- பொருள்களுக்குரிய ஒலி வடிவமான குறியீடுகளைக் கொண்டது பேச்சுமொழி.
- ஒலிகளுக்கு வரிவடிவமான குறியீடுகள் கொண்டது எழுத்துமொழி.

செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியன மொழியின் அடிப்படைத் திறன்களாம். செவிமடுத்தல், பேசுதல் என்பன ஒலியை அடிப்படையாகக் கொண்டவை. வாசித்தல், எழுதுதல் என்பன வரிவடிவத்தை அடிப்படையாகக் கொண்டவை.

வாசித்தல் ஓர் உடல்,உள இயக்கப் படிமுறைச் செயற் பாடாகும். வரிவடிவத்தில் உள்ள எழுத்துக்களைப் பார்த்தல், அவற்றை இனங்காணல், எழுத்தொலிகளைக்கொண்டு சொற்களை உச்சரித்தல், பொருள்படக் கூறல் என்றவாறு உடல் உறுப்புக்களும் உள்ளமும் சேர்ந்தியங்குவதைக் காணலாம்.

வாசித்தலில் இரு நிலைகள் உள்ளன.

- பிறருக்காக வாசித்தல் - உரத்த வாசிப்பு வெளியிடல்
- தனக்காக வாசித்தல் - மௌனவாசிப்பு கிரகித்தல்

வாசித்தலுக்கான பயிற்சி ஆரம்ப வகுப்புகளில் இருந்தே மாணவருக்குக் கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியமாகும்.

ஏனெனில், மொழியின் அடிப்படைத் திறன்களான செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பவற்றுள் மிக முக்கியமாகக் கருதப்படுவது வாசித்தல் திறனேயாகும். வாசிப்பே இன்றைய கற்றல் செயற்பாடுகளில் முக்கிய பங்காற்றுகிறது. நவீன கல்விக்கு அடிப்படை வாசிப்பேதான். எல்லாவகையான பாடங்களைக் கற்பதற்கும் வாசிப்பு ஓர் ஊடகமாகிறது.

வாசிப்புப் பழக்கத்தைச் சிறு வயதிலிருந்தே கைக்கொள்ளவேண்டும். நவீன உலகில் விரைந்துவரும் மாற்றங்களைப் புரிந்துகொள்ளவும் அதற்கேற்ப வாழவும் வாசிப்புப் பழக்கமே அடிப்படையாகிறது.

மொழித்திறன் விருத்திக்கு மட்டுமல்லாது ஏனைய பாடங்களைச் சுயமாகக் கற்றுக்கொள்வதற்கும் வாசிப்பு சிறந்ததொரு கருவியாகிறது. மாணவரிடையே கற்கும் ஆற்றலை மேம்படுத்துவதற்கு வாசிப்பு ஓர் இன்றியமையாத செயற்பாடாகும்.

இன்று மாணவரிடையே சுயகற்றல், கற்கக் கற்றல் போன்ற கருத்துக்களை வலுவடையச் செய்தல் வேண்டும். இவை வலுப்பெற வாசிப்புப் பழக்கமே அடிப்படையாகிறது.

வாசிப்புப் பழக்கத்தின் மூலமே தேடிக்கற்றலை மேற்கொள்ள முடியும். இதன்மூலம் சுயகற்றலை ஊக்குவிப்பதோடு வாசிப்புப் பழக்கமும் தூண்டப்படுகிறது.

மாணவரின் வாசிப்புத்திறன் விருத்தியடையாவிடின் எந்தத் துறைசார் கல்வியிலும் அபிவிருத்தி காணமுடியாது. அதாவது, **''வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகிறது''** எனக் கூறப்படுவதில் இருந்து வாசிப்பின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகிறது. ஒருவரது வாசிப்பின் அளவே அவரது அறிவாற்றலை, மொழியாட்சியை, சொல்லாட்சியை வளப்படுத்தும் சாதனமாகும்.

வாசிப்புப் பழக்கமானது ஒருவரது விடய அறிவைப் பெருக்க மட்டுமன்றி, மகிழ்ச்சியையும் மனநிறைவையும் எய்துவதற்கு உதவும் ஓர் உன்னத செயற்பாடாகும். இதற்குச் சிறுவயதில் இருந்தே வாசிப்பதில் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகிறது.

அந்தவகையில் வாசித்துக் கிரகித்தலில் இடர்ப்படும் மாணவர்களுக்கு அவர்கள் தமது வாசித்து-கிரகித்து-வெளிப்படுத்தும் திறனை விருத்திசெய்வதற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள், முன்வைக்கப்படும் கருத்துக்கள் என்பன மாணவருக்கும் ஆசிரியர்களுக்கும் பயனுள்ளவையாக அமையும்.

**வாசிப்பதில் மாணவர் எதிர்நோக்கும் இடர்பாடுகள்**

வாசிப்பதில் இடர்பாடுகள் எனக் கூறுமிடத்து பெரும்பாலும் ஆரம்ப வகுப்புகளில் இவை எதிர்பார்க்கப்படலாம். எனினும், அண்மைக்கால அவதானிப்புகளில் இருந்து இடைநிலை வகுப்பு மாணவர்களும் வாசிப்பில் இடர்படுவதாக அறியக்கிடக்கிறது.


வாசிப்பில் இடர்பாடு என்பது வாசிக்கவேண்டியவற்றை வாசிக்க இயலாமல் சிரமமுறுவதையே குறிக்கும். எனவே, எந்த மட்டத்தில் மாணவர்கள் இருந்தாலும் இடர்ப்பாடுகளும் அவற்றுக்கான நிவர்த்தி முறைகளும் அதிகம் வேறுபட முடியாது. பொதுவாக மாணவர்கள் எதிர்நோக்கும் வாசிப்பு இடர்பாடுகள் வருமாறு:

- எழுத்துக்களை இனங்காண இயலாமை.
- எழுத்துக்களை இனங்கண்டாலும் எழுத்துக்களை உச்சரிக்க இயலாமை.
- உயிர்க்குறிகளுடனான எழுத்துக்களில் மயங்குதல்.
- ஒலி வேறுபாடு புரியாமல் எழுத்துக்களில் மயங்குதல்.
- நிறுத்தற் குறிகளை அனுசரித்து வாசிக்க இயலாமை. இது பொருள் வேறுபாட்டை ஏற்படுத்தும்.

(வளரும்)

மைதிலி தேவராஜா,
ஆசிரிய ஆலோசகர், ஆரம்பக் கல்வி, யாழ். கல்வி வலயம்.

# The Life Of David Gale




விமர்சனம்

David Gale என்பவன் பல்கலைக்கழக விரிவுரையாளன். அத்தோடு, மரண தண்டனைக்கெதிரான மிக முக்கிய செயற்பாட்டாளனும் கூட. மிக மிகத் தீவிரமாக மரணதண்டனைக்கெதிரான போராட்டத்தை அவனும் அவனது தோழர்களும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், அவர்களுக்குக் கிடைப்பதெல்லாம் தோல்விகளே. யாருக்காவது மரணதண்டனை நிறைவேற்றப்படும். ஒவ்வொரு தடவையும் வீதியில் நின்று போராடுவதும், தண்டனை நிறைவேற்றப்பட்ட அதிகாரபூர்வ அறிவிப்பைத் தொடர்ந்து ஆற்றாமையோடு திரும்புவதுமென்று இவர்களின் போராட்ட வாழ்க்கை போய்க் கொண்டிருக்கிறது. Constance Hallaway என்பவளும் இந்த மரண தண்டனைக்கெதிரான போராட்டத்தில் முக்கிய செயற்பாட்டாளர். மிக உணர்ச்சிபூர்வமாக இதைச் செய்து வருகிறாள். ஒவ்வொரு தோல்வியின் போதும் ஆற்றாமையால் விம்மி வெடிக்கிறாள். Dusty wright என்பவனும் இவர்களுடன் செயற்படும் முக்கியமானவன். வட்டத் தொப்பியொன்றோடு என்நேரமும் காட்சிதரும் இவனை 'Cow Boy' என்று இந்தப்படத்தில் வேறு பாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. ஒருநாள் Constance Hallaway என்ற அந்தப் பெண் கொலையுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்படுகிறாள். உடைகள் களையப்பட்ட நிலையில் முகத்தை மூடி ஒரு பை கட்டப்பட்டு சுவாசிக்க முடியாமல் அவள் கொல்லப்பட்டிருக்கிறாள். Gale மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. மரண தண்டனைக்கெதிராகத் தன் வாழ்வை அர்ப்பணித்துப் போராடி வரும் ஒருவன் அவ்வாறே போராடி வரும் தனது தோழியைக் கொலை செய்தது எல்லோருக்கும் பெரிய அதிர்ச்சியை அளிக்கிறது. Gale மீது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு அவனுக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்படுகிறது. Gale இன் இறுதி நாள்களில் Bitsey Bloom என்ற ஒரு பெண் பத்திரிகையாளர் அவனைச் சந்திக்க வருகிறாள். Gale இன் கதையைத் தொகுப்பதுதான் அவளின் பணி. எதையும் மறைக்காமல் எல்லாவற்றையும் சொல்வதென்ற உறுதிமொழியோடு தனது கதையைச் சொல்லத் தொடங்குகிறான்Gale. தான் நிரபராதி என்று அவளிடம் திரும்பத் திரும்பச் சொல்கிறான். ஒரு கட்டத்தில் அவனை நம்பத் தொடங்கும் அந்தப் பெண்ணும் அவளது உதவியாளனும் Gale இன் வழக்கின் பின்னாலுள்ள சூட்சுமங்களை ஆராயத் தொடங்குகின்றனர். ஒரு கட்டத்தில் அந்தப் பெண் தானே தற்கொலை செய்து கொண்டாள் என்ற முடிவுக்கு வரும்போது ஏன் அப்படிச் செய்து கொண்டாள்? தன்னை வல்லுறவு செய்து கொலை செய்தார்கள் என்ற தோற்றப்பாட்டைத் தரும் வகையில் அவள் ஏன் தற்கொலை செய்ய வேண்டும்? என்ற கேள்விகளோடு படம் நகர்கிறது. தான் குற்றமற்றவன் என்பதை தனது மகள் அறிய வேண்டும். அதற்காக நிரூபி என்று Bloom மைக் கேட்கிறான் Gale. தவறான வகையில் ஒருவன் மரணதண்டனைக்கு உட்படுகிறான் என்பதை நிரூபிப்பதற்காகவே அவள் தற்கொலை செய்து கொண்டாள்.Constance Hallaway உம் அந்த வட்டத் தொப்பிக்காரனும் சேர்ந்து திட்டமிட்டுச் செய்த இந்த நடவடிக்கையில் Gale என்ற அப்பாவி பாதிக்கப்பட்டு மரண தண்டனைக்கு ஆளாகப் போகிறான் என்ற பரிதவிப்போடும் கோபத்தோடும் பத்திரிகையாளர்கள் பயணிக்கிறார்கள்... மையமாக வரும் Gale பாத்திரத்தில் Kevin spacey, Constance Hallaway Laura Linney, பத்திரிகைப் பெண் Bloom ஆக kate winslet வட்டத் தொப்பிக் காரனாக Matt craven என்று இந்த நான்கு பாத்திரங்களுமே கிட்டத்தட்ட முழுக்கதையையும் தாங்கி நகர்த்துகின்றன.

கடைசியில் சாட்சியங்கள் இல்லாததால் Gale இற்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது. மரண தண்டனை நிறைவேற்றியதும் அவன் நிரபராதி என்ற ஆவணங்களுடன் பத்திரிகையாளர் வந்து சேருகின்றனர். இந்தப் படத்தில் நிரபராதிக்கு மரண தண்டனை வழங்கப்படுகிறது என்பதைத் தெளிவாகச் சொல்லி இருக்கிறது. நிரபராதி ஒரு பெண் மரணதண்டனையை ஏற்பது தொடர்பில் அதற்கு எதிராகச் செயற்பட்டு வெற்றி காணாத விடத்தில் தன்னையே தற்கொலை செய்து கொண்டு மரணதண்டனைக்கு எதிராகவும் நிரபராதிக்கு மரணதண்டனை வழங்கப்படுகிறது என்ற செய்தியை இந்தப் படம் தெளிவாக வெளிக்காட்டி இருக்கிறது. மரணதண்டனைக்கு எதிராகப் போராடி இருவருமே தமது உயிரைத் துறந்து நிரபராதிக்கும் மரணதண்டனை வழங்கப்படுகிறது என்ற செய்தியைப் படமாக எடுத்திருப்பது பாராட்டத்தக்கது.

குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைகளை தவிர்த்துக் கொள்வோம்

தற்போது யாழ்.குடாநாட்டில் தற்கொலைகளின் அளவு அதிகரித்துள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

மனிதனின் வாழ்வில் வாழ்வதா சாவதா என்ற எண்ணம் சில வேளைகளில் ஏற்படும். மேலும் துன்பப்படும்போது ஏன் இந்த வாழ்க்கை, செத்திடலாம்போல இருக்கு என்ற எண்ணம் ஏற்படுவதுண்டு. அவ்வாறு சிந்தித்தாலும் தற்கொலை முயற்சிக்கு போகமாட்டார்கள்.

உளநோய் நிலைகளைப் பொறுத்தவரையில் மனச்சோர்வு நிலையும் உளப்பிளவு நிலையும் தற்கொலைக்கு ஏதுவாக அமைகின்றன. மனச்சோர்வு நிலை பாரம்பரியக் காரணிகளாலும் சூழல் காரணிகளாலும் ஏற்படுகின்றன. இதன்போது ஏற்படும் உடற்றொழிலியல் மாற்றங்களால் உணர்வுகளை வெளிக்காட்டமாட்டார்கள். தம்மில் வெறுமையை உணர்வர். நித்திரை இன்மை அல்லது அதிகாலையிலேயே தூக்கத்திலிருந்து எழுந்து விடுவர். சோர்வு நிலையிருக்கும். சுறுசுறுப்பாக இயங்கமாட்டார்கள். சந்தோசமாகக் கதைத்துப் பேசமாட்டார்கள். அவர்களின் உணர்வுகளில் மாற்றம் ஏற்படும். தனக்குத்தானே குற்றம் காணல் குற்ற உணர்வு, வெறுமை உணர்வு என்பன ஏற்படும். இனி வாழ்ந்து என்ன? செத்து விடுவோம் என்ற எண்ணங்கள் வரும். தமக்குத்தாமே தீங்கு செய்யும் நிலை ஏற்படும். மதுபானம் பாவித்தல், புகைத்தல் போதைப்பொருள் பாவித்தல் என்பன ஏற்படலாம்.

மனச்சோர்வைக் குறைந்த அளவிலான மனச்சோர்வு, ஓரளவு கூடிய அளவிலான மனச்சோர்வு,கடினமான மனச்சோர்வு என வகைப்படுத்தலாம். குறைந்த அளவிலான மனச்சோர்வில் ஒருவருக்கு மகிழ்ச்சி இருக்காது. பதகளிப்பு இருக்கும். படபடத்துக் கொண்டு இருப்பர். நித்திரை குறைவாக இருக்கும். தனது சூழலில் நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் தீங்காக நினைத்துக்கொண்டு இருப்பர். ஓரளவு கூடியளவிலான மனச்சோர்வில் வெளித்தோற்றம் கவர்ச்சிகரமானதாக அமையாது. ஆண்கள் தாடி வளர்ப்பர். பெண்கள் முக அலங்காரம் இன்றி இருப்பர். கவலைப்படுவர். செயற்பாடு குன்றி இருப்பர். மனதில் சந்தோசம் காணப்படாது. பதகளிப்புக் காணப்படும். மற்றவர் சொல்வதைக் கிரகிக்கமாட்டார்கள் அல்லது தமது செயற்பாடுகளில் கிரகித்தல் குறைந்து காணப்படுவர். தமது ஞாபகசக்தி குறைந்து விட்டது என எண்ணுவர். உணவில் நாட்டம் காட்ட மாட்டார்கள். சோர்வான எண்ணம். வெறுப்பு என்பன காணப்படும். தற்கொலை எண்ணம் மேலோங்கும். தாம்நோய் வாய்ப்பட்ட நிலையிலுள்யோம் என எண்ணுவர். மீள மீள எண்ணங்கள் தோன்றும் நித்திரைக் குழப்பம் ஏற்படும். தமது சுய நிலையை இழப்பர்.



கடினமான மனச்சோர்வு நிலையில் குற்ற உணர்வு இருக்கும். வெறுமை உணர்வு இருக்கும். தமது உடலில் பயங்கரநோய் உள்ளதென எண்ணுவர். மற்றவர்களில் குறை காணும் இயல்பு மேலோங்கும். தற்கொலைக்கான காரணங்களாக வயதாதல், தனிமையில் வாழுதல் குடும்ப உறுப்பினர்களது ஆதரவு இன்மை. மற்றவர்கள் தற்கொலை செய்திருப்பின் அவ்வாறு செய்ய முனைதல், திரைப் படங்களைப் பார்த்து அவ்வாறான நிலைக்கு வரல் என்பன அமைகின்றன. விரக்தி நிலையில் அதாவது பெரிய அளவிலான நெருக்கீட்டின் பின் உணர்வு வெளிப் பாடாக பதகளிப்பு, பதற்ற மூர்க்க இயல்பு, தனக்குத்தானே தீங்கு செய்தல் போன் றன மூலம் தற்கொலைக்கு முயற்சிக்கலாம்.

உளப்பிளவை நோயாளிகளின் தற்கொலை செய்தல் 3 காரணங்களால் ஏற்படலாம். முதலாவது நோயாளி சரியாக மருந்து பாவிக்காவிடின் அவர்களில் தோன்றும் மாயப்புலனுணர்வுகள் ''நீ போய் கிணற்றில் விழு!'' ''நீ போய் விழு நெருப்பில் விழு!'' ''நீ போய் கடலில் விழு!'' ''நீ போய் சுருக்கு மாட்டு!'' என்றபடி கட்டளையிடும். அடுத்து உளப் பிரிவை நோயாளிகளின் மருந்துகளின் பக்கவிளைவினாலும் தற்கொலைக்குச் செல்லலாம். தற்கொலை செய்யக் கூடியவர்களை அடையாளம் காணுவதில் நோயாளியின் உளவியல் நிலையினைக் கணிப்பீடு செய்தல் வேண்டும். அதற்கு நாம் நோயாளி விளங்கக் கூடிய மொழி யில் உரையாடல் வேண்டும். அவர்கள் இலகுவான நிலையில் இருத்தல் வேண்டும். அவர்களது முறைப்பாட்டை வினவி அறிதல் வேண்டும். அறிகுறிகள் கூடுகின்றதா? குறைகின்றதா? என்பதனை அறிதல் வேண்டும். எக்காரணிகள் அறிகுறிகளைக் காட்டுகின்றன என்பதனை அறிதல் வேண்டும். பிரச்சினைகள் மாறுகின்றதா? இல்லையா? என அறிதல் வேண்டும். பிரச்சினையின் கடுமை சாதாரண வாழ்க்கையைப் பாதிக்கின்றதா என்பதனை அறிதல் வேண்டும்.

மது பாவிப்பவரா இல்லையா என்பதனை அறிதல் வேண்டும். மது பாவிப்பவராயின் தனக்குத்தானே தீங்கு விளைவிக்கும் தன்மை அதிகம் உடையவர் என்பதனை அறிதல் வேண்டும். நோய் நிலைக்கு முந்திய குணாம்சத்தை அறிதல் வேண்டும். சமூகச் சூழ்நிலை பற்றி ஆராய்தல் வேண்டும். பொதுவாக நெருக்கீடுகள் மிகுந்த சமூகச் சூழலில் தற்கொலை வீதம் அதிகரிக்கும். அதுவே தற்போது யாழ்ப்பாணத்தில் தற்கொலை அதிகரிப்புக்கு ஒரு காரணமாக அமையலாம். ஒருவர் தன்னைப்பற்றி என்ன நினைக்கின்றார் மற்றவர்களுடன் எவ்வாறு பழகுகின்றனர். என்பதனை அறி

## டாக்டர் சி.யமுனானந்தா

தல் வேண்டும். மனச்சோர்வை, மன நிலையை அறியும்போது ஒருவரின் தோற்றத்தில் நெற்றிச்சுருக்கம் காணப்படும், கண்தொடர்பு குறைவாக இருக்கும், முகத்தில் பிரகாசம் காணப்படாது. குற்ற உணர்வு, வெறுமை, தன்னம்பிக்கை குறைவு என்பன இருக்கும், தற்கொலை பற்றி கதைக்கும் போது கண்ணீர் விடுவர்.

தற்கொலையைத் தவிர்ப்பதற்கு ஒருவரின் ஆபத்தான நிலையை அவருடன் இருப்பவர்கள் அடையாளம் காணல் மிகவும் இன்றி அமையாதது. இது தனிமையில் இருப்பவர்களில் சாத்தியம் இல்லை. எனவே தனிமையில் வாழ்பவர்களை அவர்களின் உறவினர்கள் கிழமைக்கு ஒரு தடவையேனும் மாதத்துக்கு ஒரு தடவையேனும் தரிசிக்க வேண்டும்.

அடுத்த மனச்சோர்வு நிலையில் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை விரக்தி சுயகரிசனை குறைவு என்பதனை உள வளர்சீர்மியம் மூலம் ஆற்றுப்படுத்தல் வேண்டும். அடுத்து உடற்றொழிழியல் மாற்றங்களினால் செயற்பாடுகுன்றி, உற்சாகம் இழந்து காணப்படின் உள மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துக்களை எடுத்தல் அவசியம். மனச்சோர்வின் போது ஏற்படும் அசாதாரண உணர்வுகளை அறிவூட்டல் மூலமும் தொழில் முயற்சிகள் மூலமும் நீக்கல் வேண்டும்.

எமது பிரதேசத்தில் அதிக மனச்சோர்வு நிலைக்கு கழிவிரக்கமும் ஒரு காரணம். கழிவிரக்கம் என்பது இழப்பால் ஏற்படும் துன்பமாகும். இதன் முதல் கிழமைகளில் இழப்பை மறுத்தல் இழப்பை நம்பாமை, விறைப்பு நிலை இருக்கும். அடுத்து சில மாதங்கள் கவலை, நிம்மதியின்மை, நித்திரையின்மை, உணவில்விருப்பமின்மை, குற்ற உணர்வு, சமூகத்திலிருந்து ஒதுங்கல், மற்றவர்களில் குறைகாணல், மாயப் புலனுணர்வு ஏற்படும். உதாரணமாக இறந்தவர் வந்தது மாதிரியான தோற்றம், கதைத்த மாதிரியான உணர்வு, போலி நம்பிக்கை என்பன ஏற்படும்.

உளச்சோர்வுக்குச் சிகிச்சை அளிக்கும்போது பாதகமான உணர்வுகளைச் சாதகமான உணர்வுகளாக மாற்றல் வேண்டும். கோப உணர்வைச் சாந்தமாக மாற்றல் வேண்டும். குற்ற உணர்வைச் சாந்தமாக மாற்றவேண்டும். குற்ற உணர்வை நீக்கவேண்டும். வெக்க உணர்வை நீக்கல் வேண்டும். பய உணர்வை பயமற்ற நிலைக்கு மாற்றல் வேண்டும். சந்தேகங்களைத் தெளிவாக்கல் வேண்டும். ஏக்கத்தை அமைதிப்படுத்தல் வேண்டும்.

சோர்வை உற்சாக நிலைக்கு மாற்றல் வேண்டும். வெறுமையை நிறைவு நிலைக்கு மாற்றல் வேண்டும் தீங்கு செய்தல், மூர்க்கத் தன்மை, சித்திரவதைசெய்தல் முரண்படல் என்பவற்றைத் தவிர்த்தல் வேண்டும். யுத்தத்தால் பாதிக்கப்பட்டவ ர்களில் இவை ஏற்படும் எனத் தெரிந்து சிறந்த சமூக உளச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் தற்போதைய சூழல் மிகவும் எதிர்மாறான சமூகச்சூழலாக அமைவதால் மனச்சோர்வும் தற்கொலைகளும் அதிகரித்து உள்ளன. மற்றவர்களுக்கு நன்மை செய்தல், சாந்த வழி முறைகளை ஊக்குவித்தல் பிறருக்கு தீங்கு விளைவிக்காமை என்பனவற்றை ஊக்குவிக்க வேண்டும்.

இறுதியாக யுத்தத்தில் இறந்தவகளின் விவரங்களோ எண்ணிக்கையோ தெரியாத நிலையில் 2 வருடங்களை எமது சமூகம் கடந்து விட்டது. இந்த நிலையில் அவர்கள் நினைவாக யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சம் மரங்களை உடைய வனத்தை 10 ஏக்கர் காணியில் ஏற்படுத்துவோமாயின் இறந்த உறவுகளின் மனச்சோர்வை படிப்படியாக நீக்கலாம்.

*பஞ்சத்தில் நெஞ்சம் அஞ்சேல்*
*வஞ்சத்தில் நெஞ்சம் அஞ்சேல்*
*தஞ்சத்தில் நெஞ்சம் அஞ்சேல்*
*மஞ்சத்தில் நெஞ்சம் அஞ்சேல்*
*சஞ்சலத்தில் நெஞ்சம் அஞ்சேல்-என்றுமிவ்*
*வெஞ்சமர் பஞ்சத்தில் நெஞ்சம் அஞ்சேல்.*

# தமிழ்மொழியை புறக்கணிக்கலாமா?

ஜி.சீ.ஈ.உயர்தர கலை வகுப்பு மாணவர் பாடத்தெரிவுகள் தனியார் கல்வி நிலைய ஆசிரியர் சிலரால் தவறான வழியில் வழி நடத்தப்படுகின்றனர். உயர்தர வகுப்பினருக்கான பாடத்தெரிவுகள் மாணவர்களின் எதிர்காலத்தைப் பொறுத்தே திர்மானிக்கப்பட வேண்டும். மாணவர் விருப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டால் பல மாணவர்களை எதிர்காலத்தில் நடுத்தெருவிலேயே சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

கலை வகுப்பு மாணவர் இன்றைய சூழலில் மொழிப்பாடத்துடன் இரு சமூகவியல் பாடங்களைத் தெரிவு செய்வதே பொருத்தமானது. புதிய சுற்றறிக்கையின் படி (ED/01/12/06/15/01) இரண்டு மொழிப் பாடங்கள்தெரிவு செய்வதற்கு அனுமதிக்கப்படும் போது குடாநாட்டில் சில தனியார் கல்வி நிலைய ஆசிரியர் தம் உழைப்பை நோக்காகக் கொண்டு மாணவரை தவறாக வழி நடத்துகின்றார்.

மொழியை ஒரு பாடமாகத் தெரிவு செய்வதன்மூலம் மாணவர் எதிர்காலத்தில் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

✱பகிரங்க பொதுப் பரீட்சைகளில் பொது அறிவும், பொது விவேகமும், கிரகித்தலும், சுருக்கம் எழுதுதலும் முதன்மை பெறுகின்றன. இதற்கு மொழியாற்றல் மிக அவசியமானது.

பல்கலைக்கழக அனுமதி எல்லோருக்கும் கிடைத்துவிடக்கூடியதன்று. எனவே அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியே மாணவர் சிந்திக்க வேண்டும். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பப் பிரிவு, தமிழ் விசேட பிரிவு இத்துறைகளில் சேர்வதற்கு மொழிப்பாடம் கற்றிருக்க வேண்டும். மொழிப்பாடத்தை மாணவர் கற்காவிடின் எதிர்காலத்தில் ஆரம்பப் பிரிவு இடைநிலைப் பிரிவுகளில் தமிழ் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படும் என்பதனையும் உணர வேண்டும்.

✱உயர்தர வகுப்பில் சில பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கும் கற்றுக் கொண்டவற்றை வெளிப்படுத்துவதற்கும் மொழியாற்றல் தேவை. உதாரணமாக அரசியல், வரலாறு போன்ற பாடங்களைப் படிப்போர் சிறந்த மொழியாற்றல் இல்லாவிடில் நற்பயனைப் பெற முடியாது. அதே சமயம் அளவையியல் பாடம் படிப்பவர்களுக்குக்கூட மொழியாற்றல் அவசியமாகின்றது.

## யதார்த்தன்
### உயர்தர வகுப்பு மாணவன்

✱பல்கலைக்கழகப் படிப்பும் கிடைக்கவில்லை. தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் அனுமதி கிடைக்கவில்லை. அச்சந்தர்ப்பத்தில் உத்தியோக வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் மொழிப்பாடம் அவசியமாகின்றது.

✱பல்கலைக்கழகத்தில் நாடகம், சங்கீதம், நடனம் படிப்பவர்களுக்கு மொழிப்பாடம் ஒரு துணைப்பாடம் என்பதை நாம் பிறந்துவிடக்கூடாது.

ஜி.சீ.ஈ.உயர்தர விஞ்ஞானப் பிரிவில் ஒரு மாணவன் உயிரியல், இரசாயனம் போன்ற பாடங்களுடன் விவசாயப் பாடத்தைத் தெரிவு செய்தாலும் மருத்துவத் துறைக்கு அனுமதிக்கப்படுவர். பாடசாலை அதிபர்கள் விவசாயத்துக்குப் பதிலாகப் பௌதீகவியல் பாடத்தையே தெரிவுசெய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது நியாயமானதே. கலை வகுப்பில் ஒரு மாணவன் நாடகம் இந்து நாகரீகம், அளவையியல் போன்ற பாடங்களை எடுக்க விரும்புகின்றான் என்றால் அவனது எதிர்காலத்தைக் கருத்திற் கொள்ளாமல் அனுமதிக்க முடியுமா?

தமிழ்ப் பாடத்தைப் புறக்கணிக்க நேரின் எதிர்காலத்தில் தமிழ் ஆசிரியர் இன்மை என்றொரு நிலை உருவாகும். தமிழ் கடினமான பாடமுமன்று. போதிய அளவிலான வழிகாட்டும் நூல்களும் வெளிவந்துள்ளன. ''மெல்ல தமிழ் இனிச் சாகும்'' என்று பாரதி கூறிய கூற்று உண்மையாகி விடாமல் காக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து உண்ணுவதால் ஆரோக்கியம், மகிழ்ச்சி அதிகரிக்கும்

அவசரம் நிறைந்த இன்றைய வாழ்க்கையில் ஒவ்வொருவரும் தமக்கென்று தனித்தனிக் கவலைகளுடன் பயணம் செய்து வருகின்றனர். தற்போது கணவன்-மனைவி இருவரும் வேலை செய்தால் தான் குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முடியும் என்ற நிலை உள்ளதால் ஒட்டு மொத்தத்தில் குடும்பமே பணத்தைத் தேடி ஓடிக்கொண்டு இருக்கிறது.

இதனால் அந்தக் குடும்பங்களில் உள்ள குழந்தைகளை, பிள்ளைகளைச் சரிவரக் கவனிக்க முடியாத நிலை பரவலாக எல்லா இடங்களிலும் உள்ளதோடு பிள்ளைகள் தடம் மாறும் நிலையும் காணப்படுகின்றது. எனவே இதுபோன்ற பிரச்சினைகளைத் தவிர்க்கவும், வளரும் குழந்தைகள் ஆரோக்கியமாகவும் நல்லவர்களாகவும் வளரவும் உதவும் வழிமுறைகள் குறித்து அமெரிக்காவில் உள்ள மனநல ஆய்வாளர்கள் கடந்த 12 ஆண்டுகளாக ஆய்வு நடத்தி வந்தனர்.

இந்த ஆய்வில் பல்வேறு குடும்ப நிகழ்வுகள் குறித்து ஆய்வுகள் நடத்தப்பட்டன. இதில் தினமும் ஒரு வேளையாவது குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக இணைந்து சாப்பிடும்போது உறவு தொடர்பான பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கிறது என்று தெரியவந்தது.

என்னதான் வேலை, அலைச்சல் என்று இருந்தாலும் குடும்பத்தினர் அனைவரும் தினமும் இரவு நேரம் ஒன்றாக அமர்ந்து சாப்பிடும் பழக்கத்தை ஒவ்வொரு தாயும் கண்டிப்பாகப் பழக்குதல் அவசியம். இந்தப்பழக்கத்தைத் தினமும் கடைப்பிடிக்க முடியாவிட்டாலும் வாரம் ஒரு முறையாவது அல்லது ஒரு வாரத்தில் எத்தனை முறை சேர்ந்து சாப்பிட முடியுமோ அத்தனை முறை சேர்ந்து சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம்.

இவ்வாறு ஒன்றாகச் சேர்ந்து சாப்பிடும் போது தான் குழந்தைகள், பிள்ளைகள் சத்தான உணவுகளை சாப்பிடுகிறார்களா? அவர்களுக்கு உரிய சத்துக்கள் சாப்பாட்டின் மூலம் கிடைக்கிறதா? அவர்களுக்கான பிரச்சினைகள் என்ன? என்பதைப் பெற்றோர் குறிப்பாகத் தாய் அறிந்து கொள்ள முடியும். மேலும் பெற்றோரின் கண்காணிப்பில் சாப்பிடும் போது குழந்தைகள் சத்து நிறைந்த உணவைச் சாப்பிடுவதோடு பெற்றோரும் குழந்தைகளும் மனம் விட்டுப் பேசும் வாய்ப்பும் கிடைக்கும். இதன் மூலம் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்வதோடு குடும்பத்தினருக்கு இடையே நெருக்கமும் அதிகரிக்கும். இதனால் குடும்ப ஒற்றுமை அதிகரிப்பதோடு வாழ்க்கையில் வரும் எந்தச் சவால்களையும் சந்திக்கும் ஆலோசனைகளும், மனப்பக்குவமும் கிடைத்து விடுகின்றது.



-அபிநயா

தங்களது குழந்தைகள், வாலிப பருவத்தில் உள்ள பிள்ளைகள் அல்லது சகோதரர்கள் தவறுகள் எதுவும் செய்கிறார்களா? அவர்களின் கல்வி சரியாக உள்ளதா? எனவும் அவர்களின் நண்பர்கள் நல்லவர்களா? செயற்பாடுகள் சரியான திசையில் செல்கிறதா? என்பனவற்றைப் பெற்றோர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இதன்மூலம் தங்கள் குழந்தைகளை தவறுகளில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்.

இளைய தலைமுறையினருக்கு, வாலிபப் பருவத்தில் ஏற்படும் சந்தேகங்கள், மாற்றங்களைப் புரிந்துகொள்ள முடியாமல் தடுமாற்றம் ஏற்படுவது சகஜம். இதுபோன்ற நிலையில் அவர்களுக்கு உரிய ஆலோசனைகளை பெற்றோர்கள் வழங்க வேண்டியது அவசியம். எனவே பெற்றோர்களாகிய நாம் எல்லோரும் எந்த வேலைகள் இருப்பினும் எமது பிள்ளைகளைக் கண்ணும் கருத்துடனும் அவதானிக்க வேண்டியது அவசியம். அவ்வாறு அவதானிப்புக்களுடன் இருக்கும்போது எமது பிள்ளைகள் தவறான வழிக்குச் செல்வதைத் தவிர்க்கமுடியும்.

# எதிர்பார்ப்புகளுடன்...!



-கிருஷா, புலோலி.

அன்பு மடல் எழுதி...
அனுப்பி விட முடியவில்லை
எங்கு அனுப்புவது என்று
புரியாமல்... என் மனதில்
உள்ள ரணங்கள் இங்கே...
எழுத்துக்களாய் சிதறிடவே
செவி வழிக் குரல் கேட்க
முடியவில்லை...!
சில நிமிடங்கள் கூட...
ஆறுதல் கூற அண்ணா
என்ற உறவின்றி
எதிர்பார்ப்புகளும்
ஏக்கங்களுமாய்...
காலங்கள் கடந்து செல்ல
உங்கள் தங்கை மனதில் உள்ள
துன்பம் யாரறிவார்!
எப்போ வருவீர்கள்?
காலங்கள் சென்றாலும்
காத்திருப்பேன் என் அன்பு
அண்ணாவின் வருகைக்காக...

# தனிமை கவலையைப் போக்க வல்லது அதுவே பிரச்சினைகளையும் ஏற்படுத்தும்



நதிகளில் ஓடும் நீரின் வேகம் அதிகரிப்பதுபோல் மனிதனுடைய வாழ்க்கையின் கால ஓட்டத்தின் வேகமும் அதிகரித்துச் செல்லும்போது பொருளாதாரத்தினால் எதிர்காலத்தின் பாதுகாப்புப் பற்றிய அச்சம், செய்யும் தொழிலில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள், குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள், நோய் நொடிகளில் வரும் தொல்லை, நண்பர்கள், எதிரிகள், போட்டியாளர்களால் எற்படும் பிரச்சினைகள் போன்ற பல காரணங்கள் நம்மைக் கவலையில் ஆழ்த்துகின்றது.

கவலைக்கு நமது மனதில் இடம் கொடுக்க ஆரம்பித்துவிட்டால் நம்மால் தெளிவாகச் சிந்தனை செய்யக்கூட முடியாது. அதனால் தம்முடைய செயற்றிறனும் பாதிக்கப்படுவதோடு உழைக்கும் ஆற்றலையும் சிறிது சிறிதாக இழந்துவிடுவோம்.

இதன்போது சிடுசிடுப்பு, முன்கோபம் மற்றும் தீய பழக்கங்கள் உள்ளிட்ட பல தீய பழக்கங்கள் நம்மைத் தொற்றிக் கொள்கின்றன. நாளடைவில் இந்தப் பழக்கங்கள் மனநோய், தன்னை மாய்த்துக் கொள்ளும் எண்ணம், பிறரைத் தொந்தரவு செய்தல் உட்படப் பல விபரீதங்களை ஏற்படுத்திவிடும்.

கவலை என்பது தீராத வியாதி இல்லை. அது மட்டுமின்றிக் கவலைப்படுவதால் எந்தவொரு பிரச்சினையும் தீரப்போவதில்லை. நாம் சோதனைகளைக்கண்டு அஞ்சுவது கோழைத்தனமாகும். எனவே நாம் அனைவரும் சிந்திக்கத் தொடங்கினாலேயே ஒவ்வொருவரது கவலையும் பறந்துவிடும். கவலைகளை மறக்க நாம் அமைதியான ஓரிடத்துக்குச் சென்று அமர்தல், கவலைக்கான காரணங்களைப் பற்றிச் சிந்தித்தல் வேண்டும். இந்தக் காரணம் கடன் தொல்லையா? தொழிற் பிரச்சினையா? வேலை கிடைக்காமை போன்ற பொருளாதாரப் பிரச்சினையா? அல்லது குடும்ப உறவு, நட்புறவு போன்றவற்றால் ஏற்படும் பிரச்சினைகளா? நோய் நொடிகள் போன்ற சிக்கல்களா? எனப் பிரித்து எதை அடிப்படையாகக் கொண்டது என்று தெரிந்து அதற்கான காரணம் என்ன? எதனால் யாரால் ஏற்பட்டது எந்தச் சந்தர்ப்பத்தில் இருந்து வரத் தொடங்கியது? நாம் இதில் எந்தளவுக்குக் காரணமாக இருக்கின்றோம் என்பதை ஆராய்தல் வேண்டும். வேரும் கிளையும் தொல்லை என்று தெரிந்தால் வெட்ட வேண்டியது அவசியம். எனவே இதற்கான காரணத்தை அறிந்து அவற்றைக் களைய வழிகளை யோசித்துச் சிறந்த வழிகளைத் தேர்ந்தெடுப்பதற்குச் சிந்திப்போம்.

தனிமை பல விடயங்களுக்குத் தீர்வு கொடுக்கும். ஆனால் தனிமை கவலைக்கு ஒரு காரணமாக அமைந்து விடாமல் பார்த்துக் கொள்வதோடு அன்றைய வேலைகளை அன்றே முடிப்பது, தேவைகள், விருப்பங்களை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொள்வது போன்றவை கவலையை வரவிடாமல் தடுக்கச் சிறந்த வழிமுறைகளாகும்.

-சஞ்சீ, யாழ்ப்பாணம்.

# சுகபோக வாழ்க்கையை விரும்பி சமுகத்தில் தலைகுனிய வேண்டுமா?

தாய்மை என்னும் உயர்ந்த அந்தஸ்து பெண்களுக்கு மட்டுமே இறைவனால் வழங்கப்பட்ட ஒரு வரப்பிரசாதமாகும். பிள்ளைகளை வளர்த்து அவர்களின் வாழ்க்கையை சீரான வழிகளில் கொண்டு செல்ல வேண்டிய முக்கிய பொறுப்புத் தாயிடமே உள்ளது. ஆனால் தற்போதைய காலம் பெண்களை மாற்றிவிட்டது. தாய்மை என்னும் அந்தஸ்தைப் பெண்கள் ஏற்றுக்கொள்வதற்கு விரும்புவதில்லை. இவற்றுக்குக் காரணம் அவர்களிடம் கல்வி அறிவு மேன்மை அடைந்திருப்பதுதான். இவர்கள் தமது கல்விக்கு ஏற்ற வகையில் சிறந்த வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொண்டு சுதந்திரமாக வாழ்வதற்கே நினைக்கின்றார்கள்.

பெண்கள் சொந்தக்காலில் நிற்க வேண்டும் என்பது பெருமைக்குரிய விடயம் தான். ஆனால் குடும்பம், குழந்தை, உறவு என்று வாழ்வதால் யாரும் எந்தவொரு பாதிப்பையும் அடைந்துவிடுவதில்லை. பொதுவாகக் குடும்பப் பெண்கள் குடும்பச் சூழ் நிலைகள், பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவற்றினால் வேலைக்குப் போக வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இதனாலேயே முக்கியமாகப் பெண்கள் தவறான வழிக்குச் செல்கின்றனர்.

இவர்கள் தம்மை இயந்திரமயமான வாழ்க்கை முறைக்குள் மாற்றி விட்டதனால் இவ்வாறான காரணமும் ஒன்றாகி விட்டது. அதுமட்டுமன்றிக் குடும்பப் பிரச்சினைகளைக் கலந்து ஆலோசிக்க இவர்கள் நேரம் ஒதுக்குவதில்லை. திருமணத்தின் பின்னர் பெண்கள் வேலைக்குச் செல்வதால் வீட்டில் உள்ள நன்மைகள், தீமைகள் பற்றிச் சிந்திக்க வாய்ப்புக்கள் ஏற்படுவதில்லை. இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும் தொழில் செய்யும் இடங்களில் பெண்கள் தம்மைத் தாய்மை அடைந்துள்ளவர்களாக இனங்காட்ட வெட்கப்படுகிறார்கள். இதனால்தான் தாய்மை அடைவதைக் கூடுதலான பெண்கள் விரும்புவதில்லை. ''சேற்றில் மிதித்து தண்ணீரில் காலைக் கழுவுவதைப் போல'' ஆண்கள் தப்பித்துக் கொள்வார்கள். இதனால் காலப்போக்கில் பெண்களே சமுதாயத்துக்கு முன்னால் தலை குனிய வேண்டியும் அவப் பெயரைக் கேட்க வேண்டியும் உள்ளது.

-சோபியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மக்கள் ரொம்பப் பாவம்

## உன்னிமேனன் கவலை

''பூங்காற்றிலே உன் சுவாசத்தை தனியாகத் தேடிப் பார்த்தேன்...'' என்கிற மென்மையான காதல் கீதத்தின் குரலுக்குரிய சொந்தக்காரன் உன்னிமேனன், தமிழ் நாட்டு அரசினால் இரண்டு தடவை சிறந்த பாடகருக்கான விருதைப் பெற்றவர். தென்னிந்தியத் திரையுலகின் இசைப்பரப்பில் நன்கு பேசப்படுகின்ற பாடகர்களின் வரிசையில் உன்னிமேனனும் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ளார்.

''ஒஸ்கார்'' விருதுக்குரிய நாயகன் இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் இசைத் துறையில் காலடி வைத்த ''ரோஜா'' திரைப்படத்தில் ''புது வெள்ளை மலர்... என்ற பாடலைப் பாடியதன் பின்னர் திரை உலகில் உன்னிப்பாகத் தேடப்பட்ட அறியப்பட்ட பாடகராக உன்னிமேனன் தன்னை நிலை நிறுத்திக்கொண்டார்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடி இசை உல கில் வலம் வந்துகொண்டிருக்கும் உன்னிமேனன் கடந்த புதன்கிழமை அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெற்ற இசைத்தட்டு வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு இசை நிகழ்வினை நடத்தியிருந்தார்.

அவரைச்சந்தித்து 'உதயன்'பேட்டி கண்டது.

**கேள்வி:** இசைத்துறையில் தங்களின் பிரவேசம் குறித்து .

**பதில்:** இந்தத் துறைக்குள் நான் நுழைந்தது தற்செயலாக நடந்ததொரு சம்பவமாகும். 'அமுதும் தேனும்...' என்னும் திரைப்படத்தில் (படம்வெளியாகவில்லை) என்னைப் பாடுமாறு அழைப்பொன்று வந்தது.அதில் ஒரு பாடலை பாடினேன். அதன் மூலம் என் அடையாளத்தை திரையுலகத்தின் குறிப்பிட்ட சிலர் அறிந்து கொண்டனர்.

முதன் முதலாக பாட்டுப் பாடினேன். படம் வெளியாகவில்லையென்ற கவலை எனக்குள்ளேயிருந்தாலும் பாடகருக்கான அடித்தளத்தினை அமைத்திருக்கிறேன் என்ற மகிழ்வு மனதை சுதாகரித்துக் கொண்டது. இருந்தாலும் டாக்டர் கே.ஜே.ஜேசுதாஸ், எஸ்.பி.பாலசுப்பிரமணியம் ஆகியோரது ஒலிப்பதிவுகளைப் பார்ப்பதற்கு சென்று வருவேன். அதுவே எனது தொழிலாக இருந்தது. இவ்வாறு நான் செல்லும் சந்தர்ப்பத்தில் திரையுலகைச் சேர்ந்த '' உன்னி'' என்பவர் '' மேனன் நீயும் பாட முயற்சிக்கலாமே! ''என்று உந்துலைத் தந்தார். அத்துடன் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

எனது பட்டத்துக்குக் கிடைத்த வேலையை முழுமையாகத் தூக்கியெறிந்து எனது குரல் வளத்துக்குக் கிடைத்த இசைத் துறைக்குள் என்னை முழுமையாக இணைத்துள்ளேன். இசைத்துறையில் இருக்கின்ற ஆத்ம திருப்தி வேறு எதிலும் கிடையாது.

கவிப்பேரரசு வைரமுத்துவின் பாடல்களைத்தான் அதிகம் பாடியிருக்கின்றேன். தற்போது சித்தார்த் நடிக்கும் 180 திரைப் படத்தில் ''சந்திக்காத கண்களே'' என்ற பாடலை கார்த்திக்கின் இசையமைப்பில் பாடிக்கொண்டிருக்கின்றேன்.

வாய்ப்புகள் மீண்டும் என்னைத்தேடி வந்தன. நான் ஒருபோதும் சந்தர்ப்பத்தைத் தேடி அலையவில்லை. நடிகர் கமலஹாசன் நடித்த '' ஒரு கைதியின் டயரி' என்ற திரைப்படத்தில் '' பொன் மாலை கோபம் ஏன்''... என்ற பாடலைப் பாடினேன்.அதுவே எனது முதற்பாடலாக அமைந்தது.

அதன் பின்னர் மீண்டும் வாய்ப்புகள் என்னைத் தேடிவந்தன. கர்நாடக சங்கீதத்தை முறையாகக் கற்றுக் கொள்ளவில்லை எல்லாமே கேள்வி ஞானம்தான் தமிழில் இதுவரை 500 பாடல்களைப் பாடியுள்ளேன். இன்னும் பாடுவேன்..

**கேள்வி:** பௌதீகவியற்றுறை பட்டதாரியான உங்களை எப்படி இசைத்துறை கவர்ந்து கொண்டது.

**பதில்:** நான் பௌதீகவியல் துறைப் பட்டதாரியான பின்னர் தனியார் கம்பனியொன்றில் பணிபுரிந்தேன். அங்கு வேலையும், வீடுமென வாழ்க்கை இயந்திரமயமாச்சு. எப்படியாவது இதற்குள் இருந்து மீண்டு விடவேண்டும் என்று முயற்சிசெய்தேன்.

**''போக்குவரத்துத் தான் சரியான கஸ்ரமாக இருந்தது வீதிகள் ஒழுங்கானவையாக இல்லை என்பதை என்னால் உணரமுடிகின்றது. யுத்தம் முடிவடைந்த பின் இங்கு அபிவிருத்திப் பணிகள் நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் நாம் வந்த வீதிகளின் பரிதாபத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. இந்த வீதிகளில் யாழ்ப்பாண மக்கள் என்னென்று தான் பயணிக்கிறார்களோ் தெரியாது ரொம்பப் பாவம் யுத்தம் தின்று துப்பிய எச்சங்களாக இடிந்த கட்டடங்களைக் காணக்கூடியதாக இருந்தது.''**

இசைத்துறையைத் தேர்ந்தேடுப்போம் அதுதான் மனதுக்கு இதம் தரும் என்ற முடிவையெடுத் தேன். எங்கள் வீட்டில் யாரிடமும் இசைஞானம் மருந்துக்குக்கூட கிடையாது. அப்படியிருக்கையில் எப்படி என்னிடம் வரப்போகிறது. என்ற நம்பிக்கையீனம் என்னைச் சுற்றியிருந்தது.

இருப்பினும் இந்தத் துறைக்குள் எப்படியாவது நுழைந்து விடவேண்டும் என்ற வைராக்கியத்துடன் தொடர்ந்து முயற்சித்தேன். அதன் பலனாக இன்று தென்னிந்தியத் திரையுலகில் பாடகராக என்னை அடையாளப்படுத்தியிருக்கிறேன்.

**கேள்வி:** உங்களுக்கு நடிகராகும் எண்ணம் இருக்கிறதா?

**பதில் :** இருக்கிறது. அப்படியொரு எண்ணம் மனதில் தோன்றியுள்ளது. நல்ல சந்தர்ப்பங்களும் உரிய கதாபாத்திரமும் கிடைக்குமானால் நிச்சயமாக நடிப்பேன் மலையாளத் திரைப்படத்தில் ஓர் இசை அமைப்பாளராக, பாடகராக ,நடிகராக பணியாற்றியிருக்கின்றேன். தமிழ்த் திரையுலகம் எனக்கு நடிகர் என்ற அந்தஸ்தை தருமானால் அதையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**கேள்வி:** யாழ்ப்பாணம் எப்படியிருக்கு?

**பதில்:** யாழ்ப்பாணத்தை முழுமையாக சுற்றிப் பார்க்க முடியவில்லை. கொழும்பிலிருந்து ஏ-9 பாதை வழியாக வந்தேன். பகல் முழுவதும் பயணம். இரவு இசை நிகழ்வு என்று பிஸியாகவிருந்ததோம்.

போக்குவரத்துத் தான் சரியான கஸ்ரமாக இருந்தது வீதிகள் ஒழுங்கானவையாக இல்லை என்பதை என்னால் உணரமுடிகின்றது. யுத்தம் முடிவடைந்த பின் இங்கு அபிவிருத்திப் பணிகள் நடைபெறுவதாகச் செல் கிறார்கள். ஆனால் நாம் வந்த வீதிகளின் பரிதாபத்தைப் பார்த்தால் அப்படித்தெரியவில்லை. இந்த வீதிகளில் யாழ்ப்பாண மக்கள் என்னென்று தான் பயணிக்கிறார்களோ தெரியாது. ரொம்பப் பாவம். யுத்தம் தின்று துப்பிய எச்சங்களாக இடிந்த கட்டடங்களைக் காணக்கூடியதாக இருந்தது.



**கேள்வி:** இரண்டு தடவை ஈழத்துக்கு வருகை தந்துள்ளீர்கள் எமது கலைஞர்கள் பற்றி

ஈழத்துக் கலைஞர்கள் சாதுரியமாக, நுட்பமாகத் தமது திறமைகளை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் அவர்களுக்கு சரியான வசதி வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகக்க ாணப்படுகின்றது. திறமைசாலிகளாக இருந்து வசதி வாய்ப்புக்கள் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தோடு ஈழத்துக் கலைஞர்கள் இருப்பதை அவதானிக்க முடிந்து. ஆனால் இத்தகைய நிலையினால் கலைஞர்கள் சோர்ந்து விடக்கூடாது. இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி சாதனைகளைப் படைக்க முன்வர வேண்டும்.

கலைஞர்களை மதிக்கின்ற பண்பு கலை நயம் மிக்கவர்களிடம் உருவாக வேண்டும். அளவெட்டியில்

### சந்திப்பு: கவிநேசன்

கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் ஆயிரக்கணக்கான ரசிக உள்ளங்கள் திரண்டிருந்தனர். அமோக ஆதரவையும் வரவேற்பையும் நிறைவாகத் தந்திருந்தார்கள். இவர்களுடைய வரவேற்பைப் பார்த்தபோது மீண்டும் இங்கே வந்து இசை நிகழ்வின் நடத்த வேண்டும் என்ற பேரவா எனக்குள்ளே ஊற்றெடுத்தது. சந்தர்ப்பம் கிடைத்தால் நிச்சயமாக வருவேன்.

**கேள்வி:** எமது ஈழத்துக் கலைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில் :** இசை என்பது தெய்வீகமானது. அதனை சிறந்த முறையில் கையாள வேண்டும். கலைஞர்கள் தமக்கிடையிலான போட்டி மனப்பாங்குகளைத் தவிர்த்து எல்லோரும் கலை ஆர்வலர்கள் என்கின்ற எண்ணத்தை மனதில் விதைத்துச் செயற்படவேண்டும்.

ஒருவருக்கு ஒருவர் துரோகத்தனம் இல்லாமல் தூய மனதோடு விட்டுக்கொடுப்போடு செயற்பட்டால் எதிலும் எப்போதும் சாதிக்கலாம்.

இசை மனதுக்கு அமைதியைத் தோற்றுவிக்கின்ற பெரும் சக்தி என்று சொன்னால் மிகையில்லை.

தென்னிந்தியத் திரையுலகைப்பெறுத்தவரை போட்டிகள் நிறைந்த ஒரு களம் ஆனால் கலைஞர்கள் வளர்வதற்கு நிறைவான வசதிவாய்ப்புக்கள் அங்கு இருக்கிறன. அதனால் எத்தகைய போட்டிகளையும் சமாளித்து முன்னிலைக்கு வரலாம் என்கின்ற நம்பிக்கை கலைஞர்களுக்கு இருக்கிறது. ஆனால் ஈழத்தைப் பெறுத்த வரை இங்குள்ள கலைஞர்கள் நிறையவே சாதனை படைக்கவேண்டும் என்கின்ற மன உறுதியுடன் இருக்கின்றார்கள். ஆனால் அதற்குரிய வசதி வாய்ப்புக்கள் இல்லாமல் அவதிப்படுகிறார்கள்.

இந்த நிலையை மாற்றி ஈழத்துக் கலைஞர்களும் சாதனையாளர்களாக உலகெங்கும் வலம்வர துறைசார்ந்த அமைப்புக்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்து இவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லவேண்டும் என்கின்ற அன்பான வேண்டுகோளையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கலைஞர்கள் சார்பாக விடுக்கிறேன்.

அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட ஈழத்துக் கலைஞர்களின் வாழ்வியலைக் கட்டியெழுப்ப அவர்களை சமூக நீரோட்டத்தில் இணைத்துக்கொள்ள கலையுலகம் தன்னாலான பங்களிப்பினை மேற்கொள்ள வேண்டும். இதுவே ஈழத்து கலைத்துறை சார்ந்த இன்றைய தேவையாகும். இதனை அனைவரும் உணர்ந்து எமது கலைஞர்களை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவாளர்களுக்கான சைக்கிள் ஓட்டம் முதல் மூன்று இடங்களும் பண்டத்தரிப்புக்கு

யாழ்ப்பாணம், மே 15

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை கூட்டுறவாளர்களுக்கான சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகளை நேற்று நடத்தியது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக நேற்று காலை ஆரம்பமான 60 கிலோ மீற்றர் தூரம் கொண்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் முதல் மூன்று இடங்களையும் பெற்று வெற்றிவாகை சூடியது.

து.ரஜீம் முதலாமிடத்தையும் ந.டினிஸ்ரன் இரண்டாமிடத்தையும் த.பிரசாத் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.



கூட்டுறவுச்சபைத் தலைவர் ராஜாராம் தலைமையில் இடம் பெற்ற போட்டியைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் ஆரம்பித்து வைத்தார். (த-26)

## வலைப்பந்தாட்டம் அடுத்த வாரம்

வலி.வடக்கு, மே 15

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் எதிர்வரும் 18; 19 ஆம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி எதிர் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம்.
* கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.
* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி.
* புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாலயம் எதிர் வரணி மகாவித்தியாலயம்.
* வேலணை மத்திய கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
* காரைநகர் யாழ்ரன் கல்லூரி எதிர் வடமராட்சி மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை.
* உடுப்பிட்டி மகளிர் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

இரண்டாம் சுற்றில் இருந்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மோதவுள்ளது. (த-86)

## தாச்சி பயிற்சி முகாம்

'சோ ஆ' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சி சங்கம் மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட செம்பியன்பற்று,மாமுனை விளையாட்டுக் கழகங்களுக்குத் தாச்சிப் பயிற்சி முகாம் ஒன்றை கடந்தவாரம் மாமுனையில் நடத்தியது. இதில் தாச்சிச் சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம், 'சோ ஆ' நிறுவனத்தின் இணைப்பாளர் எஸ். ராஜா ஆகியோர் பயிற்சிகளை வழங்கினார்கள்.(த-23)

## 13,15 வயதுப் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் யாழ். மாவட்டதில் வருடாந்தம் நடத்தப்படும் 13 வயது, 15 வயது பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டி அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது. 13 வயது பிரிவில்1999 இல் 2000 ஆண்டு பிறந்தவர்களும் 15 வயது பிரிவில் 1998, 1997ஆம் ஆண்டு பிறந்தவர்களும் பங்குபற்றலாம். மேற்படி போட்டியில் 13 வயது பிரிவுக்கு சமபோச நிறுவனம் அனுசரணை வழங்குவதால் அந்தப் பிரிவில் பங்கு பற்றும் அணிகளின் போட்டிக்கான மத்தியஸ்தர் கட்டணம் நீக்கப்பட்டுள்ளது எனச் சம்மேளன இணைப்பாளர் ஆ.பேர்ட்டி பனிஸ்ரர் தெரிவித்துள்ளார். பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் இணைப்பாளருடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-8)

# நெல்லியடி ம.வி. சம்பியன்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டித் தொடரில் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி சம்பியன் ஆனது.

மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்தியமகாவித்தியாலய அணியை எதிர்த்து கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து விளையாடிய கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

மூன்றாமிடத்துக்காக இடம் பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு சிறிமுருகன் வித்தியாலய அணியை எதிர்த்துத் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் மயிலங்காடு சிறிமுருகன் வித்தியாலய அணி 2:1 என்ற கோல்கணக்கில் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய அணியை வெற்றி கொண்டது. (ம-23)

# தாச்சிச் சுற்றுப் போட்டியில் நண்பர்கள் வி.க. வென்றது

யாழ்ப்பாணம்,மே15

புங்குடுதீவு காந்தி விளையாட்டுக்கழகம் தீவக ரீதியில் நடத்திய ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இறுதியாட்டத்தில் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்தவாரம் இடம்பெற்ற தாச்சிச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நிலாஜோதி விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது.

• இதில் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் எதிர்த்து விளையாடிய நிலாஜோதி விளையாட்டுக்கழக அணியை 4:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (ம-23)

## கனிஷ்ட மெய்வன்மைப் போட்டி ஜூன் மாதம்

யாழ்ப்பாணம்,மே15

இலங்கை மெய்வன்மை சங்கத்தினால் நடத்தப்படும் தேசிய மட்ட கனிஷ்ட மெய்வன்மைப் போட்டி அடுத்த மாதம் 9ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை பியகமவில் அமைந்துள்ள மகிந்தராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 18 ஆம் திகதியாகும்.

எனவே அதற்கு முன்னர் யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளரிடம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

# ஹொக்கிப் போட்டி

வலி.வடக்கு,மே15

யாழ்.மாவட்டக் கல்வி வலயப் பாடசாலை அணிகளின் ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.இந்த ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி எதிர் ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி.
* யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.
* இரண்டாம் சுற்றில் இருந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதவுள்ளன. (த-86)

# எல்லேயில் வென்றது ஹாட்லி

வலி.வடக்கு,மே 15

யாழ்.மாவட்டக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லேப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி யாழ்.மாவட்டச் சம்பியனாகியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய நெல்லியடி மத்திய கல்லூரி 3 ஓட்டங்களைப் பெற்றதுடன் அனைவரும் ஆட்டமிழந்தனர். பிரகாஷ், கௌசியன், பிரியதர்சன் தலா ஒரு ஓட்டங்களைப் பெற்றனர்.

4 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய ஹாட்லிக் கல்லூரி 10 வீரர்கள் ஆட்டமிழந்த நிலையில் 4 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. அஜித் 2 ஓட்டங்களையும் தயான், கதீஸ் தலா ஒரு ஓட்டங்களையும் பெற்றனர். (த-86)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்டக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான ஆண் , பெண்களுக்கான சதுரங்கப்போட்டி நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

# அம்மா என்ன செய்யப் போகிறார்?



எல்லாக் கருத்துக் கணிப்புகளையும் பொய்யாக்கியபடி மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராக இன்று ஜெயலலிதா ஆட்சிக் கட்டிலில் ஏறுகிறார். பத்து வருடங்களின் பின்னர் மூன்றாவது முறையாக அதிகாரம் அவர் கைகளுக்கு வந்திருக்கிறது. எவருமே நினைத்துப் பார்க்காத வகையில் 203 தொகுதிகளில் அம்மாவின் இரட்டை இலை பெரு விருட்சமாய் துளிர்விட்டுள்ளது.

''கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டுதான் கொடுக்கும்'' என்ற விடயம் தி.மு.க. தலைவர் கருணாநிதியைப் பொறுத்தவரை தலைகீழாக மாறிப்போய்விட்டது. இதுவரை அவர் வாழ்க்கையில் சந்தித்திராத படுதோல்வியை தி.மு.க. பெற்றிருக்கிறது.

''இந்த வெற்றி அ.தி.மு.கவுக்கான ஆதரவால் மாத்திரம் கிடைத்த ஒன்றல்ல. தி.மு.கவின் காட்டுத் தர்பார் ஆட்சியின் எதிர்ப்பலையே இந்தளவு தூரம் அது தூக்கி எறியப்பட்டு மீளவே முடியாத வரலாற்றுத் தோல்வியைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டது.'' என்று 'துக்ளக்' சஞ்சிகையின் ஆசிரியர் 'சோ' தெரிவித்திருந்த கருத்துக்கள் யதார்த்தமானவை.

குடும்ப அரசியலை ஸ்திரப்படுத்தி அதன் மூலம் எக்காலத்திலும் அசைக்கமுடியாத இராச்சியத்தை உருவாக்குவதில் கருணாநிதி ஆரம்பத்தில் வெற்றி கண்டிருந்தார். 2006ஆம் ஆண்டு தேர்தலில் அவர் வீசியெறிந்த 'இலவச மாயை' அவரது அதிகாரத்தை 2011 வரை விசாலித்துக்கொள்ள உதவியது. எனவே 85 வயது தாண்டிய பிறகும் முதலமைச்சர் என்ற கதிரையில் இருந்து இறங்க மனமில்லாதவராக எல்லா அதிகாரங்களையும் தன்னுடைய முச்சக்கர நாற்காலிக்குள்ளேயே முடக்கி வைத்திருந்தார். ஊடகத்துறையை தயாநிதி மாறன் மூலமும் சன் ரி.வி, கலைஞர் ரி.வி மூலமும், சினிமாத் துறையை தன்னுடைய பேரன்களான உதயநிதி ஸ்ராலின், துரை தயாநிதி போன்றோர் மூலமும், எழுத்தாளர்கள், புதிய சிந்தனை வீச்சுக் கொண்டவர்களை கனிமொழி மூலமும் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து தன்னுடைய அடுத்த சந்ததியையும் ஆட்சிப் பயிரை ஆழ வேரூன்றச் செய்தார். தி.மு.க.வை எதிர்த்து அரசியல் செய்வோரை அடக்குவதற்கு அஞ்சா நெஞ்சன் அழகிரி இருந்தார். சாணக்கியமாய் வெல்வதற்கு ஸ்ராலின் இருந்தார். வர்த்தகத் துறையை காலின் கீழ் வீழ்த்துவதற்கு கலாநிதி மாறனும் தோள்கொடுத்ததால் தமிழகம் முழுவதுமே ஒரு குடும்பத்தின் பிடிக்குள் வந்துசேர்ந்தது. அதன் பின்னர் அவர்கள் நினைத்தது மட்டுமே நடந்தேறிக்கொண்டிருந்தது. எல்லா அராஜகங்களையும் செய்துவிட்டு தேர்தல் காலத்தில் மக்களின் கண்களில் பணக்கற்றைகளைக் காட்டினால் வாக்குகள் வகைதொகையின்றி விழும் என்பதே கருணாநிதி குழுவினரின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது. இதுவே தவறாகிப் போனது.

ஆரம்பத்தில் கழகத்துக்காக வேலை செய்த தொண்டர்கள் பின்னர் கருணாநிதிக்காக மட்டுமே வேலை செய்யத் தொடங்கினர். கருணாநிதி என்ற விம்பத்தை மட்டுமே பெரிதாக்கிக் கொண்டு அதன் மறைவில் எல்லா தில்லாலங்கடி வேலைகளையும் கருணாநிதி குடும்பம் அரங்கேற்றத் தொடங்கியது. இரண்டாவது ஆட்சிக் காலத்தில் கருணாநிதிக்கு நடந்த பாராட்டு விழாக்களும் அவருக்கு வழங்கப்பட்ட பட்டங்களும் சூடப்பட்ட மணி மகுடங்களும் எண்ணற்றவை. பாராட்டு விழா என்ற பெயரில் நடந்தேறிய ஆபாச நடனங்களை முதல் வரிசையில் இருந்து பார்த்து பரவசமடைந்தார் கருணாநிதி. எழுந்து நடக்கவே முடியாத நிலையில் சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்தபடி திறந்த வாய் மூடாமல் 18 வயது நடன மங்கைகளின் அரைகுறை உடை அசைவுகளை அடிக்கடி பார்த்து ரசித்துக்கொண்டிருந்தார் அவர்.

திடீரென தமிழ் மொழி மீது ஞாபகம் வந்தவர் போல உலக செம்மொழி மாநாட்டை கோவையில் நடத்திக் காட்டினார். தன்னுடைய மகளுக்கும் மகனுக்கும் பேரனுக்கும் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொடுப்பதற்காக புதுடில்லிக்கு ஓடித்திரிந்ததிலேயே அவருடைய ஆட்சிக் காலத்தின் பெரும் பகுதி கழிந்துவிட்டது. இந்த அலைச்சல் போதாது என்று இந்தியாவின் மிகப் பெரிய ஊழல் என்ற சாதனையைப் படைத்துள்ள - ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் களை விழுங்கிய - ஸ்பெக்ட்ரம் 2ஜி அலைக்கற்றை விவகாரம் தி.மு.க.வையும் அதன் தலைவர் கருணா நிதியையும் மிரட்டத் தொடங்கின. கருணாநிதியின் செல்லப்பிள்ளையாக விளங்கிய முன்னாள் மத்திய தொலைத்தொடர்பு அமைச்சர் ஆ.ராசா, சி.பி.ஐ.யின் கிடுக்கிப் பிடிக்குள் சிக்கிக்கொண்டார். விடாது கறுப்பு என்பது போல ஸ்பெக்ட்ரம் விவகாரம் கனிமொழியின் காலையும் சுற்றியது. இந்தத் தலையிடிகளில் இருந்து மீள முன்னரே தேர்தல் வந்துவிட்டது. ஆனாலும் தி.மு.க. வட்டாரத்தில் வெற்றி பற்றிய மதிப்பீடுகள் உறுதியாகவே இருந்தன.

இதுவரையும் யாருடனும் கூட்டணி அமைக்காத விஜயகாந்த் முதல் முறையாக அ.தி.மு.க.வுடன் கைகோர்த்தார். அம்மாவின் அசுர வெற்றிக்கு இதுவும் முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆனாலும் இந்தக் கூட்டணியைக் கண்டு அசரவில்லை தி.மு.க. தன்னுடைய நெடுநாள் கூட்டாளியான காங்கிரஸ் இருக்கும் தைரியத்தில் அவர்களுக்கு 63 தொகுதிகளை ஒதுக்கிக்கொடுத்து தன்னுடைய எல்லாப் படை, பண பலங்களோடும் தேர்தலில் களமிறங்கியது அது. பணபலம், ஆட்சி அதிகாரம், பத்து வருட ஆட்சியில் செய்த அபிவிருத்திகளின் பட்டியல் என்று தி.மு.க. எடுத்துவிட்ட அஸ்திரங்கள் ஏராளம். எல்லா அஸ்திரங்களுமே தேர்தலின் போது மக்களின் வாக்குகளுக்கு முன்னால் ஊமையாகிப்போயின.

தி.மு.க.வின் சாதனைப் பட்டியல் பிரசாரத்துக்கு எதிராக அ.தி.மு.க.வும் தன் பங்குக்கு கணைகளைத் தொடுத்தது.

'ஈழத்தமிழர்களுக்காக எதுவுமே செய்யாமல் அவர்களைக் கருணாநிதி முதுகில் குத்திவிட்டார்.'

'ஒரு மணி நேர உண்ணாவிரத நாடகத்தால் ஈழமக்களின் வாழ்வினை அழித்துவிட்டார்'

'தமிழ்நாட்டின் எல்லா வளங்களையும் தி.மு.கவின் குடும்ப அரசியல் ஏப்பம் விட்டுவிட்டது'

'ஸ்பெக்ட்ரம்' ஊழலில் ஜாதி, மத பேதமின்றி எல்லோருமே கிடைத்த பணத்தை பகிர்ந்துகொள்ளையடித்து விட்டார்கள்'

என்பன போன்ற அ.தி.மு.கவின் அதிர்வெடிகள், ஏற்கனவே ஆட்சியாளர்கள் மீது அதிருப்தி கொண்டிருந்த மக்களின் மனங்களை மிகச்சரியாகத் தாக்கியது.

விளைவு?

''வயது முதிர்ந்த காலத்தில் வீட்டில் இருந்து ஓய்வெடுக்கும்படி என்மீது பேரன்பு கொண்ட தமிழ்மக்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்'' என்று வார்த்தைகளுக்குள் தன்னுடைய தோல்வியை மறைத்துக்கொண்டு, தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளிவரு முன்னரே தன்னுடைய பதவியை உதறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்.

தோல்வியின் விளிம்பில் இருந்த - அடுத்த முதல்வர் என்று தி.மு.க.வின் உடன் பிறப்புக்கள் நம்பிய - மு.க.ஸ்ராலின் மின்னணு தேர்தல் இயந்திரங்கள் பழுதடைந்ததால் தப்பித்துவிட்டார். இந்த முறைகேடு குறித்து தேர்தல் ஆணையாளரிடம் முறையிடப் போவதாகவும் குறித்த தொகுதியில் மறுவாக்குப் பதிவு மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அ.தி.மு.க. தரப்பு ஆவேசக் குரல் எழுப்பி வருகிறது.

தேர்தல் முடிவுகள் தொலைக்காட்சிகளில் வெளிவரத் தொடங்கிய மறுகணமே ஜெயலலிதாவின் வெற்றி உறுதியாகிப்போனது. அப்போது பெரும்பாலான மக்கள் கருணாநிதியைப் பற்றியோ ஜெயலலிதாவைப் பற்றியோ சிலாகிப்பதற்குப் பதிலாக 'வைகைப் புயல்' வடிவேலுவை நினைத்தே பரிதாபப்பட்டனர். சினிமாவில் தனக்கு வாழ்வளித்த விஜயகாந்துக்கு எதிராக பிரசாரக் களம் இறங்கிய வடிவேலு எவ்வளவு தூரத்துக்கு தரம் தாழ்ந்த வார்த்தைகளைப் பிரயோகிக்க முடியுமோ அதைவிடத் தரம் தாழ்ந்த பிரசாரத்தில் இறங்கினார். நொடிக்கு நொடி குபீரெனக் கிளம்பும் சிரிப்பு நிறைந்த வடிவேலுவின் பேச்சைக் கேட்கத் திரளாகக் கூட்டம் கூடினாலும் வடிவேலுவின் பிரசாரம் ஒருவகையில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந் மீது ஆத்திரத்தை உண்டுபண்ணுவதற்குப் பதிலாக அனுதாபத்தையே ஏற்படுத்தியது. 29 ஆசனங்களைப் பெற்று தமிழகத்தின் அசைக்கமுடியாத சக்தியாக விளங்கிய தி.மு.க.வையே பின்னுக்குத் தள்ளி எதிர்க்கட்சித் தலைவர் என்ற அந்தஸ்துக்கு விஜயகாந் வருவதற்கு வடிவேலுவும் முக்கிய காரணம்.

இந்தத் தேர்தலில் முக்கியமாகக் கவனிக்கப்பட்ட இன்னொரு திரையுலகப் பிரபலம் விஜய். இவருடைய 'காவலன்' திரைப்படத்தை எப்பாடுபட்டேனும் திரையிட முடியாத வண்ணம் தி.மு.க. போட்ட முட்டுக்கட்டைகள் விஜய் தரப்பை உசுப்பேற்றிவிட்டது. அவருடைய மக்கள் இயக்கம் ஜெயலலிதாவுக்கு ஆதரவு தெரிவித்து பிரசார வேலைகளிலும் மும்முரமாக ஈடுபட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் விஜயின் கதி அதோகதிதான் என்ற நிலைமையே இருந்தது. ஆனாலும் ஆண்டவனும் அம்மாவும் மக்களும் விஜயையும் காப்பாற்றிவிட்டார்கள். வடிவேலுதான் பாவம்! தலையில் முக்காடு போட்டபடி தேர்தல் முடிவுகள் வந்த மறுகணமே தலைமறைவாகிவிட்டார்.

இவைதான் தமிழகத்தைப் பொறுத்தவரை பரபரப்பான விடயங்கள். ஆயினும் தான் பதவிக்கு வருவது இறுதிசெய்யப்பட்ட பின்னர் தன்னுடைய சொந்தத் தொலைக்காட்சியான ஜெயா ரீ.விக்கு வழங்கிய பேட்டியில் ஈழத்தமிழர்கள் பிரச்சினை பற்றியும் பிரஸ்தாபித்துள்ளார்.

## ஔண்யன்

''இலங்கை ஜனாபதி மகிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தில் ஏற்றவேண்டும் அல்லது இலங்கை மீது பொருளாதாரத் தடையை கொண்டுவர வேண்டும் என்று மத்திய அரசுக்கு நான் நெருக்குதல் கொடுப்பேன்'' என்று ஜெயலலிதா உதிர்த்த வார்த்தைகள் இலங்கை அரசுக்கு எரிச்சலைக் கொடுத்திருக்கும். ஏனெனில் கருணாநிதி இருந்தபோது இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் விசுவாசத்துடன் கூடிய அழுத்தங்கள் எவையும் இந்திய மத்திய அரசுக்கு கொடுக்கப்படவில்லை. இத்தனைக்கும் மத்திய அரசின் கூட்டாளிகளில் தி.மு.க.வும் ஒன்று. தனது வாரிசுகளின் அமைச்சுப் பதவிகளைக் காப்பாற்றவே கருணாநிதி ஈழத்தமிழர் விடயத்தில் அடக்கிவாசித்தார்.

இப்போது அம்மாவின் முறை. ஆட்சிக்கு வந்த உடனேயே ஈழத்தமிழர்களுக்காக மத்திய அரசுடன் போராடுவேன் என்று அவர் கூறினாலும் கூட இடையே பயன்படுத்திய ஒரு வார்த்தை ஜெயலலிதா மீதும் சந்தேகத்தையே உண்டுபண்ணுகிறது.

''ஈழத்தமிழர் பிரச்சினை என்பது இரு நாடுகள் சம்பந்தப்பட்ட சர்வதேசப் பிரச்சினை. அதில் ஒரு மாநிலம் தலையிடமுடியாது. இந்திய மத்திய அரசே இதுவிடயத்தில் தீர்க்கமான செயற்பாட்டை மேற்கொள்ளமுடியும். எனவே இந்திய அரசை வலியுறுத்த மட்டுமே என்னால் முடியும்.''

இதுவே அவர் சொன்ன வார்த்தைகள். மெல்ல மெல்ல யோசித்து, திக்குமுக்காடியே அவர் இந்தச் சொற்களை வெளியே விட்டிருந்தார். உறுதியற்ற இந்தச் சொற்களுக்கு வலிமையூட்டி இதயசுத்தியோடு தமிழகத்தின் குரல் ஈழத்தமிழர்களுக்காக ஜெயலலிதாவின் குரல் வளையூடாக வெளிப்படுமானால் இந்திய மத்திய அரசு தன்னுடைய நிலைப்பாட்டை இலங்கை அரசுக்கு எதிராக எடுக்க உந்துதலாக அமையும். தன்னுடைய வார்த்தைகளுக்கும் ஈழத்தமிழர்களின் வாழ்வுக்கும் வலிமை சேர்க்க முயல்வாரா ஜெயலலிதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜரட்ணம் பராசக்தி



பொன்னையா லேன், "இராஜசக்தி", ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜரட்ணம் பராசக்தி நேற்று (14.05.2011) சனிக்கிழமை அதிகாலை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா இராஜரட்ணத்தின் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், புகையிரத நிலையம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் திரவியம், அப்பாத்துரை கண்மணி, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், சிவக்கொழுந்து, மகாலிங்கம், நடராசா, சிங்கராசா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான சிவயோக நாயகி (திருகோணமலை), அருளானந்தன் (ஓய்வுபெற்ற எழுதுநர், பொலிஸ் திணைக்களம்) ஆகியோரின் சிறிய தாயும் திருமதி தையல்நாயகி (ஓய்வுபெற்ற உப தபால் அதிபர், பிடாரி கோயிலடி), தில்லைநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி), கருணாநிதி (ஓய்வுபெற்ற தபால் அதிபர், லண்டன்), மகாலட்சுமி (வெள்ளவத்தை), தயாநிதி (சந்திரன், சந்திரா ஸ்ரோர்ஸ், ஆனைக்கோட்டை), குணானந்தன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், இலங்கை வங்கி) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற சபாரத்தினம், தங்கேஸ்வரி, வரதராஜன் (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர், சுன்னாகம்), ரதிதேவி (லண்டன்), காலஞ்சென்ற செல்வநாயகம் (சட்டத்தரணி, JPUM , கொழும்பு) மற்றும் புஸ்பராணி, சிவநாயகி (மக்கள் வங்கி, வெள்ளவத்தை) ஆகியோரின் மாமியும் பிறேமாவதி, கமலாவதி கிருஷ்ணகுமார், நந்தகுமார் யசோதரா (உப தபால் அதிபர், யாழ்கடை வீதி), முரளிதரன், கெங்காதரன், இராஜேந்திரன், பிரபாகரன், தயானுஷா (உப தபால் அதிபர், பிடாரி கோயிலடி), துஸ்யந்தி (லண்டன்), ஜனார்த்தனன் (லண்டன்), யதிசங்கர், கஜேந்திரன், துவாரகன் (லண்டன்), தனுஷா (மக்கள் வங்கி, கொழும்பு), உதயணன் (லண்டன்), கார்த்திக் (மருத்துவபீடம், யாழ்.), பிரசன்னா (NDB வங்கி, கொழும்பு), வண. இ.இராஜ்குமார் (போதகர், தென்னிந்தியத் திருச்சபை, உடுவில்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரூபிதன், இராகவி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'இராஜசக்தி'
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.
தொ.பே.: 021 222 7412

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(C/024)(31)(20.50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுவிக்க... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அவர்களது பெற்றோர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களான ஒன்பது பேர் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னர் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த வாரத்தில் இவர்கள் காணாமற் போயிருக்கிறார்கள் என்று அவர்களின் பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளால் முன்னர் புதைத்து - மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் ஆயுதங்கள் மற்றும் ஷெல்கள் என்பவற்றை மீட்பதற்காக இவர்களைப் படையினர் அழைத்துச் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## பொலிஸ்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன், வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ், பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார் அடங்கிய மூவரணி அடுத்த வாரமளவில் கொழும்பு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வாரம் இந்த மூவரணி இலங்கை வருவதாக இருந்தது. எனினும் பின்னர் அது பிற்போடப்பட்டது.

இந்திய அரசின் இறுக்கமான செய்தியுடன் கொழும்பு வரும் மூவரணி அரசியல் தீர்வுக்கான கடும் அழுத்தத்தையும் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை, உலக அரங்கில் ஏற்படுத்தி உள்ள சிக்கலில் இருந்து மீள்வதற்கு இந்தியாவின் தயவை இலங்கை எதிர்பார்த்திருக்கும் இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ள புதுடில்லி ஆர்வமாக இருப்பதாக ராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.

அதனடிப்படையிலேயே மாகாண சபைகள் ஊடாக அரசு தீர்வு காண முயன்றால் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் அவற்றுக்கு வழங்கப்பட வேண்டும் என்று மூவரணி வலியுறுத்தவுள்ளது.

''வடக்கு - கிழக்குக்கு மட்டும் இந்த அதிகாரங்களை வழங்குவதில் பிரச்சினை இருக்கும் என்று இலங்கை அரசு கூறுமானால், ஏனைய மாகாணங்களுக்கும் அவற்றை வழங்கியாவது தீர்வை ஏற்படுத்துமாறு இந்தியா வலியுறுத்தும்'' என்று இந்திய வெளியுறவு அமைச்சகத்தைச் சேர்ந்த ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார். (உ-ஐ)


## திருமண வாழ்த்துகள்

இன்று திருமணப் பந்தத்தில் இணையும் சட்டத்தரணிகளான

ஜோணி சுவின்ரன்,  மேனகா கேசவன்

ஆகியோரைப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

மதுரநாயகம் குடும்பத்தினரும், உறவினர்களும்.



## BEST 1 COM மலிவு விற்பனை

★ மொபைல் இணையப்பாவனைக்குரிய Dongles மிகக் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.

ZTE - 112 Rs. 4950/- HUAWEI -E153 -4500/-
ZTE - 110 Rs. 4800/- ANTEINA - 1990/-

★ NOKIA, SamSung மற்றும் Chinese Mobile Phones மிகக்குறைந்த விலையில் ரூபா 2400/- இல் இருந்து விற்பனைக் குண்டு.

**BEST 1 COM**
27, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(4240)
தொடர்பு - 021 222 0066, 0774145144



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
**சோதிநாதன் கமலராணி**
(மாதர்சங்க வீதி, சித்தன்கேணி, யாழ்ப்பாணம்)
தோற்றம்: 14 -09-1954
மறைவு: 16-04-2011
திதி: திரயோதசி

எமது அன்பின் திருவுரு வாசிய அம்மா எம்மைவிட்டகன்று முப்பத்தொரு நாள்கள் ஆனபோதும் என்றும் எம் மனதில் அணையா தீபமாய் இருப்பார்.
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

16.05.2011 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல.20, அலைகரை வீதி, சின்னப்புதுக்குளம், வவுனியாவில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மாவின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அவரின் இழப்பால் துயருற்ற எமக்கு, நேரிலும், தொலைபேசி மூலமும், மின்னஞ்சல் ஊடாகவும் தொடர்புகொண்டு துக்கத்தைப் பகிர்ந்து கொண்டு ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளில் எமக்கு உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

(4245)
மகள்: சிவாஜினி மகேந்திரராஜா (நெதர்லாந்து) தொடர்பு இல: 0031685582020
மகன்: சோதிநாதன் சிவகாந்தன் (சுவிற்ஸர்லாந்து) தொடர்பு இல: 0041783254003


## பிரத... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரம் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையின் பிரகாரம், இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இந்தப் பேச்சுக்களின் போது ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து திரும்பிய பின்னர் எதிர்வரும் 23 ஆம் திகதி அமைச்சர் பீரிஸ் சீனா செல்லவிருக்கிறார்.(ஒ-ஐ)

## ஜெயலலிதா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியஸ்தர்கள் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்பர்.

அதேவேளை-

செல்வி ஜெயலலிதா கட்சி அலுவலகத்தில் உள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்தார். பின்னர் மவுண்ட் ரோட்டில் உள்ள எம்.ஜி.ஆர் . சிலைக்கும் மெரினா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர் மற்றும் அண்ணா சமாதிக்கும் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

## மட்டக்களப்பில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரனின் இணைப்பதிகாரியுமான இராசமாணிக்கம் மதியழகன் சுட்டுக் கொல்லப்பட்டார். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முருகேசு இளங்கு மரன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவங்களால் கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் பதற்ற நிலை தோன்றியது. இந்தச் சம்பவங்களின் பின்னணி - உண்மை நிலையைக் கண்டறிந்து இவற்றைத் தணிப்பதற்காக பொலிஸ்மா அதிபர் உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் ஆராய்ந்தார்.

நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக பொலிஸ்மா அதிபர், முக்கிய சில அறிவுரைகளை வழங்கி விட்டு நேற்று உடனடியாக ஹெலியில் கொழும்பு திரும்பினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

## யாழ்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாணப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சுரேஷ் என்றழைக்கப்படும் துரைராசா ஸ்ராலின் (வயது-28) என்பவரின் சடலமே நேற்று மீட்கப்பட்டது. மரணமானவர் கொழும்புத்துறை எழிலூரைச் சேர்ந்தவர். இரு பிள்ளைகளின் தந்தை. நேற்று முற்பகல் விடுதிக்குச் சென்ற ஒருவர் பிரஸ்தாப குடும்பஸ்தர் உயிரிழந்த நிலையில் நிலத்தில் கிடந்ததைக் கண்டுள்ளார். இது விடயம் குறித்து அவர் உடனடியாக யாழ். பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளார். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணை நடத்தினர். சம்பவ இடத்தில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட ஓய்வுபெற்ற நீதிபதி எம்.திருநாவுக்கரசு சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஓ-4-86-14)


### தேவை

ஐஸ்கிறீம் தயாரிப்பு நிலையமொன்றுக்கு அனுபவமுள்ள/ பழக விரும்பும் ஆண்கள் வேலைக்குத் தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் இருந்தல் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0777804493

### விற்பனைக்கு

36 - 1××× இலக்கமுடைய உழவு இந்திரம் பெட்டியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773545313

### தவறிவிட்டன

சிறாம்பியடி லேனிலிருந்து நாவலர் வீதியூடாக கஸ்தூரியார் வீதி ராஜா தியேட்டருக்குமிடையில் கைத்தொலைபேசி திருத்தலுக்கான குறிப்பேடும், சிங்கள மொழிக்குறிப்பேடும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசிஎண் ஊடாகத் தொடர்பு கொண்டு தந்துதவவும்.

தொடர்பு: 0772246743

### பணி வெற்றிடம்

புலோலிப் பகுதியில் உள்ள அச்சகம் ஒன்றுக்கு Type Setting செய்வதற்கு பணியாளர் தேவை. பயிற்சி பெற விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு-0783035181


## பேச்சின் போக்குத்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கே.காந்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அரசுடன் நடத்தப்பட்ட ஆறுசுற்றுப்பேச்சுத் தொடர்பாகக் கூட்டமைப்பினர் தூதரிடம் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

✱ பேச்சுக்களில் மாகாணத்துக்கு அதிகாரங்களைப் பகிர்வது குறித்து ஆராயப்பட்டது. எனினும், இன்னமும் தெளிவான இணக்கம் ஏற்படவில்லை. அரசியல் தீர்வை ஏற்படுத்துவதில் இலங்கைத் தரப்பிடம் உற்சாகத்தைக் காணவில்லை. தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய வகையில் அரசுத்தரப்பு செயற்படவில்லை.

✱ உடனடியாகச் செய்ய வேண்டிய விடயங்களில் கூட இதுவரை இணக்கம் ஏற்படவில்லை. சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டோர், தடுப்பு முகாம்களில் இருப்போர், மீளக் குடியமர்வு போன்ற விடங்களில் கூட இன்னமும் அரச தரப்பு தீர்க்கமான பதில் தரவில்லை. ஒவ்வொரு பேச்சிலும் இவை தொடர்பாக நாம் எடுத்துக்கூறியும் அரசு பதில் தரத் தயங்குகிறது.

✱ இணங்கிய ஒரு சில விடயங்களைக் கூட நடைமுறைப்படுத்துவதில் கால இழுத்தடிப்புத் தொடர் கிறது. ஒரு தடவை ஆராயப்படும் விடயம் குறித்து உயர்மட்டங்களுடன் பேசியபின் அடுத்த தடவை பதிலளிப்பதாக அரச தரப்பினர் கூறுகின்றபோதும் அப்படி நடைபெறுவதே இல்லை.

✱ பேச்சு நடைபெறும் திகதிகளுக்கு இடையில் நீண்ட இடைவெளி காணப்படுகிறது. விரைந்து பேச்சை முடிக்கும் நோக்கம் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

கூட்டமைப்பினர் தெரிவித்த விடயங்கள் குறித்து டில்லிக்குத் தான் விளக்குவார் என்று தூதர் அசோக் கே.காந்த் தெரிவித்துள்ளார்.

பெரும் இடைவெளியின்றிப் பேச்சை நடத்த வேண்டியதன் அவசியத்தை இந்தியா உணர்ந்துள்ள தாகவும் அவர் கூறினார். (உ-ஐ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 ★ 06 ★ 1912



மறைவு 26 ★ 05 ★ 2010

**அமரர் இளையதம்பி தங்கம்மா**
திதி: திரயோதசி

எங்கள் அருமை அம்மாவே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலா....

இன்று நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி நாவற்குழி தெற்கு, கைதடி. (4232)
என்றும் நினைவில்: குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி மாசிலாமணி பொன்னம்பலம்



கரணவாய் தெற்கு, சோழங்கனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாசிலாமணி பொன்னம்பலம் நேற்று (14.05.2011) சனிக்கிழமை பி.ப 3 மணிக்குக் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பொன்னம்பலம் ஆசிரியரின் அன்பு மனைவியும் இராமநாதன்(ஓய்வுபெற்ற உதவிப்பணிப்பாளர், கால்நடை சுகாதாரத் திணைக்களம்), திருமதி நாகராஜேஸ்வரி பொன்னம்பலம் (லண்டன்),காலஞ்சென்ற சரவணபவன் ஆகியோரின் தாயாரும், Dr.இராகவன், வாசுகி, Dr.கோகுலன், அனுஜா (லண்டன்), நிஜேகன் (லண்டன்), நிரஞ்சன்(லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.05.2011) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு புலோலி தெற்கில் நடைபெற்றுப் பூதவுடல் கருகம்பன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புங்கடி, புலோலி தெற்கு, புலோலி. (சி-026)
தகவல்: Dr.பொ. இராமநாதன்(மகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட

# வலி.வடக்கின் அபிவிருத்திப் பணிகள்; ஆராய உலக வங்கிக்குழு வருகிறது

யாழ்ப்பாணம், மே 15

வலி.வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளின் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள உலக வங்கி முன்வந்துள்ளது. இதற்காக உலக வங்கியின் உயர்மட்டக் குழு எதிர் வரும் புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றது.

இந்தத் தகவலை யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்த பின்னர் வலி.வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட 13 கிராம சேவையாளர் பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்கு அந்த இடங்களுக்கு நேரடியாகச் சென்று மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கே இந்தக் குழு வருகை தருகின்றது.

வலி.வடக்கின் வீதிகள், பாடசாலைகள் மற்றும் வீடுகள் போன்றவற்றின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கான முன்மொழிவுகளை உலக வங்கி அதிகாரிகள் வழங்கியுள்ளனர்.

இதேவேளை - வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இந்தக் குழு அங்கு சென்று ஆராயவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

## தமிழ்த் தினப்போட்டியில் பங்குபற்றிய மாணவியின் சைக்கிள் பறிபோனது

வலி.வடக்கு, மே 15

இணுவில், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டியில் கலந்துகொண்ட மாணவியின் சைக்கிள் திருட்டுப்போயுள்ளது.

நேற்று வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டியில் கலந்துகொண்ட மல்லாகம் மகா வித்தியாலய மாணவியின் சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருட்டுப் போய்விட்டது. (ஒ-86)

## இராமாவில், குடத்தனை முகாம் மக்கள் மாத இறுதியில் சொந்த இடம் செல்வர்

யாழ்ப்பாணம், மே 15

மிருசுவில் இராமாவில், குடத்தனை ஆகிய இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள 387 குடும்பங்கள் இந்த மாத இறுதிக்குள் வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமராட்சி கிழக்கில் முள்ளியான், போக்கறுப்பு, வெற்றிலைக் கேணி ஆகிய பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் அண்மையில் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதன் பிரகாரம் மேற்படி இடங்களைச் சேர்ந்த இராமாவில் இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள 285 குடும்பங்களும், குடத்தனை இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள 102 குடும்பங்களும் மீளக்குடியமர்த்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் இந்த மாத இறுதிக்குள் இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

## குழந்தையை மேலும் கீழும் ஏந்தி விளையாடியதால் ஏற்பட்ட விபரீதம்!

### குடல் ஒன்றோடு ஒன்று பிணைந்ததால் இக்கட்டு!!

யாழ்ப்பாணம், மே 15

குழந்தையைத் தூக்கி மேலும் கீழுமாக ஏந்தி விளையாடியபோது அந்தக் குழந்தையின் குடல் சாதாரண நிலையிலிருந்து விலகி ஒன்றுடன் ஒன்று பிணைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

சாதாரண முறையில் இந்தக் குழந்தைக்கு சிகிச்சை அளிக்க முடியாததால் சத்திரசிகிச்சை முறை மூலம் இதனைக் குணப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குருநகர் அண்ணா சிலையடிப் பகுதியைச் சேர்ந்த குயின்ரஸ் அஜே (வயது 8 மாதம்) என்ற குழந்தைக்கே இந்தக் கதி ஏற்பட்டுள்ளது.

மேலும் கீழும் ஏந்திவிளையாடிக்கொண்டிருந்த வேளை திடீரென குழந்தை அழ ஆரம்பித்ததுடன் வாந்தியும் எடுத்துள்ளது. தொடர்ந்து இரவு முழுவதும் குழந்தை அழுவதை நிறுத்தவில்லை.

இந்தநிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குழந்தைக்கு 'எக்ஸ்றே' எடுக்கப்பட்டது. அப்போதே அந்தக் குழந்தைக்கு ஏற்பட்டுள்ள விபரீதநிலை கண்டறியப்பட்டது.

அறியாமையால் நிகழ்ந்த இந்தச் சம்பவம் ஏனைய பெற்றோர்களுக்கும், குழந்தைப் பராமரிப்பாளர்களுக்கும் ஓர் எச்சரிக்கையாகவும் பாடமாகவும் அமையட்டும் என்று வைத்திய வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (ஒ-எ-4)

## திறந்த பல்கலையில் புதிய கற்கைநெறிகள்

யாழ்ப்பாணம்,மே 15

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் ஆய்வு கூடத் தொழில் நுட்பவியலில் சான்றிதழ் மற்றும் உயர்சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த. உயர்தரத்தில் கணிதம் அல்லது விஞ்ஞான பாடங்களில் ஆகக்குறைந்தது 3 சித்திகளைக் கொண்டுள்ளவர்களும், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான அத்திபாரக் கற்கைநெறிகள் மட்டம் 1, 2 ஐ பூர்த்தி செய்துள்ளோரும் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்தக் கற்கைநெறி கொழும்பு பிராந்திய நிலையத்திலேயே நடத்தப்படும் என்றும் இதற்கான விண்ணப்பங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ)

## கிராமியக் கடற்றொழில் அமைப்பின் அங்கத்தவர்களுக்கே இனி உதவிகள்

### மீனவர்கள் மட்டுமன்றி நிறுவனத்தினரும் இணையலாம்

யாழ்ப்பாணம்,மே 15

கிராமிய கடற்றொழில் அபிவிருத்தி அமைப்பில் அங்கத்தவர்களாகச் சேர்ந்த மீனவர்களுக்கு மாத்திரமே எதிர்காலத்தில், அரசாலோ ஏனைய நிறுவனங்களாலோ வழங்கப்படும் உதவிகள், சலுகைகள் என்பன பெற்றுக்கொடுக்கப்படும்.

இந்த அமைப்பில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துகொள்ளாதவர்களுக்கு இவ்வாறான எதுவித உதவிகளும் பெற்றுக்கொடுக்கப்படமாட்டா.

இவ்வாறு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு அறிவித்துள்ளதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள பிரதிப்பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கை முழுவதும் இந்த நடைமுறை அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் யாழ்.. மாவட்டத்திலும் இந்த நடைமுறை வந்துள்ளது.

கடந்த வருட இறுதியில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு கடற்றொழிலாளர் சங்கத்திலும் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். யாழ். மாவட்டத்தில் தற்போது 110 கடற்றொழிலாளர் சங்கங்கள் இயங்குகின்றன. அவற்றில் இதுவரை 62 சங்கங்களில் கிராமிய கடற்றொழில் அபிவிருத்தி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றில் இதுவரை 6 ஆயிரத்து 652 பேர் அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளனர்.

நேரடியாகக் கடற்றொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மட்டுமன்றி தொழிலாளர்களைக் கூலிக்கு அமர்த்தி தொழில்புரியும் தொழில் நிறுவனங்களை வைத்திருப்பவர்களும் இந்த அமைப்பில் அங்கத்தவர்களாகச் சேரலாம். நூறு ரூபா பணம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று இந்த அமைப்பில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளமுடியும் - என்றார் அவர். (ஒ-4)

## வலி.வடக்கில் மீளக்குடியேறிய மக்களின் நிலையை நேரில் கண்டு மனம் வெதும்பினார் ஈராக் தூதுவர்

### கையில் இருந்த பணத்தையும் பகிர்ந்தளித்தார்

யாழ்ப்பாணம், மே 15

வலி.வடக்குக்கு விஜயம் செய்த ஈராக் தூதுவர் காட்டன் ராஹா கிளவ் அங்குள்ள மக்களின் பரிதாப நிலையைக் கண்டு மனம் வெதும்பினார்.

தன்னிடம் கைவசம் இருந்த ஒரு லட்சம் ரூபா பணத்தை தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அந்தக் குடும்பங்களுக்குத் தூதுவர் பகிர்ந் தளித்தார்.

கடந்த புதன்கிழமை இரவு 7 மணியளவில் வலி.வடக்குப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரனுடன் சென்ற ஈராக் தூதுவர் அங்குள்ள மக்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களோடு அளவளாவி "உங்களுக்கு அரச உதவி கிடைக்கிறதா?, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் எந்த மட்டில் கிடைக்கின்றன'' என்று பல கேள்விகளைக் கேட்டார்.

வலி. வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட வலித்தூண்டல், கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் மற்றும் வித்தகபுரம், இளவாலை வடமேற்கு ஆகிய பகுதிகளுக்கே அவர் சென்றிருந்தார்.

தான் மீண்டும் அப்பகுதிகளுக்கு வருவேன் என்றும் அவ்வாறு வரும்போது பல்வேறு உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளுடனேயே உங்களைச் சந்திப்பேன் என்றும் உறுதியளித்துச் சென்றார் தூதுவர். (ஒ-9)

# நிகழ்வுகள்

### பொதுக்கூட்டமும் விளையாட்டுப்போட்டியும்

யாழ்ப்பாணம், மே 15

செவிப்புலன் வலுவுற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் விளையாட்டுப் போட்டியும் இன்று காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்பர். (ஐ)

### மகாஜனா பழைய மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 15

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவ சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்க உறுப்பினர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு கல்லூரியின் அதிபர் திருமதி அனந்தசயனன் சிவமலர் அறிவித்துள்ளார். (ஒ-9)

### விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், மே 15

கொல்லங்கலட்டி ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையின் விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது என பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

### சுதர்ஸன ஹோமம்

யாழ்ப்பாணம், மே 15

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு சுதர்ஸன ஹோமமும் நம்மாழ்வார் ஜெயந்தி உற்சவமும் நாளை பி.ப. 3 மணிக்கு இடம்பெற்று சுதர்ஸன மூர்த்தி நம்மாழ்வார் சகிதமாக உட்பிரகார திருவுலா வருதல் இடம்பெற உள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரை நோக்கி வெள்ளைக் கொடியுடன் செல்லுமாறு புலித்தேவனுக்கு கொஹன்ன செய்தி

**ஆஸி. ஊடகம் பரபரப்புத் தகவல்**

போரின் இறுதிக்கட்டத்தில் புலிகளின் தலைவர்களை வெள்ளைக்கொடியுடன் முன்னே சென்று சரணடையுமாறு புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனுக்கு பாலித கொஹன்ன எழுத்து மூலத் தகவல் அனுப்பியதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் பரபரப்புத் தகவல் வெளியிட்டுள்ளன.

அவுஸ்திரேலிய- இலங்கை இரட்டைக் குடியுரிமை பெற்றவரான பாலித கொஹன்ன சிறிலங்கா அரசின் சார்பில் இந்தத் தகவலை அனுப்பியுள்ளதாக 'சிட்னி மோனிங் ஹெரோல்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

ஐரோப்பிய நடுநிலையாளர் ஊடாக அழைத்த புலித்தேவன் நிபந்தனையின்றி சரணடைய முன்வருவதாக பாலித கொஹன்னவுக்கு கூறியிருந்தார்.

இதையடுத்து 2009 மே 17ஆம் நாள் காலை 8.46 மணியளவில் மூன்றாவது தரப்பின் ஊடாக பாலித கொஹன்ன ஓர் எழுத்துமூல தகவலை புலித்தேவனுக்கு அனுப்பினார்.

இப்போது படையினரைச் நோக்கிச் செல்லுங்கள். மெதுவாக! ஒரு வெள்ளைக் கொடியுடன். வழிகாட்டுதல்களை கவனமாக பின்பற்றுங்கள். படைவீரர்கள் தற்கொலைக்குண்டுதாரிகள் குறித்து மிரண்டு போயுள்ளனர் - இதுதான் அந்தத் தகவல்.


இந்தத் தகவல் அனுப்பப்பட்ட மறுநாள் காலை 6.30 மணியளவில் புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் மற்றும் புலித்தேவன் போன்ற 15 பேர் சிறிலங்காப் படையினரை நோக்கி வெள்ளைக் கொடியுடன் நடந்து சென்றனர்.

அடுத்த அரை மணிநேரத்தில் அவர்களின் சடலங்கள் அவ்விடத்தில் காணப்பட்டன என்றும் சிட்னி மோனிங் ஹெரோல்ட் கூறியுள்ளது.

அதேவேளை, இந்தத் தகவலை பாலித கொஹன்ன அனுப்பியதை சுதந்திரமான தரப்புகள் மூன்று உறுதிப்படுத்தியுள்ளதாக மற்றொரு அவுஸ்திரேலிய ஊடகமான தி ஏஜ் கூறுகிறது.

இந்த விவகாரத்தில் பாலித கொஹன்ன முக்கியமான நபர் என்றும் அவுஸ்திரேலிய ஊடகங்கள் கூறியுள்ளன. (ஒ-323)

*(புதினப்பலகை)*



மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் உருவச் சிலைக்கு, தேர்தலில் பெரு வெற்றியீட்டிய ஜெயலலிதா தமது ஆதரவாளர்கள் சகிதம் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துகின்றார். (ஒ)

# சித்திரவதை, காணாமற்போகும் சம்பவங்கள் போர் ஓய்ந்தும் கூடத் தொடர்கின்றன

இலங்கையில் போர் நிறைவுற்ற பின்பும் குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படாத போக்குத் தொடர்வதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டுகின்றது. யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும் கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் விவகாரங்கள் தொடர்பில் இன்னமும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன் இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாத நிலைமை தொடர்வதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

சித்திரவதை, கடத்தப்பட்டுக் காணாமற்போதல் சம்பவங்கள் நாட்டில் இன்னும் பரவலாகத் தொடர்வதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் இவ்வருடத்துக்கான ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் பொதுமக்களைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கும் கப்பம் கோரல் மற்றும் சட்டவிரோத காணாமல் போதல் சம்பவங்களுடன் பாதுகாப்புப் படையினருக்குத் தொடர்பு இருப்பதாகவும் பிரஸ்தாப அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை அரசாங்கம் நடத்தும் விதம் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கடும் விமர்சனத்தை வெளியிட்டுள்ளது. கைதிகள் விவகாரத்தில் அரசாங்கத்தின் அணுகுமுறை ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையப்பெறவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குதல் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துதல் ஆகியன தொடர்பில் உண்மையக் கண்டறியும் ஆணைக்குழுவின் பங்களிப்பு போதுமானதல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மிக முக்கியமாக இடம்பெயர் மக்களுக்கு இன்னமும் அரசாங்கம் உரிய நிவாரணங்களை வழங்கவில்லை என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-323) *(தமிழ்வின்)*



**சந்தியடிச் சோமு**

# உலகெங்கும் கவுண்டு கொட்டுன்னும் குடும்ப ஆட்சி ??

"சீவியத்த என்னெண்டு கொண்டு நடத்திறியள்?" எண்டு கேட்டுக் கொண்டே வந்தார் பென்சனியர். "சீவிக்கிறது ஒரே சில்லெடுப்பாத்தான் கிடக்கு. அந்த வயித்தெரிச்சலை ஏன் கேட்கிறியள்..!" எண்டு சந்திக் கடைப் பெடியனும் சேந்து கொண்டான் பாருங்கோ.

"சண்டை நேரம் தான், கிடந்த சேமிப்புகளையெல்லாம் எடுத்து சீவியம் நடத்தினமெண்டால் இப்ப சண்டை முடிஞ்சாப் பிறகும் பாங்கில கிடக்கிற சேமிப்புகளை எடுத்தெல்லே செலவழிக்க வேண்டியிருக்கு" எண்டு பெஞ்சனியரும் உச்சுக் கொட்டினார்.

இதுகளைக் கேட்டுக் கொண்டிருந்த நான் சும்மா இருக்க ஏலுமே..? எனக்கும் கை கடிக்கிற விசயத்தையும் சொல்ல வேண்டியதாப் போட்டுது.

எனக்கு கண்ணில பூவளருதெண்டு ஒப்பிரேசன் செய்யச் சொன்னாங் கள். அரச ஆசுப்பத்திரியில செய்யிறதெண்டாலும் டாக்குத்தரை பிறைவேற் றில பிடிச்சுக் காட்டுறதுக்கு அதுக்கு இதுக்கெண்டு காசு வேணுந்தானே எண்டுபோட்டு, பாங்க் எவ்.டியில கிடந்ததை எடுப்பமெண்டு போனன். மூண்டு வருசத்துக்கு முன்னம் போட்ட காசு அது. அப்ப பதினெட்டு வீதத்தில வட்டி தருவமெண்டு சொன்னாங்கள். பின்னப் போட்டுட்டன்.

இப்ப அவசர தேவையெண்டு எடுக்கப்போனா, *"ஐயா! குறைமாதத் தில எடுக்கிறதெண்டால் மூன்று வீதத்தில தான் தருவம். இப்ப உங்கட எவ்.டி. ஏழு வீதத்தில நிக்குது. குறைமாதத்தில எடுக்காமல் ஒரு லோனை எடுங்கோவன்"* என்று சின்னவரிலயிருந்து பெரியவர் வரைக்கும் ஒரே அட்வைஸ். லோனுக்கு எங்களுக்கு தாரதை விட இரண்டு வீதம் கூட கட்ட வேணும். பிறகு நிறைமாதமானதும் உங்கட எவ்.டி. முதிர்ந்திடும் அதை எடுத்து இதைக்கட்டலாமெண்டு தேனொழுகப் பேசிச்சினம் பாருங்கோ.

எனக்கு வந்த கோவத்துக்கு, ஒரு இழவும் வேண்டாம் எவ்.டியை உடைச்சு காசைத்தா எண்டு நான் எகிற, அங்க நிக்கிற இளசுகள் *"உங்கட நன்மைக் குத்தான் சொன்னாங்கள்"* எண்டுபோட்டு அதில இருங்கோவெண்டு ஒரு மணித்தியாலத்துக்குப் பிறகு தான் நான் போட்டு வைச்ச காசைத் தந்தாங்கள்.

அதுக்கிடயில காசு போட வந்தவர் ஒருத்தருக்கு வட்டியைப் பத்தி வகுப்பெடுக்கினம் அவை, இப்ப நாங்கள் எட்டுத் தசம் ஐஞ்சு வீதம் வட்டி தருவம் எண்டு அந்தாளுக்குச் சொல்லுகினம்.

என்ர எவ்.டியின்ர ஓட்டமற்றிக் றினுவலுக்கு ஏழு வீதம், புதுசா வாறாக் கள மடக்கிப்பிடிக்க எட்டுத் தசம் ஐஞ்சு வீதம். உது என்ன சுத்துமாத் தெண்டு விளங்காமல் மனதுக்க கிடந்து புழுங்கிப்போட்டு எழும்பி வந் திட்டன். வேற என்னத்தைச் செய்யிறது.

முந்தி பாங்கை கொள்ளையடிக்கிறதென்று கேள்விப்பட்டிருக்கிறம். இப்ப தலைகீழா நடக்குது போலத்தான் கிடக்கு. சலுகைகளைப்பற்றி பெரிய கொட்டான் எழுத்தில கலர்கலரா எழுதிப்போட்டு கண்ணுக்கு தெரியாத எழுத்தில நிபந்தனைக்கு உட்பட்டது எண்டும் நிறைய எழுதுகினம். அதுக்குள்ளதான் முழு சூக்குமங்களும் இருக்கும்.

எந்த ஒரு விசயமாக இருந்தாலும், கண்ணுக்கு தெரியாத எழுத்தில என்னத்த அச்சடிச்சிருக்கிறாங்களோ அதை ஒரு பூதக்கண்ணாடி வச்சுப் பாத்துப் போட்டுத்தான் கையெழுத்துக்களை போடுங்கோ. பிறகு தாங்கள் சொன்னதுகளை காத்தில பறக்க விட்டுட்டு, நாங்கள் முழுசா வாசிக்காமல் கையெழுத்துப் போட்டனாங்கள் எண்டு பிழையள் எல்லாத்தையும் எங்கட பக்கம் திருப்பி விடுவாங்கள்.

இந்த விசயத்தில இப்ப வலும் கவனமாக இருக்க வேணும் ஏனென் டால், வீடு வீடா வந்து அதுக்கு லீஸ் தாரன் இதுக்கு லீஸ் தாரன், அந்தக் கிரடிக் கார்ட் தாறன் இந்தக் கிரடிட் கார்ட் தாறன், நீங்கள் அந்த பொலிஸி எடுத்தா நல்லது இந்தப் பொலிஸி எடுத்தா நல்லது எண்டு நாங்கள் ம்... எண்டுறத்துக்கிடையில எல்லாத்தையும் முடிச்சுப் போட்டுப் போடுவாங் கள். பிறகுதான் நாங்கள் முழி பிதுங்கிப் போய் நிக்க வேணும்.

இவ்வளவையும் நான் சந்தியில மூச்சப் பிடிச்சுக் கொண்டு சொல்லி முடிக்க, "நல்லாச் சொன்னிங்கள் ஐயா! எல்லா இடமும் கவர்ச்சிக் கதைய லும் ஏமாத்துமாத்தான் இருக்குது" எண்டான் கடைக்காரப் பொடியன்.

இதைக் கேட்டுக் கொண்டு சந்திக்கு வந்த கதிரண்ணை, "கவர்ச்சிக் கதையள் ஒண்டும் சனத்திட்ட எடுபடாது. அதாலதானே கலைஞர் கவுண்டு போனார். உந்தக் கவர்ச்சிக் கதையள் கன காலத்துக்கு நிண்டு பிடிக்காது; இருந்து பாருங்கோ" எண்டார். அதை ஆமோதிச்ச நடேசண்ணை சொன்னார், "எங்கட விசயத்தில தள்ளாத வயதில சோனியாவோட சேர்ந்து எத் தின கூத்தாடினார் கலைஞர்? முதலமைச்சரா இருந்து சாகேக்க ஐயாயிரம் ரூபா பாங்கில கடனோட செத்த பெரிய மனிசன் அண்ணாண்ட சமாதிக்கு முன்னால ஏ.சி. போட்டு மூண்டு மணித்தியாலம் உண்ணா விரதமிருந்து, இந்தா போர்நிறுத்தம் வந்திட்டுது எண்டு எல்லாரையும் பேக்காட்டிப் போட்டு எழும்பிப் போன ஆள, இப்ப தருணம் பாத்து சனம் கவுத்துப் போட்டுது."

"தமிழகத்தில எங்களுக்குச் சார்பா பொங்கி வந்த உணர்வையெல்லாம் நயிசா நசிக்கினவராச்சே அந்தாள். இத்தனையும் எதுக்காக செய்தவர் தன்ர குடும்பத்தின்ர அதிகார ஆட்சிய தக்க வைக்கிறதுக்காகத் தானே?" எண்டு கந்தயரும் சேந்து கொண்டார்.

"சோனியாவின்ர குடும்பியப் பிடிச்சு தொங்கின பெருந்தகை சோனியா குடும்பியப் பிடிச்சதாலேயே கவுண்டு கொட்டிண்டு போனார். நாங்கள் பட்ட துன்பங்களையும் அவமானங்களையும் பதவிக்காக திசை திருப்பின கூட்டத்தின்ர கவர்ச்சி பேச்சுக்களுக்கு சனங்கள் எடுபடாதது ஜனநாயகத்துக்கு கிடைச்ச வெற்றி பாருங்கோ இது" எண்டது கதிரண்ணையின்ர நீண்ட விளக்கம். அவற்ற வெப்பிராயம் கதைக்கால வெளிப்பட்டுது.

சுதந்திரமான தேர்தல் ஆணையமொண்டு சரியா செயற்பட்டதாலதான் இது நடந்தது எண்டு நான் சொல்ல... "அந்த நிலைமை இங்கையும் வந்தா கலைஞரின்ர நிலைதான் எங்கட ஆக்களுக்கும் ஏற்படும் பாருங்கோ. ஒரு குடும்ப ஆட்சி மக்களால கவுக்கப்பட்டது. ஏதோ மனசுக்கு ஆறுதலா இருக்குது" என்று சொல்லிக் கொண்டு பென்சனியர் எழும்பிப் போனார்.

இப்ப உள்ள உலக நியதி குடும்ப ஆட்சியள வீட்டுக்கு அனுப்புறது தான். காலவோட்டத்தையும் மாற்றத்தையும் நம்பி நாங்களும் காலத்தை ஓட்ட வேண்டியது தான் எண்டு சொன்னபடி, துண்ட உதறிப் போட்டுக் கொண்டு நானும் வெளிக்கிட்டிட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து எதையும் நாம் கூறவில்லை.முதலில் மாகாண சபை அதிகாரப் பகிர்வைப் பற்றிப் பேசு வோம். பின்னர் மதத்திய அரசின் விடயங்கள் குறித்துப் பேசலாம் என்றே நாங்கள் அங்கு வலி யுறுத்தினோம் என்று பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கூட்டறிக்கை என அரசு வெளியிட்டது எம்முடன் கலந்தாலோசித்ததுக்கு முரணானது என்றும் கூறினார்.

அரசுக்கும் - கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சு விவரம் இனிமேல் வெளியிடப்படமாட்டாது என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கடந்த வாரம் அறிவித்திருந்தார். தாம் விரும்பியபடி கூட்டறிக்கையை வெளியிடவே இந்த அறிவிப்பு வந்திருக்க வேண்டும் என்றும் சுரேஷ் கூறினார். (ஓ-ஐ)


## இலவசம்

Dialog இன் நேரடி விற்பனை Dongle (இன்ரநெற்) ~~2490~~/=
- வியாபார ஸ்தாபனங்களுக்கே உரியது
- உங்களின் இடங்களில் இருந்தவாறே அழையுங்கள் (0773335999)




எமது தயாரிப்புக்களான:
பக்கேஜ் சிம், டொங்கிள், CDMA, டயலக் TV, இன்ரர் நெற் இணைப்பு. எத் தேவைக்கும்
0773335999 N.Jeyabalan- Dialog Axiata PLC

## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் ஹாட்வெயாஸ் விற்பனை நிலையத்துக்கு கீழ்க்காணும் பணிநிலைகளுக்குப் பணியாளர்கள் தேவை.

I. விற்பனையாளர்கள் II. சிற்றூழியர்கள்

- அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது
- விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தங்கள் சுயவிவரத்தினை அனுப்பிவைக்கவும்.

விளம்பர இலக்கம்: 4143
C/o உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது மருமகள் இ. தயாநிதி அவர்களின் பாசமிகு தாய்
**இராஜரட்ணம் பராசக்தி**
அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலட்சுமி பொன்னம்பலம்
கொக்குவில் மேற்கு. (சி/025) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முருகர் சின்னர் சின்னப்பிள்ளை



சுழிபுரம் கிழக்கு, செருக்கப்புலத்தை வசிப்பிடமாகக் கொண்ட முருகர் சின்னர் சின்னப்பிள்ளை நேற்று 14.05.2011 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர் சின்னாரின் அன்பு மனைவியும், இலட்சுமி (கனடா), முருகேசு(இந்தியா), குலமணி (இலங்கை), திரவியமலர் (கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகத் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு,
செருக்கப்புலம்.
தகவல்:
(4249) குலமணி, திரவியமலர்.

## மரண அறிவித்தல்

### மகேந்திரசெல்வம் சுரேன்
(Dot Line Colour Lab பணியாளர்)



9/7, அன்னசத்திர லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகேந்திரசெல்வம் சுரேன் நேற்று (14.05.2011) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேந்திரசெல்வம் (மகான்) மற்றும் ஸ்ரீலாகினி (கனடா) தம்பதியரின் அன்புப் புதல்வனும் சுகன், சுஜீவன், அமிர்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 4 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9/7, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தகவல்:
குடும்பத்தினர்.


சுலபமாக நீங்கள்
ரூபா 50,000/- க்கு
மேல் மாத வருமானம் பெற
இன்றே முதலீடு செய்யுங்கள்

**ஐஸ் கிரீம் இயந்திரம்**

கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரொசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.




- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா soya / வெனிலா venila / சொக்கலேட் chocolate
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
Hotlines: 077 391 8870, 077 385 0089

## உடனடியே... STUDY IN UK (work Permit)

- IELTS அவசியமற்ற இறுதி UK பயணம்
- முன் கட்டணம் எதுவும் இல்லாத ஒரு புதிய நடவடிக்கை After Visa Payment
- Course Fees மிகக் குறைந்த விலையில்
- Sponser வசதி மிகக் குறைந்த விலையிலும் நம்பத்தகுந்த வங்கி ஊடாக எடுக்கப்பட்ட ஆவணமும்.
- சட்ட வல்லுநர்களால் ஆவணங்கள் சரி பார்த்துக் கொடுத்தல்
- UK இல் 15 கல்லூரிகளிலும் அதற்கு மேற்பட்ட கல்லூரிகளுடனான சட்டரீதியான தொடர்பு.

இறுதிச் சந்தர்ப்பத்துக்கு உரிய கோட்டாவை நழுவ விட்டு விடாதீர்கள்
Tel No.: 0778337379, 0750698404
(4248)


## மரண அறிவித்தல்கள்

### விசுவலிங்கம் அம்பலவாணர்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் காரைக்கால் சிவன்கோயிலடி, இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் அம்பலவாணர் நேற்று (14.05.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும் கௌரி மனோகரி(சுவிஸ்), கதிர்காமநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற ரதிதேவி மற்றும் பரமதாஸன், திருமால்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாஸ்கரன்(சுவிஸ்) சித்தீஸ்வரி(சுவிஸ்), சுகுமார் (லண்டன்), உதயராணி, உமாதாரணி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற நடராஜாவின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கச்சி, செல்வநாயகம், இராமநாதன், சண்முகநாதன், பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும் கௌதமன், வைஸ்ணவி, துவாரகா, சாஜிதரன், சாஜிகரன், ஜனனி, கோகுலன், நர்மதா, பிரியங்கன், ஆர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைக்கால் சிவன்கோயிலடி,
இணுவில் கிழக்கு. (4243)
தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னப்பா காசிப்பிள்ளை



சிவனம்மன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு, வட்டுவினியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னப்பா காசிப்பிள்ளை கடந்த (11.05.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம், யோகேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேஸ்வரி, இராசேந்திரம் (கொழும்பு) செல்வராசா ஆகியோரின் மைத்துனரும், சிவனேசன் (கனடா), வரதராசா, சுசீலாதேவி, காந்தகுமார்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அனுலா (கனடா), சறோஜினிதேவி, சிவலிங்கம் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), கலையரசி(லண்டன்) ஆகியோரின் மாமனும், கஜன், அருண் (கனடா), சசிதரன், புவிகரன், பிரியங்கா, அம்பதீசன், அபிநயா, கதிசன், கஜித்தன்(லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பொன்னப்பா பதி"
வட்டுவினி அம்மன் கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில். (4243)
தகவல்:
குடும்பத்தினர்.


220 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

DHL உத்தரவு பெற்ற முகவர்




வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுக்கான
கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், உணவுப்பண்டங்கள்,
CD, DVD போன்றவற்றை பாதுகாப்புடன் விரைவாக குறைந்த கட்டனத்தில் அனுப்பிட DHL

WESTERN UNION
வெளிநாட்டில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ள பாதுகாப்பான விரைவான நம்பிக்கையிலான சேவை

MMBL Money Master

திருமுருகன் கொம்நெற்
259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
(ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்)

## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.

GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

நம்பமுடியாத விலையில்..




சகல மரங்களையும் இலகுவாகத் துண்டாடுவதற்கு பயன்படும் இலத்திரனியல் வாள்
ஆறு மாத உத்தரவாதம்
ஆர்கி என்ரப்பிறைசஸ்
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கொக்குவில் அம்மன் வீதியில் நிலப்பரப்பு 2 குளி 12¼ காணி ஒரு கடையுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776288718, 0213219521

## பணியாளர் தேவை

எமது நிறுவனத்துக்கு கணினி அறிவுள்ள பெண் பணியாளர்கள் தேவை. (அண்மையி லுள்ளவர்கள் விரும்பத்தக்கது) உடன் விண்ணப்பிக்கவும்.
கணேசன் கொம், கொக்குவில். Tel 222 2585

## German Institute

German, Swiss மொழிகள், தமிழ்மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது. அடுத்த வகுப்புகள் June முதலாம் திகதி ஆரம்பம். தொடர்புகளுக்கு 10, Palaly Road, Jaffna. T.P. 0771604823


## கொள்முதல் செய்யப்படும்

பழைய இரும்பு, பித்தளை, செம்பு, அலுமினியம் தரகர் இன்றி நேரடியாக எவ்வளவு தொகையானாலும் நல்ல விலைக்கு கொள்முதல் செய்யப்படும்.
தொடர்புகளுக்கு:
0777769869, 0757846846, 0772357667.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்15.05.2011 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரவேசம் இலவசம் !




முதல்முறையாக
யாழ்ப்பாணத்தில்
இடம்பெறும்
இந்தியக்
கல்விக் கண்காட்சி



**17th, 18th May 2011**

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில்

**17th - 9.00 am to 5.00 pm**
**18th - 9.00 am to 1.00 pm**

## இந்திய கல்விக் கண்காட்சி 2011 உங்களுக்கு வழங்குவது என்ன?

- பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள்
- இலவச தொழில்சார் வழிகாட்டுதலும் ஆலோசனையும்
- தொழில் பயிற்சி நிலையங்கள்
- தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள்
- விமானப் போக்குவரத்துத் துறை கல்வி நிலையங்கள்
- வியாபாரப் பாடசாலைகள்
- தகவல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகள்
- தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்
- சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிலையங்கள்
- ஹொட்டேல் முகாமை மற்றும் சுற்றுலா கல்வி நிலையங்கள்
- நிதி மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையங்கள்
- கடற் போக்குவரத்துக் கல்வி நிலையங்கள்
- கல்வி ஆலோசகர்கள்
- உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை நிலையங்கள்
- செயலக அலுவல் பயிற்சி நிலையங்கள்
- மருத்துவ மற்றும் தாதிமார் கல்வி நிலையங்கள்
- மூன்றாம்நிலை கல்வி நிலையங்கள்
- நுண்கலை மற்றும் நவநாகரிகக் கலை பாடசாலைகள்

| ORGANISED BY | SUPPORTED BY | PROFESSIONAL EXHIBITION ORGANISER |
|---|---|---|
| edCiL<br>EdCIL (India) Limited | CONSULATE GENERAL OF INDIA JAFFNA | LECS<br>LANKA EXHIBITION |

4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Marker Mw, Colombo 03
Tel: 011 2390560-2 Fax: 011 2390563
E-mail: sudesh@saexhibitions.com

# இம்முறை போகத்தை சிறப்பாக உழுவதற்கு
## டிமோவிடமிருந்து
# தரமான உழவு உபகரணங்கள்



| தட்டைக் கலப்பை | ஒன்பது கொக்கியுடைய கலப்பை | சேற்றுச் சில்லு |
|---|---|---|
| ரூ.65,000/- | ரூ.55,000/- | ரூ.32,500/- |

**மூன்று உபகரணங்களுக்கு மேல் கொள்வனவு செய்யும் போது விசேட தள்ளுபடி!**

(இப்புகைப்படங்களில் காண்பிக்கப்பட்டுள்ள உபகரணங்கள் மாதிரியேயாகும்)

6087/4/2011 mel ads

dimo TECHNOLOGY
உன்னத எதிர்பார்ப்பு
நிறுவன பதிவிலக்கம்: PQ146

**வரையறுக்கப்பட்ட டீசல் மற்றும் மோட்டார் என்ஜினியரிங் பகிரங்க கம்பனி**
உழுவு உபகரணப் பிரிவு, கிரிந்தவலை வீதி, வெளிவேரிய. தொ.பே.//.பக்ஸ்: 033 4674616 வெப்: www.dimolanka.com

வட மாகாணம் - வவுனியா // மன்னார் // கிளிநொச்சி // யாழ்ப்பாணம் தொ.பே: 0773 540966, 0772 011545
கிழக்கு மாகாணம் - ... தொ.பே: 0777 373681, அம்பாறை தொ.பே: 0772 011552, திருகோணமலை தொ.பே: 0773 633867
வடமேல் மாகாணம் - ... புத்தளம் தொ.பே: 0777 378708

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செரிப் பழத்தின் மருத்துவ குணங்கள்

செரிப்பழத்தைப் பற்றிப் பலர் இன்றும் தெரியாமலேயே இருக்கிறார்கள். ஏனைய பழவகைச் செடிகளுக்குத் தண்ணீர், உரம் தேவைப்படுவது போல செரிச் செடிக்கு இவை அதிகம் தேவைப்படுவதில்லை.

இந்தச் செடிகளுக்கு நோய் ஏற்படுவதில்லை. 'பிணிகள் பிடிக்காத செடி' என்றே இதைச் சொல்வதோடு இதன் அருகில் வந்து ஆடு, மாடுகள் மேய்வதில்லை. அதுமட்டுமன்றி போர்ட்டோ ரிகே, செரிபார்பிடோஸ் செரி என்பன செரிப்பழத்தின் வேறு பெயர்கள் ஆகும். ஆனால் தமிழில் 'அற்புத நெல்லி' என்று கூறப்படுகிறது.

இது புதர்வகைச் செடியாகும். நான்கு அடி முதல் ஐந்து அடி உயரம் வரை அடர்ந்து தழைத்து வளரும் இவை கரும்பச்சை நிறத்திலும், பழங்கள் சிறிய அப்பிள் வடிவத்திலும் காணப்படுகின்றன.

இந்தச் செடிகளை நடுவதன் மூலம் ஏழு மாதத்திற்குள் பயன் பெறமுடியும். அதுமட்டுமன்றிப் பழமும் தரக்கூடியது. இந்த செரிப் பழத்தில் விற்றமின் 'சி' சத்து அதிகளவில் உள்ளது. 100 கிராம் எடையுள்ள செரிப் பழத்தில் 1000 - 3000 மி.கி வரை விற்றமின் சி நிறைந்துள்ளது.

எனவே நீங்கள் தினந்தோறும் இரண்டு அல்லது மூன்று செரிப்பழங்களைச் சாப்பிட்டு வந்தால் போதும். உங்கள் உடம்புக்குத் தேவையான விற்றமின் 'சி' கிடைத்துவிடும்.






## மார்பகப் புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் கொத்தமல்லி

மார்பகப் புற்றுநோயைக் கட்டுப்படுத்தக் கொத்தமல்லியை உணவாக உட்கொள்ளமுடியும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இது புற்றுநோய்க்கான அணுக்கள் உருவாகுவதைத் தடுப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.


அமெரிக்காவின் பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவான கால்நடை மருத்துவ கல்லூரியைச் சேர்ந்த உயிரி மருத்துவ அறிவியல் பேராசிரியர் சல்மான் ஹைதர் தலைமையிலான குழுவினர் எலிகளைக் கொண்டு மார்பக புற்றுநோய் குறித்து ஒரு ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.

எலிகளுக்கு செயற்கை கட்டிகளை உருவாக்கினர். அவற்றில் ஒரு பிரிவுக்கு அபிஜெனின் என்ற இரசாயன பொருள் வழங்கப்பட்டது. மற்றொரு பிரிவுக்கு அந்த இரசாயணப் பொருள் வழங்கப்படவில்லை. சிறிது நாள்களுக்குப் பின்னர் ஆய்வு செய்ததில் அபிஜெனின் இரசாயன பொருள் உட்கொள்ளாத எலிகளை விட உட்கொண்ட எலிகளுக்கு கட்டியின் வளர்ச்சி குறைவாக இருந்தது. இதன் அடிப்படையில் புற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் அபிஜெனின் முக்கிய பங்கு வகிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். கொத்தமல்லியில் அதிக அளவு அபிஜெனின் உள்ளது. இது தவிர அப்பிள், தோடம்பழச் செடிகளிலும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து ஆய்வின் தலைவர் ஹைதர் கூறியதாவது: அமெரிக்காவில் உள்ள சுமார் 1 கோடி பெண்கள் ஹோர்மோன் மாற்று சிகிச்சை எடுத்துக் கொள்வதால் மார்பக புற்றுநோய் பாதிப்புக்கு ஆளாகின்றனர். இதன் அடிப்படையில் எலிகளுக்கு பரிசோதனை செய்ததில் புற்றுநோய் செல்கள் வளர்வதை கொத்தமல்லி கட்டுப்படுத்துவது தெரியவந்துள்ளது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நுரையீரலின் முக்கிய ஆதார அணுக்கள் கண்டுபிடிப்பு



மனித நுரையீரலின் ஆதார அணுக்களின் மூலம் நீண்ட கால நுரையீரல் நோய்களுக்குத் தீர்வு காண்பதற்கான முக்கிய விடயங்கள் கிடைக்கும் என அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளில் மனித கரு ஆதார அணுக்கள் மூலம் நுரையீரல் அணுக்களை உருவாக்க முடிந்தது. அறுவைச் சிகிச்சை மாதிரிகளை வளர்ச்சி அடைந்த மனித நுரையீரல் திசுக்களுடன் பயன்படுத்தும்போது கரு ஆதார அணு மூலம் உருவான நுரையீரல் அணு தனித்த நிலையில் காணப்பட்டது.


இதன்போது விஞ்ஞானிகள் மேற்கொண்ட புதிய ஆராய்ச்சியில் உண்மையான மனித நுரையீரலின் ஆதார அணுக்களைக் கண்டு பிடித்துள்ளனர்.

மனித நுரையீரலின் ஆதார அணுக்கள் கண்டு பிடிக்கப்பட்டதன் மூலம் நீண்ட கால நுரையீரல் நோய்களுக்குப் புதுவிதமான மருத் துவ சிகிச்சை அளிக்க முடியும் என ஆய்வினை மேற்கொண்ட குழு வில் உள்ள பயரோ அன்வெர்சா தெரிவித்துள்ளார்.

இவர் பிரகாமில் உள்ள மறு உற்பத்தி மருத்துவ மையத்தின் இயக்குனர் ஆவார். கண்டுபிடிக்கப்பட்ட அணு, ஆதார அணு என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் இந்த ஆதார அணுக்கள் தானாகப் பாதிப்பைச் சரிசெய்து புதுப்பித்துக்கொள்ளும் தன்மை உடையதாக உள்ளது.

அமெரிக்காவில் அதிகரிக்கும் இதய நோய், புற்றுநோய் பலி யைத் தொடர்ந்து மூன்றாவது நோயாக நுரையீரல் நோய் உள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

# இருந்த இடத்திலேயே உலகை சுற்றிப் பார்க்கலாம்



இணையத் தளத்தைப் பயன்படுத்தும் பெரும்பாலானோருக்கு GOOGLE EARTH பற்றித் தெரிந்திருக்கும்.

GOOGLE EARTH மென்பொருள் மூலம் எமது கணினி முன் அமர்ந்தவாறே உலகின் எந்த ஒரு இடத்திற்கும் வினாடிகளில் பயணிக்கலாம். அதன் மூலம் ஒவ்வொரு நாடுகளின் அமைப்பை நாம் கணினியில் இருந்தவாறே பார்த்து ரசிக்க முடியும்.

முன் பின் தெரியாத ஊர்களுக்குச் செல்லும் முன் இதன் மூலம் அங்கு பயணித்து விட்டு அதன் பின்னர் செல்வோமானால் பயணம் எளிதாக அமையும். இதற்கு முதலில் இங்கே கிளிக் செய்து GOOGLE EARTH மென்பொருளை தரவிறக்கி உங்கள் கணினியில் நிறுவிக் கொள்ளுங்கள்.

இது இலவச மென்பொருள் தான். நிறுவியபின் மென்பொருளைத் திறக்கவும். அதன் பின் ஒரு window திறக்கும். பெரிதாகப் பார்க்க விரும்புபவர்கள் படத்தின் மீது click செய்யவும்.

நீங்கள் எந்த இடத்தைப் பார்க்க விரும்புகிறீர்களோ அதன் பெயரைத் தட்டச்சுச் செய்து ENTER பட்டனை அழுத்துங்கள். இப்போது அந்த இடத்திற்கு நீங்கள் அழைத்துச் செல்லப் படுவீர்கள். MOUSE ஐ முன்னும் பின்னும் SCROLL செய்து அருகிலோ அல்லது தூரத்திலோ இருந்து பார்க்கலாம்.

மேலும் நீங்கள் எதாவது இடத்திற்கு பெயர் சூட்ட விரும்பினால் இதைத் தேர்வு செய்து நீங்கள் விரும்பும் இடத்தில் சுட்டி பெயர் சூட்டலாம்.

இதைத் தேர்வு செய்து சுட்டுவதன் மூலம் இரு ஊர்களுக்கு இடையேயான தூரத்தை அளக்கலாம்.

GOOGLE EARTH இன் சிறப்பம்சமே இதில் தான் அடங்கியிருக்கிறது. இதை DRAG செய்து ஒரு தெருவில் நிறுத்தினால் அந்தத் தெரு இயற்கையாக உள்ளபடியே தோற்றமளிக்கும். அனைத்து இடங்களையும் இது போல பார்வையிட தற்போது வசதி இல்லை என்றாலும் அனேக முக்கிய நகரங்களைப் பார்வையிட முடிகிறது.

# நொடிப் பொழுதில் தலைவலியைக் குணமாக்க விரைவில் அறிமுகமாகிறது மாஸ்க் முகமூடி

தலைவலியால் அவதிப்படுபவர் கள் தைலம், மாத்திரைகளை தேடி ஓட வேண்டிய அவசியம் இனி இல்லை. அதற்குப் பதிலாக மாஸ்க் அணிந்தால் ஒரு நொடியில் தலைவலி பறந்துவிடும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மனிதர்களை இம்சைப்படுத்தும் நோய்களில் ஒன்று தலைவலி. இதனால் அவதிப்படாத யாரும் இருக்க முடியாது. இதில் ஒற்றைத் தலைவலி, திடீர் தலைவலி எனப் பல வகைகள் உண்டு. இதன் தாக்கம் மிக அதிகம் உள்ளதால் எந்த வேலையும் செய்ய முடியாமல் நாம் முடங்கிப் போய் விடுகின்றோம். அதனால் தலைவலிக்கு மாத்திரை எடுத்துக் கொண்டால் சில வேளைகளில் பலன் கிடைத்தாலும் பெரும்பாலான சமயங்களில் நிவாரணம் கிடைப்பதில்லை.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க சமீபத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சியில் மருத்துவ மாஸ்க் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதை அணிந்தால் நொடிப்பொழுதில் அனைத்துவிதத் தலைவலியும் தீர்ந்து விடும் என்கின்றனர் ஆராய்ச்சி மருத்துவர்கள்.

இந்த பிரத்தியேக மாஸ்க் (முகமூடி போன்ற சாதனம்) விரைவில் அறிமுகமாக உள்ளது. உடலில் ஒட்சிசன் அளவு தேவையைவிட சற்றுக் குறைந்தாலும் தலைவலி ஏற்படும். அப்படிப்பட்ட நேரத்தில் புதிய கண்டுபிடிப்பான மாஸ்க் கைகொடுக்கும். இதை அணிந்தால் உடலில் குறையும் ஒட்சிசன் அளவை உடனடியாக அதிகரித்து சமப்படுத்தி தலைவலிக்கு தீர்வு ஏற்படுத்தி விடும்.

அமெரிக்காவில் உள்ள கெய்சிங்கர் மருத்து வமனையில் சோதனை முறையில் இந்த புதிய கண்டுபிடிப்பு பரிசீலித்து பார்க்கப்பட்டது. இதில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து மருத்துவ சபை இறுதிகட்ட ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்ததும் விரைவில் சந்தைக்கு அனுப்பப்படும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

மை வெளிச்சம்
குடும்பப்பிரச்சினை,வெளிநாட்டு பிரயாணம்,
விவாக விவகாரம் தீர்த்து வைக்கப்படும்.
பிறந்த திகதி,மாதம்,வருடம் கொண்டு வரவும்.
நேரம் 9 - 5 வரை.
ஈஸ்வரி
Dr.P. Thiyagaraja (J.P.Hons)
21-1/1,ஜம்பட்டா வீதி, கொழும்பு -13
தொலைபேசி:2440606 Fax: 0094-1-2440606
www.eswari.com







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்போதும் இளமையாக இருக்க அதிகம் படியுங்கள்

கூடுதலான கல்வித் தேர்வுகளை எழுதித் துடிப்புடன் இருப்பவர்கள் மிக இளமையாக இருக்கிறார்கள் என ஒரு ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

அதிக கல்வித் தகுதிக்காகப் படிக்கும் நபர்கள் தங்களது வயதை ஒத்த அதிக கல்வித் தகுதி இல்லாத நபர்களைக் காட்டிலும் மிக இளமையாக இருக்கிறார்கள் என அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித் தேர்வுகளில் அதிக சாதனை படைக்காதவர்கள் மிக விரைவில் வயோதிபத் தோற்றத்தை அடைந்து விடுகிறார்கள். கல்விச் சாதனைக்காகத் தொடர்ந்து படிக்கும் நபர்களின் மூளை எப்போதும் சுறுசுறுப்புடன் செயற்படுவதால் அவர்களது சமூக, பொருளாதார நிலையில் பிற்காலத்தில் மாற்றம் ஏற்பட்டாலும் மிக இளமையாக இருக்கிறார்கள் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

லண்டன் பல்கலைகழக் ஆய்வாகளர்கள் அலுவலகம் செல்லும் 450 பேரை ஆய்வு செய்ததில் இளமை குறித்த ரகசியத்தை கண்டறிந்து உள்ளனர். உயிரி வயோதிபத்தன்மையை குரோமோசோம் கடிகாரம் நிர்ணயிக்கிறது.

கூடுதல் நேரம் அல்லது கூடுதல் கல்விச் சாதனை மேற்கொள்பவர்களின் மூளைத்திறன் மிக துடிப்புடன் செயற்படுவதால் அவர்களது வயதை ஒத்தவர்களுடன் ஒப்பிடும் போது மிக இளமையானவர்களாக இருக்கிறார்கள்.

இனிமேல் ஆசிரியரோ அல்லது பெற்றோரோ படிக்குமாறு அறிவுரை கூறினால் முகம் சுளிக்காமல் படிக்க ஆரம்பிக்கலாம் என்பதோடு நீண்ட படிப்பு நீண்ட இளமையை தரும் என்பதையே இந்த ஆய்வு முடிவு கூறுகிறது.

## பெண்கள் மூக்குத்தி குத்திக் கொள்வதன் காரணம் என்ன?



பெண்கள் மூக்கு மற்றும் காது குத்திக் கொள்வது ஏன் என உங்க ளுக்குத் தெரியுமா?

அதாவது ஆண்களின் மூச்சுக் காற்றை விடப் பெண்களின் மூச்சுக் காற்றுக்கு சக்தி அதிகம். இதனால் பெண்கள் மத்தியில் நிற்பவர் களுக்கு அசௌகரியமாக இருக்கும். இதனால் பெண்கள் மூக்கு குத்தி கொள்ளும் வழக்கம் உருவானது.

மூக்கு குத்துவதனாலும், காது குத்துவதனாலும் உடலிலுள்ள வாயுக்கள் வெளியேறுகின்றன. உடலிலுள்ள வெப்பத்தைக் கிரகித்து நீண்ட நேரம் தன்னுள்ளே வைத்திருக்கக்கூடிய ஆற்றல் தங்கத்துக்கு இருக்கிறது.

மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அந்தத் துவாரத்தில் தங்க மூக்குத்தி அணிந்தால், அந்தத் தங்கம் உடலில் உள்ள வெப்பத்தை கிரகித்து தன்னுள்ளே ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெறும். அதுமட்டுமல்ல மூக்கின் மடல் பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டால் அதன் மூலம் நரம்பு மண்டலத்தில் உள்ள கெட்ட வாயு அகலும்.

சிறுமியர் மூக்குத்தி அணிவதில்லை. பருவப் பெண்களே அணிகிறார்கள்.

ஏனெனில் பருவ வயதை அடைந்த பெண்களுக்குத் தலைப்பகுதியில் சிலவிதமான வாயுக்கள் இருக்கும். இந்த வாயுக்களை வெளிக் கொண்டு வருவதற்குத் தான் மூக்குக் குத்தப்படுகிறது. மூக்குக் குத்துவதால் பெண்கள் சளி, ஒற்றைத் தலைவலி, மூக்கு சம்பந்தமான தொந்தரவுகள், பார்வைக் கோளாறுகள், நரம்பு சம்பந்தமான நோய்கள், மனத்தடுமாற்றம் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள்.

Holcim
சங்ஸ்தா சீமெந்து

ஹொல்சிம் சங்ஸ்தா சுபிரி!

கொங்கிறீற்றுக்காகவே விசேடமாக தயாரிக்கப்பட்ட சீமெந்து




BS EN 197-1:2000
SLS 1253

உங்களுக்கும் உறுதி — நாட்டுக்கும் உறுதி




குறைந்த செலவில் - மிகுந்த இலாபம். லீசிங் சக்தியினால் ஏற்படும் முன்னேற்றம்

நாடு பூராவும், அனைவருக்கும் மகிழ்வுடன் உதவிடுவோம். உங்கள் அருகிலுள்ள கிளைகளுக்கு விரையுங்கள். பிரதான அலுவலகங்கள் - 0777 573799

மாத்தறை - 0777 688712 | பலாங்கொட - 0777 379891 | களுத்துறை - 0777 427281 | பொலொன்னறுவை - 0772 929576 | எம்பிலிப்பிட்டிய - 0773 296193 | வெலிமட - 0773 425113 | நீர்கொழும்பு - 0772 447401 | காலி - 0777 357044 | பண்டாரவளை - 0773 043874 | ஹொரண - 0777 776012 | யாழ்ப்பாணம் - 0773 464399 | ஹம்பன்தோட்ட - 0772 442226 | மட்டக்களப்பு - 0771 696995 | பாணந்துறை - 0773 740562

dimo TECHNOLOGY
வரையறுக்கப்பட்ட
டீசல் மற்றும் மோட்டார் பொறியியலாளர்
பொதுக் கம்பனி
அழையுங்கள் 0114 369 419

- குறைந்த எரிபொருள் செலவில் அதிக தூரம்
- சேவை அங்கத்தவர்கள் நாடு பூராகவும்
- நம்பிக்கை
- டிமோ பட்டா விலை ரூபா 860,000/=

BARTLEET FINANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org